# உதயன்

சுடர் 30 | கதிர் 127 | வள்ளுவர் ஆண்டு 2046 | பங்குனி 19, வியாழக்கிழமை 02.04.2015

கூ.வெ. 32 C
கு.வெ. 23 C
தெளிவான காலநிலை


இனவாதம் ஓயும்வரை மீட்சியில்லை

பக்கம் 16

# இராணுவத்தை காப்பாற்றவே உள்ளகப் பொறிமுறை

## ஐ.நா. அறிக்கையாளரிடம் தெளிவாக எடுத்துரைத்தனர் சிவில் சமூகத்தினர்

யாழ்ப்பாணம், ஏப். 02
உள்ளகப் பொறிமுறை கள் நீதியைப் பெற்றுத் தர முடியாதவை என்று தமிழ் மக்கள், எத்தனை தடவைதான் சர்வதேச சமூகத் துக்கு நிரூபிக்க வேண்டும்?– இவ்வாறு ஐ.நா. விசேட அறிக்கையாளரி டம் நேரில் கேள்வி எழுப்பிய தமிழ் சிவில் சமூகத்தினர், இராணுவத்தினரைப் பாதுகாப்பதே இலங்கை அரசின் உள்ளகப் பொறிமுறையின் நோக்கம் என்பதைத் தெளிவாக எடுத்துரைத்துள்ள னர்.
இலங்கைக்கு ஆறு நாள் பயணமாக வந்துள்ள உண்மை மற்றும் நீதிக் கான ஐ. நாவின் சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிரெய்ப், வடக்குக்கான பயணத்தை நேற்று மேற் கொண்டிருந்தார். அதன் போது கிளிநொச்சியில், மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தலைமையிலான சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்தார்.

பக்.24

## 325 துப்பாக்கி ரவைகளுடன் சிறுவன் கைது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 2
ரி–56 ரக துப்பாக்கிக்கான 325 ரவைகளுடன் சிறுவன் ஒருவனைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். பூநகரி, ஐட்சன் வீதியில் நேற்றுமுன்தினம் இரவு குறித்த சிறுவன் கைது செய்யப்பட்டுள்ளான்.
காட்டிலிருந்து ரவைகளுடன் வீடு நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் போதே அவனைக் கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். அவனிடமிருந்து மீட்கப்பட்ட ரவைகள் பாவிக்க முடியாதவாறு உக்கிப் பழுதடைந்துள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த சிறுவனைப் பொலிஸார் கிளிநொச்சி நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர். அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்றுகூறி சிறுவனை எச்சரித்த நீதி மன்று அவனை விடுதலை செய்தது.
குறித்த ரவைகளை அழிக்குமாறு விசேட அதிரடிப்படையினருக்கு நீதிமன்று உத்தரவிட்டது. (ற–4)

## '19' மீதான விசாரணை ஆரம்பம்

### இன்றும் தொடரும்

கொழும்பு, ஏப்.2
அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட 17 மனுக்கள் மற்றும் 5 இடையீட்டு மனுக்கள் மீதான விசாரணைகள் நேற்று பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவன் தலைமையில் சந்ரா ஏக்கநாயக்க, ப்ரியசாத் டெப் ஆகிய நீதியரசர்களைக் கொண்ட மூவரடங்கிய குழு முன்னிலையில் உயர்நீதிமன்றத்தில் இடம்பெற்றன.
சட்டத்தரணிகளின் சூடான வாதப்பிரதிவாதங்களுக்கு மத்தியில் நேற்று நாள் முழுவதும் இடம்பெற்ற மனுக்கள் மீதான விசாரணைகள் முடிவடையாததையடுத்து, விசாரணைகள் நாளை (இன்று) தொடரும் என அறிவித்து விசாரணைகளை ஒத்திவைத்தார் பிரதம நீதியரசர்.
அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தை சர்வஜன வாக்கெடுப்பின் ஊடாக நிறைவேற்றவேண்டும் என்று ஒரு தரப்பினரும், சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லத் தேவையில்லை.

பக்.24

## ஐ.நா. நிபுணர் - முதலமைச்சர் மூடிய அறைக்குள் சந்தித்தனர்

### பேசியவை தொடர்பில் எதுவும் கூற மறுப்பு

யாழ்ப்பாணம், ஏப். 2
ஐ.நா.வின் விசேட அறிக்கையாளருடன், வடக்கு முதலமைச்சர் நேற்று சந்திப்பு நடத்தினார். இந்தச் சந்திப்பு விடயங்கள் தொடர்பில், எதுவுமே மக்களுக்குத் தெரியப்படுத்த முடியாது என்று முதலமைச்சரும், ஐ.நா. விசேட அறிக்கையாளரும் மறுத்து விட்டனர்.
நல்லிணக்க செயல்முறைகளுக்கு உதவும் நோக்கில், ஆறு நாள் பயணமாக இலங்கை வந்துள்ள ஐ.நா.வின் உண்மையை ஊக்குவித்தல், நீதி, இழப்பீடுகள் மற்றும், மீள உருவாகாமல் உத்தரவாதப்படுத்தலுக்கான சிறப்பு அறிக்கையாளரான பப்லோ டி கிரெய்ப், வடக்கு மாகாணத்துக்கு

பக்.24

## வட பகுதிக் காணிப் பிரச்சினை: அமைச்சர் சபையில் விசேட உரை

கொழும்பு, ஏப்.2
வடக்கு காணி விவகாரம் தொடர்பில் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் அடுத்தவாரம் நாடாளுமன்றில் விசேட உரை யாற்றவுள்ளார்.
முன்னாள்

பக்.24

## விக்கி–ரணில் முறுகலை கவனிக்கிறது சர்வதேசம்

### யாழ்.வந்த ஜேர்மன் தூதுவர் கரிசனையுடன் கேட்டறிந்தார்

யாழ்ப்பாணம், ஏப். 2
வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கும், இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான முரண்பாடு தொடர்பில், சர்வதேச சமூகம் அக்கறையை வெளிப்படுத்தியுள்ளது. இந்த முரண்பாடு எதனால் ஏற்பட்டது என்பது தொடர்பிலும் ஆராய்வதிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ள இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர், யாழ்.மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகத்தை நேற்றுச் சந்தித்துப் பேசிய போது மேற்படி விடயங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தியுள்ளார்.
இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் மோர்காட், யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

பக்.24

## ஆள்கொணர்வு மனு விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 2
சரணடைந்து காணாமற் போனவர்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆள்கொணர்வு மனு மீதான விசாரணை அடுத்த மாதம் 12 ஆம் திகதி வரையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
போரின் இறுதிக் கட்டத்தில் இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமற் போனவர்கள் தொடர்பில், வவுனியா மேல் நீதிமன்றத்தில் ஆள்கொணர்வு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு, சம்பவம் இடம்பெற்ற பகுதிக்குரிய நீதிமன்றத்துக்கு கடந்த 2013 ஆம் ஆண்டு மாற்றப்பட்டது.
கடந்த சில தவணைகளாக வழக்கில், முறைப்பாட்டாளர்களும், சாட்சியாளர்களும் தமது தரப்பு விளக்கங்களை மன்றில் முன்வைத்து வருகின்றனர்.
நேற்று இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்

பக்.24

## ஐ.நாவின் பார்வை இலங்கையின் பக்கம்

### உதவிச் செயலாளர் நாயகமும் இவ்வாரம் வருகிறார்




இலங்கையின் தற்போதைய நிலைமையை அறிந்து கொள்வதற்காக ஐ.நா. நிபுணர்கள் பலர் குறுகிய காலத்துக்குள் இங்கு வந்துள்ளனர்.

கொழும்பு, ஏப். 2
இலங்கைக்கு இந்த வாரம் பயணம் மேற்கொள்ளவுள்ள, ஐ.நா உதவிச் செயலாளர் நாயகம் ஹோலியாங்சூ தனது பயணத்தின்போது வடக்கு மாகாணத்திற்கு வரவுள்ளார்.
தற்போது ஆறு நாள் பயணமாக, ஐ.நா.வின் விசேட அறிக்கையாளர் இலங்கைக்கு வந்துள்ள நிலையிலேயே, உதவிச் செயலாளர் நாயகமும் இலங்கைக்கு வரவுள்ளார்.
ஐ.நா உதவிச் செயலாளர் நாயகம்

பக்.24

## அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும்

### விக்கிரமபாகு கருணாரட்ண கோரிக்கை

கொழும்பு, ஏப். 2
"காரணமின்றி கைதுசெய்து வைத்திருக்கும் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலைசெய்ய வேண்டும். நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை மைத்திரி ஆட்சி இருக்கும்வரை நீடிக்க அனுமதிக்க முடியும்." – இவ்வாறு தெரிவித்தார் நவசமசமாஜக் கட்சியின் தலைவரும், தேசிய நிறைவேற்று சபை உறுப்பினருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன.
கொழும்பில் நேற்று நடைபெற்ற அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம் அமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே

பக்.24

## மாற்றங்களுக்கு வித்திடப்போகும் நாடாளுமன்ற தேர்தல்

ஒரு சர்வாதிகாரியைப் போன்று முழு நாட்டையும் தனது இரும்புக் கரம் கொண்டு ஆட்சி புரிந்த மஹிந்தவை தோற்கடிப்பது இலகுவான காரியமாக இருக்கவில்லை....

பக்கம் 15

## விழிப்பாக இருங்கள்

'ஆட்டிசம்' என்பது மூளையில் ஏற்படும் சில மாற்றங்களால் செயற்பாட்டு விருத்தியில் ஏற்படும் ஒரு பின்னடைவாகும். உலகளாவிய ரீதியில் இந்த நோய் நூறு பிள்ளைகளுக்கு ஒரு பிள்ளையில் ஏற்படுகின்றது.

பக்கம் 17

# அமைச்சு செயலாளர்களின் இடமாற்றங்கள் நிறுத்தம்

## ஆளுநரின் உத்தரவுக்கு அமைய

யாழ்ப்பாணம், ஏப். 2

வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றங்கள், நேற்றுத் திடீரென இடைநிறுத்தப்பட்டு பிற்போடப்பட்டுள்ளன. வடக்கு மாகாண ஆளுநரின் பணிப்புக்கு அமையவே இந்த இட்மாற்றங்கள் இடைநிறுத்தப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாண முதலமைச்சர், வழங்கப்பட்ட இடமாற்றங்களை ஏற்றுக் கொண்டு பணியாற்றுமாறு அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு நேற்று முன்தினம் தெரிவித்திருந்த நிலையில், வடக்கு மாகாண ஆளுநர் நேற்று இந்த இடமாற்றங்களை இடைநிறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாணத்தின் நான்கு அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தது. சுகாதார அமைச்சின் செயலாளராக இதுவரை காலமும் கடமையாற்றி வந்த இ.ரவீந்திரன், மாகாண கல்வி அமைச்சுக்கும், மாகாண கல்வி அமைச்சின் செயலாளராகவிருந்த எஸ்.சத்தியசீலன், கடற்றொழில் அமைச்சின் செயலாளராகவும், கடற்றொழில் அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன், உள்ளூராட்சி அமைச்சுக்கும், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய சி.திருவாகரன் சுகாதார அமைச்சின் செயலாளராகவும் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர்.

இந்த இடமாற்றங்கள் நேற்று முதல் நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், நேற்றுக் காலை குறித்த இடமாற்றங்கள் இடைநிறுத்தப்பட்டு பிற்போடப்பட்டுள்ளதாக, ஆளுநரின் செயலாளரால் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இடமாற்றம் பெற்ற செயலாளர்களை நேற்றுமுன்தினம் சந்தித்த வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வழங்கப்பட்ட இடமாற்றங்களை ஏற்றுக் கொண்டு பணியாற்றுமாறு தெரிவித்திருந்தார். இருப்பினும், செயலாளர்களால் வடக்கு மாகாண ஆளுநருக்குச் செய்யப்பட்ட மேன்முறையீட்டுக்கு அமையவே, ஆளுநர் பளிகக்கார தற்காலிகமாக இந்த இடமாற்றங்களை ஒத்திவைத்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவனை தொலைபேசியூடாக தொடர்பு கொள்ள முயற்சித்த போதும் அவர் பதிலளிக்கவில்லை. வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனிடம், மின்னஞ்சல் ஊடாக இந்த விடயம் தொடர்பில் கேட்டிருந்த போதும் அவரும், நேற்று முன்னிரவு வரையில் பதில் வழங்கவில்லை. (ற-5)

## முட்டாளாக்கியதால் மனைவி மீது வெட்டு

தென்மராட்சி, ஏப்.2

மனைவியைத் தாக்கிக் காயப்படுத்திய கணவன் பின்னர் கத்தியால் தனது கழுத்தை வெட்டியும் காயப் படுத்தினார். இந்தச் சம்பவம் நேற்று வரணி இடைக்குறிச்சியில் நடந்துள்ளது.

கால்முறிந்த நிலையில் மனைவியும் கழுத்தில் வெட்டுக் காயத்துடன் கணவனும் வரணி மருத்துவமனை அம்புலன்ஸ் மூலம் சாவகச்சேரி மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டனர். பின்னர் மனைவி மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். வரணி, இடைக்குறிஞ்சியைச்சேர்ந்த செல்லையா கமலேஸ்வரன் (வயது-46), அவரது மனைவியான கமலேஸ்வரன் விமலாதேவி (வயது-42)ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

ஏப்ரல் முதலாம் திகதியான நேற்றுக் காலை தன்னை முட்டாள் ஆக்கியதால் ஆத்திரமடைந்த கணவர் போதை ஏற்றிவிட்டு வந்து மனைவியைத் தாக்கியுள்ளார் என்று அவர்களுடன் வந்தவர்கள் தெரிவித்தனர். (ற-9)

## டெங்கு கட்டுப்பாட்டு செயற்பாடுகள் கொழும்புத்துறையில்

கொழும்புத்துறை, ஏப்.2

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தின் இறுதி நாளான நேற்று கொழும்புத்துறை பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பாசையூர், கொழும்புத்துறை, வளன்புரம், நெடுங்குளம் பகுதியில் டெங்கு கட்டுப்பாட்டு செயற்பாடுகள் யாழ். மாநகர சபை சுகாதாரப் பகுதியால் முன்னெடுக்கப்பட்டன.

இந்தப் பகுதியில் உள்ள 80இற்கும் மேற்பட்ட வீடுகள் சோதனைக் குட்படுத்தப்பட்டதுடன் டெங்கு பெருகுவதற்கு ஏதுவான சூழல் காணப்பட்ட 11 வீடுகளின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அத்துடன் பொது இடங்களில் சிரமதானப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன என்று கொழும்புத்துறை பொதுச் சுகாதார பரிசோதகர் க.நிசாந்தன் தெரிவித்தார்.

மேற்படி கிராம டெங்கு சூழல் பரிசோதனைகளில் சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள். பொலிஸ் உத்தியோகத்தர்கள், கிராமசேவையாளர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மாநகரசபை சுகாதாரப்பகுதி மேற்பார்வையாளர்கள், கிராம மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். டெங்கு தொடர்பான விழிப்பூட்டல்களும் தடுப்பு முறைகளும் மக்களுக்கு வழங்கப்பட்டன. (ற-135)



மத்திய சுகாதார அமைச்சர் எம்.ஐ.ஹசன் அலி வடக்கு மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளில் காணப்படும் பிரச்சினைகளை அறிந்து கொள்ளும் மூகமாக மன்னார் மாவட்டத்துக்கும் கடந்த திங்கட்கிழமை வந்திருந்தார். அவர் தலைமன்னார், பேசாலை வைத்திய சாலைகளுக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டார். அதன்போது வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் உனைஸ் பாரூக், முத்தலிக் பாரூக் மற்றும் வட மாகாண உறுப்பினர் எஸ்.பிறிமூஸ் சிராய்வா, சுகாதார திணைக்கள அதிகாரிகள் எனப் பலரும் இணைந்திருந்தனர். (ற)

## சமய நாள்களில் நடத்தும் செயலமர்வை நிறுத்துக

### இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.2

விடுமுறை நாள்களில் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நடத்தவுள்ளமைக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டித்துள்ளதோடு சமய நாள்களில் இடம்பெறவுள்ள அந்தச் செயலமர்வைநிறுத்துமாறும்கோரியுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் 3 நாள்களுக்கு அழகியல் பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வை நடத்தவுள்ளதாகத் தேசிய கல்வி நிறுவகம் அறிவித்துள்ளது. அந்த 3 நாள்களும் கிறிஸ்தவ மதத்தில் முக்கிய சமய வழிபாட்டு நாள்களாகும். தவிர விடுமுறை நாள்களில் நடத்துவதோடு அவர்களுக்கு விடுமுறை இல்லாதவாறு தொடர்ந்து நடத்தப்படவுள்ளது என்றும் கூறியுள்ளனர்.

"விடுமுறை நாள்களில் அதுவும் தொடர்ச்சியாக 3 நாள்கள் செயலமர்வு நடத்துவதை மாற்றுமாறு தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளரிடம் கோரியுள்ளோம். நிறுவகத்தின் இந்தச் செயற்பாடு ஒழுங்கு முறையானதல்ல."- என்றும் இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. (ற)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண முத்திரை

வவுனியா, ஏப்.2

வவுனியாவில் கடந்த டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பிரதேச செயலகங்களால் கிராம அலுவலர் ஊடாக வெள்ள நிவாரண முத்திரை வழங்கப்பட்டது.

வெள்ள இடரால் பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்தனர். சில கிராமங்களில் கூலித் தொழில் செய்யும் மக்கள் தொடர்ச்சியான மழை காரணமாக தொழில் வாய்ப்புக்கள் இல்லாத நிலையில் மிகவும் கடுமையான பாதிப்பிற்குள்ளாகியிருந்தனர். இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கே வெள்ள நிவாரணத்திற்கான உலர் உணவு முத்திரைகள் வழங்கப்பட்டன. ஆனாலும் அவற்றுக்குரிய உலர் உணவுப்பொருள்கள் இன்னமும் வழங்கப்படவில்லை என அப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ற)

## கொழும்பு- தலைமன்னார் ரயில் சேவை இன்று ஆரம்பமாகும்

மன்னார், ஏப்.2

இந்திய பிரதமர் மோடியால் தலைமன்னார் துறையிலிருந்து மடு வீதி வரைக்கும் ஆரம்பித்து வைக்கப்பட்ட ரயில் போக்குவரத்து இன்று முதல் கொழும்புக்கு நேரடி சேவையாக விஸ்தரிக்கப்பட்டுள் ளது.

கடந்த 14ஆம் திகதி இந்திய பிரதமர் தலைமன்னார் துறையிலிருந்து மடு வீதி வரைக்குமான ரயில் சேவையை ஆரம்பித்து வைத்தார். அந்தச் சேவை ஓரிரு தினங்கள் கழித்து தலைமன்னார் துறையிலிருந்து மதவாச்சி வரைக்கும் நீடிக்கப்பட்டது. இந்தச் சேவை இன்று முதல் கொழும்பு கோட்டை வரைக்கும் நீடிக்கப்பட்டுள்ளது.

தினமும் கொழும்பிலிருந்து இரண்டு சேவைகள் தலைமன்னார் துறைக்கும் தலைமன்னார் துறையிலிருந்து கொழும்புக்கு இரண்டு சேவைகளும் இடம்பெறும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

காலை 8.50 மணிக்கு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து முதலாவது புகையிரதம் மாலை 5.45 மணிக்கு தலைமன்னார் துறையை சென்றடையும். இரவு 7.40 மணிக்கு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து புறப்படும் இரண்டாவது புகையிரதம் மறுநாள் அதிகாலை 4.25 க்கு தலைமன்னார் துறை புகையிரத நிலையத்தைச் சென்றடையும்.

முற்பகல் 10.15 மணிக்கு தலைமன்னார் புகையிரத நிலையத்திலிருந்து புறப்படும் முதலாவது புகையிரதம் இரவு 7.17க்கு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தை சென்றடையும். இரவு 10.30 மணிக்கு செல்லும் புகையி ரதம் காலை 7 மணிக்கு கொழும்பு கோட்டையை சென்றடையும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

## சபாலிங்கம் அரங்கம் நாளை திறப்பு

யாழ்ப்பாணம், ஏப்.2

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர் இளைய தம்பி சபாலிங்கத்தின் ஞாபகார்த்தமாக இந்துக்கல்லூரியில் கட்டப்பட்ட சபாலிங்கம் அரங்கம், கேட்போர் கூடம் திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30மணியளவில் இந்துக்கல்லூரியின் அதிபர் திரு.ஐ.தயானந்தராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வின் பிரதமவிருந்தினராக யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் திரு.ச. பொன்னம்பலம் அவர்கள் கலந்து கொள்ளவுள்ளார். (ற)

## ரவிராஜ் கொலையில் கைதானவர் முன்னாள் தளபதியின் உதவியாளர்

ரவிராஜ் படுகொலை தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள மூன்று கடற்படையினரில் ஒருவர், முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவின் தனிப்பட்ட உதவியாளர்என்றுதெரியவந்துள்ளது.

ரவிராஜ் கொலையுடன் தொடர்புடைய மூன்று கடற்படையினர் கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் விசாரிக்கப்பட்டு வருவதாக, பொலிஸ் பேச்சாளர் தெரிவித்திருந்தார். எனினும், கைது செய்யப்பட்ட கடற்படையினரின் விவரங்களை அவர் வெளியிடவில்லை.

இந்த நிலையில், கொழும்பு ஆங்கில ஊடகம், கைது செய்யப்பட்டுள்ள கடற்படையினரின் விவரங்களை வெளியிட்டுள்ளது. லெப். கொமாண்டர் பிரசாத் ஹெற்றியாராச்சி, லெப்.கொமாண்டர் முனசிங்க மற்றும் பெற்றி ஒவ்விசன் செனிவிரத்ன ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. இவர்களில், லெப். கொமாண்டர் முனசிங்க மட்டும், தற்போதும், கடற்படையில் பணியாற்றி வருகின்றார். ஏனைய இரு வரும், ஓய்வு பெற்று விட்டனர். லெப்.கொமாண்டர் முனசிங்க, முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவின் தனிப்பட்ட உதவியாளராகப் பணியாற்றியவராவார்.

போரின் இறுதிக் கட்டத்தில் கடற்படைத் தளபதியாகப் பணியாற்றிய இவர், பின்னர் மஹிந்த ராஜபக்ஷ அரசால் ஜப்பானுக்கான தூதுவராக நியமிக்கப்பட்டிருந்தார். தற்போதைய அரசு இவரைத் திருப்பி அழைத்திருந்தது. (ற-5)

# வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக குகநாதன் பதவியேற்றார்

யாழ்ப்பாணம், ஏப். 02

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக, யாழ்.மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராக் கடமையாற்றிய பொ.குகநாதன் நேற்று முதல் நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை காலமும் உள்ளூராட்சி ஆணையாளராகப் பணியாற்றிய ம.ஜெகூ, வடக்கு மாகாண பேரவைச் செயலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். ஆயினும் அந்த இடமாற்றம் இன்னமும் நடைமுறைக்கு வரவில்லை.

வடக்கு மாகாண ஆணையாளர்கள், செயலாளர்கள், திணைக்களத் தலைவர்களை இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதில் செயலாளர்களுக்கான இடமாற்றம் திடீரென இரத்துச் செய்யப்பட்டது.

ஆனாலும், ஏனைய இடமாற்றங்கள் இரத்துச் செய்யப்படவில்லை. அதனடிப்படையில், யாழ்.மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராக இதுவரையில் கடமையாற்றிய பொ.குகநாதன், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக நேற்று முதல் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனது கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றுள்ளார்.

இதேவேளை, இதுவரை காலமும் உள்ளூராட்சி ஆணையாளராக கடமையாற்றிய ம.ஜெகூ, வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். பேரவைச் செயலகத்தின் செயலாளராக கடமையாற்றிய அ.சிவபாதசுந்தரம், வடமாகாண மனிதவள அபிவிருத்தி பயிற்சி பிரதிப் பிரதம செயலாளராக நிய மிக்கப்பட்டுள்ளார்.

இருப்பினும் இந்த இடமாற்றங்கள் இன்னமும் நடைமுறைக்கு வரவில்லை. (ற-5)

## கோயிலில் பெண்ணின் சங்கிலி அறுப்பு

கொழும்புத்துறை, ஏப். 2

ஈச்சமோட்டை ஞானவைரவர் ஆலயத்தில் பங்குனித் திங்கள் வழிபாட்டை மேற்கொள்ள வந்த பெண்ணின் 3 பவுண் சங்கிலி திருடர்களால் அறுக்கப்பட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை நண்பகல் பக்தர்கள் ஆலயத்துக்குள் வழிபட்டுக்கொண்டிருந்தபோது முன் முற்றத்தில் தனியாகக் கால் கழுவிக்கொண்டிருந்த பெண்ணிடமிருந்தே சங்கிலி அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்களில் ஒருவன் மோட்டார் சைக்கிளை இயங்குநிலையில் வீதியில் வைத்திருக்க மற்றவன் ஆலய வளவினுள் சென்று சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

நகையைப் பறிகொடுத்தவர் கூச்சலிட்டபோதும் நண்பகல் வேளையில் வீதியில் சன நடமாட்டம் இல்லாதமை திருடர்களுக்குச் சாதகமாக அமைந்துவிட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.(ற-135)

## பெண்ணைக் கர்ப்பமாக்கி தலைமறைவானவர் கைது

யாழ்ப்பாணம்,ஏப்.1

பெண்ணொருவரைக் கர்ப்பமாக்கிவிட்டு தலைமறைவான குடும்பஸ்தர் ஒருவர் இரண்டு வருடங்களின் பின்னர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் முற் படுத்தப்பட்டார்.

அவரை பிள்ளையையும் தாயையும் பராமரிப்பதற்காக தாபரிப்பு செலவாக மாதாந்தம் ஐயாயிரம் ரூபாவைசெலுத்துமாறும்தலைமறைவாக இருந்த காலப் பகுதிக்குரிய தாபரிப்பு செலவாக ஒரு லட்சத்து முப்பத்தையாயிரம் ரூபாவை செலுத்துமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது. அத்துடன் மறு தவணைக்கு முன்னார் பிறந்த பிள்ளையின் பிறப்பை பதிவு செய்து பிறப்புச் சான்றிதழுடன் நீதிமன்றுக்கு வருமாறு அவருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஏற்கனவே திருமணமாகி இருபிள்ளைகளின் தந்தையாகிய குறித்த நபர் 2012 ஆம் ஆண்டு காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் ஒரு பெண்ணுடன் தொடர்பை ஏற்படுத்தி அவரை கர்ப்பவதியாக்கியுள்ளார். அதன்பின்னர் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறி தலைமறைவாக கிளிநொச்சி பிரதேசத்தில் வசித்து வந்துள்ளார். ஏமாற்றப்பட்ட பெண் குழந்தை பிறந்தவுடன் யாழ்.நீதிவான் நீதிமன்றில் தாபரிப்பு வழக்கொன்றை தாக்கல் செய்திருந்தார். அதையடுத்து இவருக்கெதிராக நீதிமன்றால் பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

கடந்த 29 ஆம் திகதி கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மூலம் நேற்று முன்தினம் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். சந்தேக நபரை ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட்பிணையாளிகளின் பிணையில் செல்லுமாறும் வதிவிடத்தை உறுதிப்படுத்தி கிராம சேவையாளின் சான்றிதழை மன்றுக்குச் சமர்ப்பிக்குமாறும் நீதிவான் பெசிவகுமார் உத்தரவிட்டார். (ற-103)

## அனந்திக்கு எதிர்ப்புத் தெரிவித்து முல்லைத்தீவில் ஆர்ப்பாட்டம்



யாழ்ப்பாணம், ஏப்.2

வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரனுக்கு எதிராக நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் சிலரால் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டுள்ளது. முன்னால் விடுதலை புலிகளின் முக்கிய உறுப்பினர் எழிலனால் போரின்போது பிடிக்கப்பட்டவர்கள் தொடர்பில் எழிலனின் மனைவியும், வடக்கு மாகாணசபை உறுப்பினருமான அனந்தி பதில் கூற வேண்டும் என்று கோரியே இந்த ஆர்ப்பாட்டப் பேரணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காணாமல் போனவர்களுடைய உறவுகளின் ஆட்கொணர்வு மனு நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்து கொள்ளப்பட்டது. அதன் போதே காணாமல் போனவர்களின் உறவினர்கள் சிலரால் இந்த ஆர்ப்பாட்ட பேரணி திட்டமிட்டு மேற்கொள்ளப் பட்டது.

இந்தப் பேரணி முல்லைத்தீவு மாவட்ட நீதிமன் றத்தின் முன்னால் ஆரம்பமாகி முல்லைத்தீவு மாவட்ட செயலகம் வரை சென்றடைந்தது. ஆர்ப் பாட்ட பேரணியின் இறுதியில் காணாமல் போன வர்களுடைய உறவினர்களால்முல்லைத்தீவுமாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரனிடம் மனுவும் கையளிக்கப்பட்டது. (ற-21)

union assurance
Trust in your tomorrow, today.

# வாழ்த்துகின்றோம்

யூனியன் அஷ்யூரன்ஸ் வடக்கு-02 வலயத்தில் 2014 ஆம் ஆண்டு சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வாடிக்கையாளர் சேவையில் முன்னிலையில் திகழ்ந்து வெளிநாட்டு சுற்றுலா செல்லும் எமது உத்தியோகத்தர்களை வாழ்த்துகின்றோம்.




வாழ்த்துவோர்: union assurance முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள், யூனியன் அஷ்யூரன்ஸ் PLC,



உலக முட்டாள்கள் தினமான நேற்று மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு அருகில் ஒருவர் மாட்டு வண்டியில் 'இன்னும் சிகரட் புகைக்கும் உங்கள் சிலருக்கு இனிய பிறந்நாள் வாழ்த்துக்கள்' என்ற பதாகையைச் கட்டி வீதியால் வலம் வந்தார். (ற-10)

# இரணைமடு சிறுபோக செய்கை இம்முறை 11 ஆயிரம் ஏக்கரில்

யாழ்ப்பாணம், ஏப்.2

கிளிநொச்சி, இரணைமடுக் குளத்தின் கீழ் இந்த வருடம் 11 ஆயிரம் ஏக்கரில் நெல் பயிரிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

"முன்னர் 9 ஆயிரத்து 500 ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை செய்வதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது. குளத்தின் நீர் மட்டம் உயர்வாகக் காணப்படுவதால் மேலதிகமாக ஆயிரத்து 500 ஏக்கர் நிலத்தில் செய்கை பண்ணப்படவுள்ளது. இவ்வாறான தொரு நிலையில், இப்பகுதியில் செய்கை பண்ண அனுமதிக்கப்பட்ட நிலப்பரப்பிலேயே விவசாயிகள் நெற்பயிர்ச் செய்கையை மேற்



கொள்ள வேண்டும். மேலதிகமான நிலப்பரப்பில் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளின் சிறுபோக செய்கை உரிமம் இரத்துச் செய்யப்படும்."– என்று தெரிவித்தார்.

"மேலதிகமாக செய்பவர்களுக்கு கடந்த காலங்களில் செய்தது போல கருணையின் அடிப்படையில் நீர் வழங்கப்படமாட்டாது. மேலதிக செய்கையாளர்களுக்கு எதிராக பொலிஸாரின் உதவியுடன் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்."– என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(ற)

# சீரற்ற சேவையில் தென்மராட்சி வழித்தட இ.போ.ச. பஸ்கள்

## நடவடிக்கை எடுக்குமாறு பயணிகள் முதலமைச்சரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.2

இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களின் ஏனைய வழித் தடங்களை விடவும் யாழ்ப்பாணம்–கொடிகாமம் வழித்தட பஸ்கள் அடிக்கடி பழுதடைகின்றன. வேறு இடங்களுக்குச் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன. முகாமையாளரின் திட்டமிடப்படாத செயல்களால் பயணிகள் அவதிப்படுவது கடந்த ஆண்டில் இருந்து தொடர்கின்றது. அண்மையில் புதிய பஸ்களை கையளித்துள்ள வடக்கு முதலமைச்சர் சீரான போக்குவரத்து மேற்கொள்ள அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும். இந்த விடயம் குறித்தும் விளக்கம் கோர வேண்டும்.– இவ்வாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த வழித்தடத்தில் பயணம் மேற்கொள்ளும் சுமார் 60க்கும் மேற்பட்ட பயணிகள் கையொப்பமிட்டுமுறைப்பாட்டுக்கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர். அந்தக் கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"தினமும் காலையில் யாழ். நகருக்கு வருகைதரும் தாம் பிற்பகல், இரவு நேரங்களில் இரவு 8 மணி பஸ் அல்லது 8.30 மணி பஸ்ஸில் வீடு திரும்புகிறோம். தாம் தினமும் யாழ்.நகருக்கு வேலை நிமித்தம் வந்து செல்கிறோம். அதனால் பருவகாலச் சீட்டினைப் பயன்படுத்துகிறோம். இரவுவேலை நிறைவடைந்து பெரும்பாலும் இறுதியாகப் பயணிக்கும் குறித்த இரண்டு பஸ்களிலுமே தாம் வீடு திரும்ப முடிகிறது. ஆனால் இந்த இரவு நேரப் பஸ்கள் தான் அடிக்கடிப் பழுதடைகிறன. அல்லது வேறு இடங்களுக்குப் பயணிகளை ஏற்றிச் சென்றுவிடும். ஏதோ ஒரு வகையில் தென்மராட்சிக்கான பஸ்களை யாழ். டிப்போ முகாமையாளர் அடிக்கடி நிறுத்தி விடுவார். அல்லது எங்காவது அனுப்பி விட்டு பஸ் விடமறுத்து விடுவார். பின்னர் பஸ் இல்லை என்றுகூறிகொழும்பு, கண்டி, பொத்துவில் உள்ளிட்ட இடங்களுக்குச் செல்லும் பஸ்களில் செல்லுமாறு பயணிகளுக்குக் கூறிவிடுவார். ஆனால் அந்த பஸ்கள் தூர இடங்களுக்குப் பயணிக்கும் பஸ்கள். அதில் தூர இடத்துக்குச் செல்லும் பயணிகள் ஆசனங்களை நிரப்பிவிடுவதோடு சில வேளைகளில் அவர்களே நின்றும் பயணிக்க வேண்டியுள்ளது. இலகுவான பயணம் மேற்கொள்ள மேலதிகமாகப் பணம் செலுத்தி பதிவு செய்துள்ள நிலையில் தென்மராட்சிப் பகுதிக்கான பயணிகளும் அதில் பயணிப்பதால் தூர இடங்களுக்குச் செல்லும் பயணிகள் கடும் இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர்."– என்று அவர்கள் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

"பஸ் நடத்துநர்களும் அவர்களை ஒழுங்குபடுத்துவதில் இடையூறுகளை எதிர்கொள்கின்றனர். சில வேளைகளில் தென்மராட்சிப் பயணிகளுக்கும் நடத்துநர்களுக்கும் இடையில் முறுகல்நிலை ஏற்படுகிறது. தமக்கு அனுப்பப்படும் பஸ்கள் உரிய நேரத்துக்கு வருவதுமில்லை. வந்தால் குறித்த நேரத்துக்கு முன்னரே புறப்பட்டுச் சென்றுவிடும். கேட்டால் ஏதாவது சாக்குப்போக்குக் கூறி அனுப்பிவிடுகிறார்கள். தம்மைப் பிரயாணிகளாக அவர்கள் கருதுவதில்லை. எம்மை நாய்கள் மாதிரி நடத்துகிறார்கள். சிலவேளைகளில் முரண்பாடு தீவிரமாகிறது.

இந்தப் பிரச்சினை 2013 ஆம் ஆண்டிலிருந்து தொடர்கிறது. அது தொடர்பில் டிப்போ முகாமையாளருக்குப் பல தடவைகள் அறிவிக்கப்பட்டுவிட்டது. அதனை அவர் மறுக்க முடியாது. நாம் எங்கு வந்தும், யாருடனும் அது தொடர்பில் கதைக்கத் தயாராகவுள்ளோம். டிப்போ பிராந்திய முகாமையாளர் மட்டுமன்றி வடமாகாண முகாமையாளரும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சில வாரங்களுக்கு முன்னர் வடமாகாண முதலமைச்சர் பஸ்களை வழங்கியிருந்தார். ஆனால் அதில் ஒரு பஸ்ஸை என்றாலும் தென்மராட்சிக்கு அனுப்பி போக்குவரத்துப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கலாம். எனவே இந்தப் பிரச்சினைக்கு வடமாகாண முதலமைச்சர் உடன்நடவடிக்கை எடுக்க வேண்டும்."– என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பிராந்திய முகாமையாளர் குலபாலச் செல்வத்துடன் தொடர்பு கொள்ள முயன்ற போதும் தொடர்பு கிடைக்கவில்லை. (ற-4)

# தேவையற்ற அமைப்பொன்றை உருவாக்க முனைகிறார் பிரதமர்

## புனர்வாழ்வளிக்கப்பட்டோரின் பிரச்சினையை தீர்க்க வேறுவழிகள் உள்ளன என்று சரவணபவன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.2

மாற்றுத்திறனாளிகள், புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்களுக்கான ஒரு மத்திய நிலையம் அமைப்பது அவசியம் அற்றது. எமது மாகாணத்தில் இருக்கும் நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட்டாலே அவர்களின் பிரச்சினைகளுக்கு இலகுவாகத் தீர்வுகளை அடைய முடியும். எம்மிடம் அவர்களுக்கு தகுந்த சிகிச்சை அளிக்கக்கூடிய மருத்துவர்கள் இருக்கின்றார்கள். –இவ்வாறு தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

விசுவமடுவில் மாற்றுத்திறனாளிகள் செயற்கை உறுப்பு தொழில் நுட்ப நிறுவனத்தில் நேற்று இடம்பெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சிக்கு வந்திருந்த பிரதமர் ரணில் விக்கிரம சிங்க மாற்றுத் திறனாளிகள், புனர்வாழ்வளிக்கப்பட்டவர்களுக்கான மத்திய நிலையம் ஒன்றை கிளிநொச்சியில் ஆரம்பிக்க உள்ளதாகக் கூறியிருந்தார். ஆனால் அது தேவையற்ற ஒரு விடயம். வடமாகாணத்தில் இதற்கென பல நிறுவனங்கள் உள்ளன. ஆனால் அவற்றிற்கு நிதி மூலங்களே பிரச்சினை. அப்படிப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுவதால் இந்த மாற்றுத் திறனாளிகள், புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். எமது மாகாணத்தில் சிறந்த மருத்துவர்கள் உள்ளார்கள். அவர்களை இனம் கண்டு அதன் மூலமும் சில விடயங்களை மேற்கொள்ளலாம்."– என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார்.

"இவற்றையெல்லாம் விட்டு விட்டு பிரதமர் ஏன் இப்படி ஒரு முடிவு எடுத்துள்ளார் என்றுதான் புரியவில்லை. இவர் பிரிப்பதில் கைதேர்ந்தவர். மஹிந்த கூட இவரிடம் தான் பிரிப்பது எப்படி என்பதைக் கற்றுகொண்டார். இறுதியில் மஹிந்தவையும் பிரித்து விட்டார். 30 ஆண்டுகள் எவ்வளவு வல்லமையாக இருந்த எமது அமைப்பையே பிரித்த பிரதமருக்கு நாங்கள் எம்மாத்திரம். நாம் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். எங்களுக்கு என்று வடக்கு மாகாண சபை இருக்கின்றது, முதலமைச்சர் இருக்கின்றார். அதை விட வைத்தியத் துறையில் கைதேர்ந்த நிபுணர்கள் இருக்கின்றார்கள். இவை எல்லாவற்றையும் விட்டு விட்டு இவர் புதிய அமைப்பை உருவாக்குவது யோசிக்க வேண்டிய விடயம். மஹிந்த டக்ளஸை நம்பினார். ஆனால் இவர் நேரடியாகவே இங்கு வருகின்றார்."– என்றும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (ற-21)



நெடுங்கேணி ஒலுமடு வீதியில் குடமுருட்டிப் பாலத்தில் ஓட்டோ தடம் புரண்டு கவிழ்ந்ததில் 6 பேர் படுகாயம் அடைந்தனர். குறித்த பாலம் பாதுகாப்பு அற்ற நிலையில் காணப்படுகின்றது. இந்தநிலையில் பாடசாலை மாணவர்கள் சாரதி உட்பட 7 பேர் பயணம் செய்த ஓட்டோவே பாலத்தின் மீது தடம் புரண்டுள்ளது. காயமடைந்தவர்கள் நெடுங்கேணி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் மூவர் வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். (ற)

# பங்குனி உத்தரம்

யாழ்ப்பாணம், ஏப்.2

பங்குனி உத்தரத்தை முன்னிட்டு நாளை மு.ப. 10.30 மணிக்கு வண் வடகிழக்கு கலட்டி ஸ்ரீ விரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் விநாயகப் பெருமானுக்கும் முருகப்பெருமானுக்கும் அபிஷேகம் நடைபெறும். மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூஜையுடன் விநாயகப் பெருமான் வீதிவலம் வருவார். (ற)

# ஓட்டோஎரிப்பு; சந்தேகத்தில் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.2

குருநகர், திருநகர் பரராஜசிங்கம் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 4 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான ஓட்டோ தீயிட்டு கொளுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில், அதேபகுதியைச் சேர்ந்த இருவர் கடந்த செவ்வாய்க்கிழமை சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தனிப்பட்ட விரோ தம் காரணமாக இடம்பெற்றுள்ள தாக பொலிஸார் சந்தேகம் தெரி விக்கின்றனர்.

கடந்தசெவ்வாய்க்கிழமைஅதிகாலை, குறித்த பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோ இனந் தெரியாதோரால் பெற்றோல் ஊற்றி தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளது. (ற-101)

# ரணில்–விக்கி பனிப்போர் வேண்டாம்

## மனோ கணேசன் கோரிக்கை



கொழும்பு, ஏப் 2

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வடமாகாண முதல்வர் க. வி. விக்னேஸ்வரன் ஆகிய இருவருக்கும் இடையிலான முரண்பாடுகள் முடிவுக்கு வர வேண்டும். இந்நாட்டில் கடந்த காலத்தில் நடைபெற்ற ஆயுதப் போரை மனதில் கொண்டு இந்த பனிப்போர் நின்றிடவேண்டும். தேசிய நலன் கருதி இந்த கோரிக்கையை நான் இந்த இருவரையும் நோக்கிப் பகிரங்கமாக விடுக்கின்றேன்எனதேசியநிறைவேற்றுச் சபை உறுப்பினரும், ஜனநாயக மக்கள் முன்னணி தலைவருமான மனோ கணேசன் கோரியுள்ளார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடக மாநாடு நேற்றுப் புதன்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. இம்மாநாட்டில் சிங்கள, தமிழ் மொழிகளில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது:–

இந்த இருவரிடையேயும் மத்தியஸ்தம் செய்திட வேண்டும் என்ற கோரிக்கையை, யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் இருக்கின்ற சமூக நலன் விரும்பிகள் பலர் கடந்த சில நாள்களாக என்னிடம் விடுத்து வருகின்றார்கள். என்னால் மத்தியஸ்தம் செய்திட முடியாது. இத்தகைய விவகாரங்களில் மத்தியஸ்தம் செய்ய கிளம்பும் மத்தியஸ்தர் கடைசியில் கஷ்டத்தில் விழுவது இந்நாட்டு வரலாறு. இரவில் கிணற்றில் தவறி விழுவது சகஜம். ஆனால், நன்கு கண் தெரியும் நண்பகலில் கிணற்றில் விழ முடியுமா? எனவே கனவான்களாகிய இருவரையும் நோக்கி பகிரங்கமாக சிங்கள, தமிழ் மொழிகளில் இந்த கோரிக்கையை, எங்களது இந்த அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படுவோம் மேடையிலிருந்து விடுக்கின்றேன். நான் செய்யக்கூடியது இதுதான் என நம்புகிறேன்.

இந்த முரண்பாட்டின் ஆரம்பம் எனக்கு நன்கு தெரியும். அதுபற்றி இங்கே நான் பகிரங்கமாக கருத்து கூற விரும்பவில்லை. எதிர்காலத்தில் அவசியம் ஏற்படுமானால், அவ்வேளையில் அதுபற்றி நான் பேசுவேன். இன்று அதுபற்றி கூறினால் இந்த முரண்பாடு இன்னமும் முற்றி விடும். அது நாட்டுக்கு நல்லது அல்ல. நாட்டு நலனையும், எங்கள் இனத்து நலனையும் மனதில் கொண்டு செயற்படும் பொறுப்புள்ள கட்சியின் தலைவன் என்ற முறையில் நான் இந்த நிலைப்பாட்டை எடுத்துள்ளேன்.

பிரதமரின் சமீபத்தைய யாழ். பயணம் தொடர்பில் பிரதமர் அலுவலகம், முதல்வர் அலுவலகத்துக்கு அறிவித்தல் தந்திருந்ததா என்று எனக்குத் தெரியாது. அந்த அறிவித்தலை முதல்வர் அலுவலகம் ஏற்றுக்கொள்ளவில்லையா என்றும் எனக்கு தெரியாது. எனினும் நாட்டின் பிரதமர், வட மாகாணத்திற்குச் சென்றபோது அங்கே பிரதமரும், முதல்வரும் சந்தித்து மக்கள் நலன் தொடர் பில் உரையாட முடியாமல் போனது துரதிஷ்டவசமானது.

இந்த நாட்டின் தமிழ், முஸ்லிம், சிங்கள தேசிய ஐக்கியத்துக்கும், தமிழ், சிங்கள உறவுகளுக்கும் பிரதமர் விக்ரமசிங்க, முதல்வர் விக்னேஸ்வரன்ஆகியோர்இடையே புரிந்துணர்வு அவசியம். வடக்கிற்கும், தெற்கிற்கும் இடையில் நல்ல உறவு வேண்டும். நான் எப்போதும் இந்த இரண்டு முனைகளுக்கும் இடையில் பாலமாக இருந்து வந்துள்ளேன். அதனாலேயே இதை நான் கூறுகிறேன்.

விக்னேஸ்வரன், முதல்வர் பதவியைத் தேடி பெறவில்லை. பதவி தான் அவரை தேடி வந்தது. சில வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் நடைபெற்ற அவரது நீதித்துறை பணி ஓய்வு நிகழ்வினை அடுத்து, இனிமேல் அரசியல் பொறுப்பை ஏற்றிடுங்கள் என, அவர் ஓய்வு பெற்ற அதே தினமே முதன் முதலாக பகிரங்கமாக நான் அவருக்கு அழைப்பு விடுத்திருந்தேன். அவ்வேளையில் வடமாகாண சபை தேர்தல் அறிவிப்பு வெளியாகி இருக்கவில்லை. பின்னர் தேர்தல் அறிவிப்பு வெளியான பின், நானும், தமிழ் ஊடகத்துறை மற்றும் சமூகத்துறை நண்பர்கள் பலரும், கூடி பேசி திட்டமிட்டு, கொழும்பில் பணி ஓய்வில் இருந்த அவரை வலியுறுத்தி சம்மதிக்க வைத்து,யாழ்ப்பாணத்துக்குஅனுப்பி வைத்தோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர்களும் இதையே விரும்பி இருந்தார்கள். எனவே அவர் தனது முதல்வர் பணியைசிறப்பாகசெய்திடும்சூழலை உறுதி செய்திடுவது நமது கடமை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முதிர்ச்சியுள்ள ஒரு சிரேஷ்ட அரசியல்வாதி. வட மாகாணத்து மக்களின் ஆணையை பெற்றுள்ள முதல்வர் விக்னேஸ்வரன், வட இலங்கையில் மிகவும் பிரபலமான அரசியல் தலைவர். இந்நோக்கில் இருவருக்கும் இடையில் நல்லுறவு இருந்திட வேண்டுமென நான் விரும்புகிறேன்– என்றார். (த)

# சபாலிங்கம் அரங்கம் நாளை திறப்பு

யாழ்ப்பாணம், ஏப் 2

யாழ்.இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் இளையதம்பி சபாலிங்கம் ஞாபகார்த்தமாக இந்துக் கல்லூரியில் கட்டப்பட்ட சபாலிங்கம் அரங்கம் கேட்போர் கூடம் திறப்பு விழா நாளை (03.04.2015) வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் இந்துக்கல்லூரியின் அதிபர் ஐ.தயானந்தராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் ச.பொன்னம்பலம் கலந்து கொள்வார். (த)

# பன்றித்தலைச்சி அம்மனுக்கு புதிய அன்னதான மண்டபம்

சாவகச்சேரி, ஏப் 2

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட அன்னதான மடம் கடந்த 30ஆம் திகதி 11 மணிக்குப் பக்தி பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த கண்ணகாம்பிகா அன்னசத்திர மண்டபம் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபிணி வரதலிங்கத்தால் நாடா வெட்டித் திறந்து வைக்கப்பட்டது. இந்த மண்டபம் சுமார் 80 இலட்சம் ரூபா செலவில் 125 அடி நீளம் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர் திருமதி இ.அன்னலட்சுமி குடும்பத்தால் இந்த மண்டபம் நிர்மாணிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் ஆலய தர்மகர்த்தா சி.பஞ்சாட்சரம், ஓய்வுபெற்ற தபாலதிபர் தெய்வேந்திரம், விரிவுரையாளர் வேதநாதன், ஆலய பிரதம குரு தேவலோகேஸ்வரக்குருக் கள் உட்பட பலர் உரை நிகழ்த்தினர். நிகழ்வில் பெருமளவு பக்தர்கள் கலந்துகொண்டனர். இறுதியாக அன்னதானமும் வழங்கப்பட்டது.(த–131)

# மன்னார் நகர சபையை தொடர்ந்து புறக்கணிக்கின்றது மாகாண சபை

## நகர சபை உறுப்பினர் குற்றச்சாட்டு

மன்னார், ஏப் 2

வடமாகாணசபையினால்வழங்கப்படும் நிதி ஒதுக்கீட்டில் இருந்து மன்னார் நகர சபை தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருவதாக மன்னார் நகர சபையின் உறுப்பினர் இ.குமரேஸ், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

2015ஆம் ஆண்டுக்கான வட மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இருந்து, மன்னார் நகர சபை முற்று முழுதாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது. ஏனைய பிரதேசங்களுக்கும் ஏனைய சபைகளுக்கும் 10 மில்லியன் ரூபா வரை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், மன்னார் நகரத்தை பொறுத்தவரை ஒரு மில்லியன் ரூபா கூட வழங்கப்படவில்லை. இது வேதனையை ஏற்படுத்துகிறது.

இவ்விடயம் குறித்து மாகாண அமைச்சர்களும் மாகாண சபை உறுப்பினர்களும் தமது கவனத்தில் எடுக்கவில்லை என்பது மிகவும் வேதனையை ஏற்படுத்துகின்றது.

கடந்த காலங்களில் சோலர் மின் விளக்குகளைக்கொள்வனவுசெய்ய ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களுக்கும் ஒரு மில்லியன் ரூபா நிஒதுக்கப்பட்டது. அதிலும் மன்னார் நகர சபை புறக்கணிக்கப்பட்டுள்ளது.குறிப்பாகமன்னார்பாலத்தில் இருந்து தள்ளாடி வரையிலான பகுதிகளில் தெரு மின் விளக்குகள் இல்லாமையினால் மிக இருண்ட நிலையில் காணப்படுகின்றது.

தொடர்ச்சியாக எமது சபைக்கான அபிவிருத்தி பணிகளை மத்திய அரசும்மாகாண அரசும்புறக்கணித்து வருகின்றன. மத்திய அரசு, கடந்த நான்கு வருட காலப்பகுதியில் எமக்கு ஒதுக்கவேண்டிய எந்தவொரு நிதியையும் ஒதுக்காது செயற்பட்டது.

மன்னார் நகர சபைக்கு வழங்கப்பட வேண்டிய வாகனங்கள் கூட இதுவரை மத்திய அரசினால் வழங்கப்படவில்லை. யுனைப்ஸ் அமைப்பின் வாகனம் மூலமே பயணங்களை மேற்கொண்டு வந்தோம். குறித்த வாகனம் விபத்துக்கு உள்ளாகியமையால் அதனை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போதைய புதிய அரசினால் வழங்கப்பட்ட வாகன வழங்கல் நிகழ்வுகளில் கூட மன்னார் நகர சபை புறக்கணிக்கப்பட்டுள்ளது என மேலும் தெரிவித்தார். (த–56)

# தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைவதற்கு முடிவு

கொழும்பு, ஏப் 2

மலையகம் மற்றும் தெற்கு தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படத் தீர்மானித்துள்ளன.

வடக்கு கிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதி தமிழ் வாக்காளர்களை இலக்கு வைத்து இந்தக் கூட்டணி அமைக்கப்படவுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக் கில் செயற்படுவதனைப் போன்றே நாட்டின் ஏனைய பகுதிகளில் இந்தக் கூட்டணி செயற்படத் திட்டமிட்டுள்ளது. தெற்குமற்றும்மலையகஅரசியல்வாதிகளுக்கு இடையில் இந்தக் கூட்டணி அமைப்பது குறித்த ஆரம்ப கட்டப்பேச்சுக்கள்பூர்த்தியாகியுள்ளன. வடக்கு–கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதனைப் போன்று நாட்டின் ஏனைய பகுதிகளில் வாக்குகளைப் பெற்றுக்கொண்டு கூடுதல் அரசியல் செல்வாக்கினைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்கப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து நாடாளுமன்றில் ஆட்சி அமைக்கும் அரசாங்கத்துடன் பேரம் பேசும் சக்தியாக மாறுவதே இந்த புதிய கூட்டணியின் பிரதான நோக்கமாக அமைந்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது. (த)

# கூட்டமைப்பில் பிளவை ஏற்படுத்தச் சிலர் முயற்சி

## மாவை சேனாதிராசா சாடல்

கிளிநொச்சி, ஏப் 2

தங்களுடைய வெள்ளைச் சேட்டுக்களில்புளுதிகூடப்படியாமல்இருந்தவர்கள், இந்த 50 அண்டு கால போராட்டத்தின் வரலாற்றிலே வராதவர்கள் இன்று எங்கள் கட்சியிலும் சரி இந்த மக்களிடத்திலும் சரி பிளவை உண்டாக்கி விடுவதற்கு முயற்சிக்கின்றார்கள் எனத் தமிழரசு கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

கிளிநொச்சி ஜெயபுரம் அ.த.க பாடசாலையில்இடம்பெற்றநாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவனின் நிதிப் பங்கீட்டில் இருந்து பாடசாலை மாணவர்களுக்கான உதவி வழங்கும் திட்டத்தில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இந்த நாட்டினுடைய பிரதமரும் வடக்கு மாகாணத்தில் இருக்கின்ற முதலமைச்சருக்கும் இடையிலே உள்ள முரண்பாடுகள் தவிர்க்கப்பட வேண்டும். அதற்கு ஒரு வழி ஏற்படவேண்டும். என்று நான் பிரதமரிடம் தொலைபேசியில் உரையாடும் போது கேட்டுகொண்டேன். அதை அவர் ஏற்றுக்கொண்டார். முதலமைச்சருக்கு அழைப்பிதழ் அனுப்பப்பட்டிருக்கின்றது. அவர் யாழ்ப்பாணம் கச்சேரிக்கு வந்து பேசினால் நானும் பேசுவேன் என்று எனக்குப் பிரதமர் பதில் சொன்னார். எங்களுடைய தலைமையுடனும் நான் பேசினேன் இங்கு அப்படி ஒரு சிக்கல் இருக்கின்றது என்று.

வளலாயில் மக்களுக்கான காணி கையளிப்பிலே ஜனாதிபதி, பிரதமர், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஆகியோர் வந்திருந்தபோது நாங்கள் அதிலே கலந்துகொண்டோம். எங்களுடைய முதல்வரும் கலந்து கொண்டார். மாலை அணிவித்து வரவேற்றார்கள். ஆனால் அதற்கிடையில் சிறு சிறு காரணங்கள்காட்டிமுரண்பாடுகளைவளர்த்து கொள்வது இந்தச் சந்தர்ப்பத்தில் பொருத்தமானது அல்ல. நாஙங்கள் கூடி தீர்மானிக்கவேண்டும். நாங்கள் தீர்மானம் எடுத்து இந்த மக்களை வாக்களிக்கச் சொன்னது எல்லாம் கூடி தீர்மானித்து தான். நாங்கள் சந்தர்ப்பவாதிகளாக மாறி விடகூடாது. இந்த மக்களுடைய நலன்களை அடிப்படையாக கொண்டு எங்களுடைய செயற்பாடுகள் அமையவேண்டும். இந்த மக்களிடத்தில் நாங்கள் நம்பிக்கை கொண்டு ஒரு ஆட்சியை, ஒரு கொடுங்கோல் அரசை மாற்றியதற்குப் பிறகு நல்லெண்ணத்தை கொண்டிருக்கின்ற ஒரு அரசை நாங்கள் கைவிட்டு விட்டோம் என்று சர்வதேசமும் மக்களும் எங்களை குறை காணுவதற்கு இடமளிக்க கூடாது. என்றும். உங்களுக்குத் தெரியும் நாங்கள் எத்தனை ஆண்டுகள் போராடிய வர்கள், சிறைகளிலே வாடியவர்கள். 50 ஆண்டுகாலமாக இந்த நாட்டிலே எந்தப் போராட்டத்தையும் நாங்கள் தவிர்த்ததில்லை– என்றார். (த–21)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** உங்கள் மீது மற்றவர்கள் கோபப்படமுடியாத அளவு நடந்து கொள்வீர்கள். பணவரவு இருக்கும். பயணங்கள் செல்ல வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும்.

**இடபம்:** கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். வீண்பழி நீங்கும். சில்லறை சண்டைகள் சரியாகும். தொழில் வியாபாரம் சற்று மந்தமாகக் காணப்பட்டாலும் பணம் வருவது தடைப்படாது.

**மிதுனம்:** கூட்டாளிகள் தொடர்பான விடயங்களில் சாதகமான பயன் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வேலைப்பளு இருந்தாலும் சக ஊழியர்கள் ஒத்துழைப்பால் அது குறையும்.

**கடகம்:** குடும்பத்தில் இருந்த மனவருத்தங்கள் நீங்கும். பிள்ளைக்ள் எதிர்காலம் பற்றி சிந்தனை மேலோங்கும். உறவினர்களுடன் இருந்த கருத்து வேற்றுமை நீங்கும்.

**சிங்கம்:** அயல் வீட்டாருடன் இருந்து வந்த மனவருத்தம் நீங்கும். சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள். பணவரவு திருப்தியைத் தரும். பயணம் செல்ல நேரிடலாம். காரிய அனுகூலம் உண்டாகும்.

**கன்னி:** மற்றவர்களுக்கு உதவ முன்வருவீர்கள். வாழ்க்கைதுணை மூலம் லாபம் கிடைக்க செய்வார். மனதில் இருந்த சஞ்சலம் நீங்கி மகிழ்ச்சியும், நிம்மதியும் கிடைக்கப் பெறுவீர்கள்.

**துலாம்:** உங்கள் மீது குற்றம் சொல்ல நினைப்பவர்கள் அதனை விட்டுவிடுவார்கள். தொழில் வியாபாரத்தில் சுமாரான முன்னேற்றம் காணப்படும். எதிர்பார்த்த கடன் வசதி கிடைப்பதில் சாதகமான பயன் இருக்கும்.

**விருச்சிகம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் சற்று கவனமாகப் பணிகளைக் கவனிப்பது நல்லது. குடும்பத்தில் நிம்மதியும், சுகமும் உண்டாகும். மனவருத்தத்தில் விட்டுச் சென்ற உறவினர்கள் மீண்டும் வந்து சேருவார்கள்.

**தனுசு:** பிள்ளைகள், கல்வியில் மேன்மை அடைய தீவிரமாகச் செயற்படுவீர்கள். மறைமுகமாக உங்களைக் குறை சொல்லியவர்கள் தங்கள் தவறை உணர்வார்கள். காரிய அனுகூலத்தால் மனமகிழ்ச்சி ஏற்படும்.

**மகரம்:** உங்களது நீண்ட நாள் விருப்பங்கள் நிறைவேறும். மற்றவர்களுக்கு ஆலோசனை சொல்லும் போது கவனம் தேவை. எதிர்பாலினரால் இலாபம் கிடைக்கும்.

**கும்பம்:** வீட்டை விட்டு வெளியில் தங்க நேரிடலாம். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் கோபத்தைக் குறைத்து வாடிக்கையாளர்களை அனுசரித்துச் செல்வதன் மூலம் முன்னேற்றம் காண முடியும்.

**மீனம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். பதவி உயர்வு நிலுவை தொகை வருவதில் தாமதம் ஏற்படும். குடும்பத்தில் ஏதாவது பிரச்சினை தலைதூக்கும்.

---

கோபத்தில் சோற்று தட்டை எறியும் போது எதிரில் இருக்கும் மனைவியின் அன்பை கூட நினைக்க வேண்டாம்.

ஏழையின் பசியை உணர்ந்தாலே போதும்.

Anbe Arun

# சிக்கலில் கொம்பன்

கார்த்திக் நடிப்பில் உருவான கொம்பன் படம் சர்சையைக் சிக்கியுள்ளது. சாதிய அடிப்படையில் இந்தப் படத்துக்கான எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இதனால் படத்தை வெளியிட வேண்டாம் என்று கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

புதிய தமிழகம் கட்சித் தலைவர் கிருஷ்ணசாமி மற்றும் சில அமைப்புக்கள் இணைந்து இந்த வழக்கை தாக்கல் செய்தன. வழக்கை விசாரித்த நீதிமன்றம், திரைப்படத்தைப் பார்த்த பின்னரே தீர்ப்பு வழங்க முடியும் என்று தெரிவித்தன. அத்துடன் கிருஷ்ண சாமி யையும் திரைப்படம் பார்ப்பதற்கு அழைத்திருந்தது.

இதற்காக மதுரையிலிருந்து இரு நீதிவான்கள் விமானம் மூலம் சென்னை வந்துள்ளார்கள். நுங்கம்பாக்கம் போர் பிரேம்ஸ் அரங்கில் படம் 7 மணிக்கே திரையிடப்பட்டது. அப்போது கிருஷ்ணசாமி வரவில்லை. ஒரு மணிநேரம் கழித்துதான் வந்தார். இதுகுறித்து படத்தின் தயாரிப்பாளர் ஞானவேல் ராஜா இன்று செய்தியாளர்களிடம் கூறுகையில்; ஒரு மணி நேரம் தாமதமாக வந்த கிருஷ்ணசாமி, மீண்டும் முதலிலிருந்துதான் படம் பார்ப்பேன் என அடம் பிடித்தார். அதுமட்டுமல்ல, இந்தக் காட்சி என்ன? அதன் ஸ்கிரிப்டைக் கொடுங்கள் என்றெல்லாம் கேட்டு தொந்தரவு செய்தார். இதனால் படம் பார்க்க வந்த நீதிவான்கள் கோபமடைந்து படம் பார்க்காமலேயே சென்றனர்-- என்றார்.

இந்த நிலையில் மீண்டும் நீதிவான்கள் படம் பார்க்கப் போவதாகவும், அவர்களுடன் கிருஷ்ணசாமி உள்ளிட்டோரும் படம் பார்ப்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை கொம்பன் படத்துக்கு ஆதரவாக திரையுலகினர் குரல் கொடுத்துள்ளனர். தனுஷ், திரைப்படத்தை ஆதரிப்பதாகத் தெரிவித் துள்ளார். திட்டமிட்டபடி நாளை திரைப்படம் வெளியாகும் என்று தயாரிப்பாளர் தெரிவித்துள்ளார்.





# திருநங்கையை திருமணம் செய்யும் குள்ளர்

டென்மார்க்கைச் சேர்ந்த குள்ள மனிதர் ஒருவர் 6 அடி உயர மான திருநங்கையொருவரை காதலித்து திருமணம் செய்ய வுள்ளார்.


டென்மார்க்கை சேர்ந்த 52 வய தான அன்டன் கிராப்ட் உலகின் சக்தி வாய்ந்த 5 மனிதர்களில் ஒருவராவார். ஆண் அழகனான இவர், பளுதூக்கும் போட்டியில் 4 முறை சாதனை படைத்துள் ளார். இவரது உயரம் 4 அடி 4 அங்குலம். ஆனால் தனது உடல் எடையை விட 4 மடங்கு அதிக மான எடையை தூக்கி சாதனை படைத்துள்ளார்.

புளோரிடா கடற்கரையில் இளைப்பாற இவர் சென்றுள்ளார். அங்கு ஆணாக பிறந்து திருநங்கையாக மாறிய சைனா பெல்லைச் சந்தித் தார். கடந்த சில மாதங்களாக சைனா பெல்லை காதலித்துள்ளார். இந்நிலையில் அவர்கள் இருவரும் திருமணம் செய்து கொள்ள தீர்மானித்துள்ளனர். இது குறித்து அன்டன் கிராப்ட் கூறுகையில்; திருநங்கையுடனான எனது வாழ்க்கை நன்றாக உள்ளது. ஏனெனில் அவர் ஆணாகப் பிறந்த வர். அவர் முடிந்தவரை பெண்ணாக செயற்படுகிறார். ஆனால் பெரும்பாலான பெண்கள் தாங்களை பெண்ணாகக் காட்டி கொள்ள மிகுந்த நேரத்தை செலவிடுகிறார்கள் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## ரிலாக்ஸா வாசியுங்க...

ரயில் பயணி ஒருவர் பிளாட் போமில் தேநீர் விற்றுக் கொண்டு போனவரைக் கூப்பிட்டு தேநீர் வாங்கிக் கொண்டு, வேண்டு மென்றே காசு கொடுக்காமல் தாமதப்படுத்தினார்.

ரயில் அதற்குள் புறப்பட்டுவிட் டது. தேநீர் விற்கும் பையனுக்குக் காசும்கிடைக்கவில்லை.பிளாஸ்ரிக் தேநீர் குவளையின் நஷ்டம். பக் கத்திலிருந்த அவனது நண்பன் அவனைச்சமாதானம் செய் தான். 'கவலைப்படாதே..! கடவுள் அந்த ஆளைக்கவனித்துக்கொள்வார்..!' தேநீர் விற்ற பையன் சொன் னான். 'கடவுளுக்கு எதற்குச் சிரமம். என் 'தேநீ'ரே கவனித்துக் கொள்ளும்...!'



## அப்பிளின் அடுத்த தயாரிப்பு

அப்பிள் நிறுவனம் அடுத்த தலைமுறை கணினி வடிவமைப்பில் தொடுதிரை விசைப்பலகை மற்றும் மவுசை கொண்டு வருகிறது.

தெளிவான உறுதியான கண்ணாடி மூலம் இந்த தொடுதிரை இயங்குகிறது. இந்த தொடு திரைக்குக் கீழே உள்ள பரப்பு தெளிவாகத் தெரியும்.



## விரைவில் அப்பிளின் தேடுபொறி

அப்பிள் மற்றும் கூகுள் நிறுவனம் ஆகியன தம்மிடையே மிகுந்த போட்டியைக் கொண்டு முன்னேறி வருகின்றன.

இதற்கு சான்றாக அப்பிள் நிறுவனம் 2007 ஆம் ஆண்டு ஜுன் மாதம் iPhonedn முதன் முறையாக அறிமுகம் செய்திருந்தது.

இதற்கு போட்டியாக 2008 செப்ரெம்பர் மாதம் அன்ரோயிட்டைஅறிமுகம் செய்திருந்தது. இதிலிருந்தே ஸ்மார்ட் கைபேசி வியாபாரத்தில் இரு நிறுவனங்களும் காலடி பதித்தன.




தற்போது உலகின் முன்னணி தேடுபொறியாக திகழும் கூகுளிற்குபதிலாக Apple Search எனும் தேடுபொறியை அறிமுகம் செய்யவுள்ளதாகதகவல்கள்வெளியாகியுள்ளன. கணினிகள் மற்றும் மொபைல் சாதனங்களில் செயற்படக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுவரும் இந்த தேடுபொறியினை ஒரே நேரத்தில் பல மில்லியன் கணக்கான பயனர்கள் பயன்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


## Whats App இல் குரல்வழி அழைப்பு வசதி

நீண்ட காலமாக WhatsApp–இல் குரல்வழி அழைப்பு வசதி தரப்படவுள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளன.

எனினும் உத்தி யோக பூர்வமான அறிவிப்புக் கள் எதுவும் வெளியாகியிருக்கவில்லை.

இந்த நிலையில் தற்போது WhatsApp இல் குரல்வழி அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான வசதி சில பயனர்களின் அப்பிளிக்கேஷன்களில் தரப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதன்படி பயனர் ஒருவர் குறித்த வசதியினை உடைய WhatsAppd[ ஸ்கிரீன் ஷாட்டினை வெளியிட்டிருக்கின்றார்.

இந்த ஸ்கிரீன் ஷொட்டின்படி முன்னைய WhatsApp இனை விடவும் வித்தியாசமான பயனர் இடைமுகத்தை கொண்டமையும், Calls, Texts மற்றும் Contacts டேப்கள் உள்ளடக்கப்பட்டுள்ளமையும் தெளிவாகத் தெரிகின்றது.









# சித்திரை மாத ராசி பலன்கள்



## இடபம்



தொடங்கியதை முடிக்கும்வரை அதே சிந்தனையுடன் இருப்பவர்களே! வாதாடும் திறமையால் சிக்கல்களுக்கெல்லாம் தீர்வு காணும் திறமையுள்ளவர்களே! பயணங்கள் அதிகமாகும். தவிர்க்க முடி யாத செலவினங்களும் இருக்கும். நீண்ட நாள்களா கச் செல்ல நினைத்திருந்த புண்ணியத் தலங்களுக்குச் சென்று வருவீர்கள். பிள்ளைகளின் பொறுப்பற்ற போக்கை நினைத்துக் கோபப் படுவீர்கள்.
மனதிலே இருந்த அச்ச உணர்வு நீங்கும். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் சமாளித்துக் கொள்ளலாம் என்ற தைரியம் பிறக்கும். சாமர்த்தியமாக உருட்டிப் புரட்டி பணப் பற்றாக்குறையைச் சமாளிப்பீர்கள். எவ்வளவு பணம் வந் தாலும் சேமிக்க முடியவில் லையே என்ற ஆதங்கமும் இருக்கத்தான் செய்யும். குடும் பத்தில் உள்ளவர்கள் உங்களு டைய ஆலோசனையை ஏற் றுக் கொள்வார்கள். செவ் வாய் சாதகமாக இல்லாததால் முன்கோபம் அதிகமா கும். எதிர்மறை எண்ணங்களும் ஏற்படும். நெருங்கிப் பழகிய நண்பரின் நட்பை இழக்க வேண்டி வரும். இரத்த அழுத்தம் அதிகரிக்கும். உணவில் கீரை வகைகளை அதிகம் சேர்த்துக் கொள்ளுங்கள். வெளிநாட்டில், வெளிமாநிலத்தில் இருப்பவர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். வேற்று இனத்தைச் சேர்ந்தவர்களால் பயனடைவீர்கள். தோற்றப்பொலிவு கூடும். சவால்களில் வெற்றி பெறுவீர்கள். திருமணம் கூடி வரும். புதிதாக வாகனம் வாங்குவீர்கள். வீட்டை விரிவுபடுத்திக் கட்டுவது நல்ல விதத்தில் முடியும்.

**மாணவர்கள்**
நுழைவுத் தேர்வுக்கு உங் களைத் தயார்படுத்திக் கொள்ளுங்கள். உறவினர் களைச் சந்திப்பீர்கள். நண் பர்களுடன் சுற்றுலா சென்று வருவீர்கள். விளையாட் டில் வெற்றி பெறுவீர்கள்.

**பெண்கள்**
வேலை கிடைக்கும். திரு மணம் கூடி வரும். நகை வாங்குவீர்கள்.

**கலைத்துறையினர்**
மூத்த கலைஞர்கள் உத வியாக இருப்பார்கள். பரிசு, பாராட்டுகள் உண்டு. சுபச் செலவுகள், திடீர் பயணங் களால் சேமிப்புகள் கரையும் மாதமிது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | | 9 | 2 | | | |
| 6 | 9 | 4 | 1 | 3 | | | 5 | 8 |
| | | | 8 | | 4 | 9 | 3 | 7 |
| 4 | | 2 | | | | | | |
| | | 3 | | | | 8 | | |
| | | | | | | 5 | | 1 |
| 7 | 4 | 6 | 2 | | 8 | | | |
| 5 | 3 | | | 4 | 9 | 6 | 8 | 2 |
| | | | 3 | 5 | | | 7 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 1 | 9 | 4 | 7 | 5 | 2 | 6 | 8 |
| 6 | 2 | 7 | 9 | 8 | 3 | 5 | 1 | 4 |
| 4 | 8 | 5 | 6 | 1 | 2 | 7 | 3 | 9 |
| 2 | 4 | 8 | 1 | 6 | 9 | 3 | 5 | 7 |
| 5 | 3 | 6 | 2 | 4 | 7 | 9 | 8 | 1 |
| 9 | 7 | 1 | 3 | 5 | 8 | 6 | 4 | 2 |
| 8 | 6 | 3 | 7 | 2 | 1 | 4 | 9 | 5 |
| 7 | 5 | 4 | 8 | 9 | 6 | 1 | 2 | 3 |
| 1 | 9 | 2 | 5 | 3 | 4 | 8 | 7 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதி கள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையி லும் நிரலிலும் 1-9 வரையான எண் கள். இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண் டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்



| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 600 | 800 | 700 | 700 | 500 |
| நண்டு | 400 | 300 | 450 | 300 | 300 | 400 |
| கணவாய் | 650 | 550 | 650 | 500 | 600 | - |
| பாரை | 600 | 450 | 600 | 500 | 450 | 350 |
| சுறா | 600 | 500 | 600 | 600 | 600 | 400 |
| சீலா | 450 | 400 | 500 | 400 | 350 | 170 |
| விளை | 500 | 400 | 550 | 450 | 400 | 300 |
| முரல் | 400 | 300 | 500 | 350 | 300 | 350 |
| கும்பிளா | 550 | 250 | 550 | 400 | 350 | 250 |
| சிறாக்கள் | 400 | 600 | 500 | 450 | - | - |
| ஒரா | 350 | 350 | 400 | 400 | 250 | - |
| திரளி | 300 | 250 | 400 | 250 | 200 | - |
| நகரை | 300 | 250 | 400 | 300 | - | - |
| ஆடை | 180 | 150 | 200 | 100 | 150 | 50 |
| ஒட்டி | 230 | 150 | 250 | 250 | 200 | - |
| திருக்கை | 180 | 300 | 200 | 250 | 200 | 178 |
| பாலை | 300 | 250 | 350 | 450 | 300 | - |
| வாழை | 200 | 150 | 250 | 300 | 200 | 200 |
| கொய் | 80 | 150 | 80 | 100 | 100 | - |
| மதனம் | 300 | 200 | 350 | 250 | 300 | 130 |

# மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்



| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 40 | 30 | 40 | 20 | 60 | 40–50 | 30 |
| கத்தரி | 25 | 30 | 20–30 | 30 | 20–30 | 40–70 | 60–80 | 40 |
| கரட் | 100 | 110 | 100–120 | 80 | 80–100 | 120 | 100–120 | 70 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 30–40 | 40–60 | 60–80 | 30 |
| பயிற்றை | 50 | 40 | 40 | 20 | 40–50 | 50 | 80–100 | 20–50 |
| பாகல் | 80 | 100 | 60–80 | 80 | 80–70 | 70 | 60–80 | 70–100 |
| கருணைக்கிழங்கு | 80 | 60 | 50 | 60 | 100–120 | 50–70 | 80–90 | 40 |
| பெ.வெங்காயம் | 90 | 80–90 | 90 | 80 | 80–90 | 70–100 | 80–100 | 70–90 |
| சி.வெங்காயம் | 50 | 60–90 | 40–60 | 70 | 50–80 | 40–80 | 60–80 | 40–110 |
| பூசணி | 50 | 50 | 40 | 30 | 40–30 | 80 | 80–100 | 80 |
| தக்காளி | 40 | 50 | 40 | 40 | 20–30 | 60 | 60–80 | 60 |
| வாழைக்காய் | 50 | 50 | 40 | 50 | 60–70 | 60 | 30–35 | 40 |
| கீரை | 20 | 20 | 25–30 | 10 | 20–30 | 30 | 10–15 | 10 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 20 | 40 | 20 | 20 |
| பச்சை மிளகாய் | 40 | 50 | 40 | 50 | 40–30 | 80 | 80 | 70 |
| புடோல் | 40 | 40 | 40 | 40 | 30–40 | 40–80 | 60–80 | 30 |
| கோவா | 40 | 40 | 30–40 | 40 | 20–30 | 40–70 | 60 | 60 |
| வெண்டி | 50 | 40 | 40 | 40 | 40–50 | 30–70 | 40–60 | 50 |
| போஞ்சி | 100 | 100 | 100 | 100 | 80 | 80 | 80–100 | 40–70 |
| லீக்ஸ் | 120 | 150 | 100–140 | 140 | 130–140 | 130–180 | 100–120 | 110–180 |
| தேங்காய் | 60 | 20–50 | 60 | 50 | 40–50 | 50–80 | 35–40 | 40–70 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 90 | 80 | 80–90 | 80 | 80 | 70–100 |
| தேசிக்காய் | 80 | 80 | 60 | 30 | 60–70 | 80 | 40–60 | 70 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30 | 20 | 15–20 | 20 |
| கறிமிளகாய் | 100 | 100 | 100 | 100 | 70–80 | 120–140 | 120–140 | 90–130 |
| இராசவள்ளி | 120 | 90 | 120 | 80 | 100–120 | 90 | 140–180 | 100 |
| பனங்கிழங்கு | – | 04 | – | 02 | 03 | 05 | 03 | 03 |

# பிறருக்கு தம்மை அர்ப்பணிப்போர் இறந்து வாழ்வது உறுதி

**புனித வியாழன். (02.04.15 )**

கிறிஸ்தவர்களின் விசுவாசப் பயணத்தில் இன்றைய நாள் மிகவும் முக்கியமானதும் பரிசுத்தம் நிறைந்ததுமான தினமாகும். இயேசு தாம் பாடுபட்டு மனுக்குலத்தின் விடுதலைக்காக தன்னுயிரைக் கொடுத்ததற்கு முதல் நாளாகிய புனித வியாழக்கிழமை அன்பின் அடையாளமாகவும், தமது உடனிருப்பை உணர்த்தும் உன்னத அருட்சாதனமாகவும் ,உறவின்சின்னமாகவும், பகிர்தலின் அடையாளமாகவும், சமத்துவத்தின் வெளிப்பாடாகவும் அப்ப வடிவான திவ்விய நற்கருணையை ஏற்படுத்திய புனித நாளாகும்.
தனது பணி வாழ்வின் உன்னத புனித கருவியாகிய பணிக்குருத்துவத்தை ஆரம்பித்து திருப்பலியையும், நற்கருணை விருந்தையும் உருவாக்கினார். அவர் அப்பத்தை எடுத்து கடவுளுக்கு நன்றி கூறி அதைப்பிட்டு அவர்களுக்குக் கொடுத்து 'இது உங்களுக்காக கொடுக்கப்படும் எனது உடல். இதை என் நினைவாகச் செய்யுங்கள்' என்றார். அப்படியே உணவு அருந்திய பின்பு அவர் கிண்ணத்தை எடுத்து 'இந்தக் கிண்ணம் உங்களுக்காக சிந்தப்படுகின்ற எனது இரத்தத்தால் நிலை நிறுத்தப்படும் புதிய உடன்படிக்கை' (லூக்காஸ் 22:19–20) என்று சீடர்கள் வழிவந்த குருத்துவத்துக்கு அங்கீகாரம் அளித்து தன்னையே அர்ப்பணித்தார்.




தலைவனுக்கு பணிசெய்வது உலக இயல்பு. குருவுக்கு கீழ்ப்படிவு நடைமுறை கடவுளுக்குப் பணிவது பக்திமுறை ஆனால் குருவும், போதகரும், ஆண்டவருமாகிய இயேசு சீடரின் பாதங்களைக் கழுவியது பணிவை அன்பை வெளிப்படுத்திய புதுமுறை. இந்த முன்மாதிரியுடன் நின்றுவிடாது. 'உங்களுக்கு நான் அன்பு செய்தது போல் நீங்களும் அன்பொருவருக்கு ஒருவர் செய்வீர்' என்னும் அன்புக்கட்டளையால் சீடர்கள் வழியாக அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றார்.
பொறாமையும், விரோதமும், குரோதமும் ஆதிக்கமும், பகைமையும் அன்புக்கு தடைபோடும் சுவர்களாகும். தியாகமும், பணிவும், தாழ்ச்சியும், கருணையும், பிரிவும் அன்பை வலுப்படுத்தும் ஆற்றல் மிக்கவை. தூய்மையான அன்பு உயர்வு தாழ்வு–வறுமை சிறுமை நோக்காது. தலைமைக்கும், அதிகாரத்துக்கும் போட்டிபோடுவதை விடுத்து சீடத்துவத்தின் மேன்மையை வெளிப்படுத்த பணிபுரிவோம்.
நாமும் கிறிஸ்தவர்கள் என்பதற்குச் சிறந்த வெளியடையாளம் அன்பு செலுத்துவதும் தாழ்ச்சியும் பகிர்தலுமாகும். பட்டம், பதவி, புகழ், பணம் தேடும் இவ்வுலகில் நாம் எப்படிப்பட்ட மனநிலையோடு அன்பை பரிமாறுகிறோம்? இயேசுவின் தியாகமும் பொறுமையும் எம்மில் வெளிப்படுகிறதா? திவ்விய நற்கருணையில் மெய்யாகவே இறைவன் வாழ்கிறார் என்பதை விசுவசித்து ஆராதிப்போம். இயேசுவின் போதனைகள் பாடுகள் மரணம் வழியாக நாம் பெற்றுக்கொண்ட விழுமியங்களை வாழ்வாக்குவோம். அன்பென்னும் சங்கிலியால் அனைவரையும் பிணைத்து இறைவனோடு சங்கமமாவோம்.

எஸ்.யேசுதாஸ் கொழும்புத்துறை

## நாளை

**பங்குனி-20**
**வெள்ளிக்கிழமை**
**03.04.2015**

திதி: சதுர்த்தசி பி.ப.04.10
நட்சத்திரம்: உத்தரம் மு.இ.09.28 வரை
சுபநேரம்: 06.10–07.40 வரை
இராகுகாலம்:10.40–12.10 வரை
பங்குனி உத்தரம்

## 19 ஆவது திருத்த சட்ட வரைவை எதிர்த்து வழக்கு

கொழும்பு, ஏப்.2

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்த சட்ட மூலத்துக்கு எதிராக ஹெல உறுமய திங்கட்கிழமை வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

மனுவைத் தாக்கல் செய்ததன் பின்னர் கருத்து தெரிவித்த ஹெல உறுமய வின் மேல் மாகாண சபை உறுப்பினர் நிஷாந்த வர்ணசிங்ஹ, நிறை-வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையில் இருக் கின்ற தான்தோன்றித்தனமான அதிகாரங் களை நீக்கி, அந்த பதவியை ஜன நாயகப்படுத்தல் எனும் பெயரில் மைத்திரிபால சிறிசேன ஜனாதி பதிக்கு மக்கள் வழங்கிய ஆணையை ஒவ் வொருவரும் பிற்பொக்கட் அடிப்பதற்கு முயற்சிக் கின்றனர்.

நிறைவேற்று அதிகாரத்தை தன்னுடைய பொக்கட்டில் போட்டுக் கொண்டு நாட்டை ஆள்வதற்கு கனவு காண்பவர்களும் இருக் கின்றனர் என்றும் அவர் தெரி வித்தார். (வ-சி)

## ஜீ.எஸ்.பி.வரிச்சலுகை குறித்து மீண்டும் கவனம் செலுத்தப்படும்

### ஐரோப்பிய ஒன்றியம் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.2

ஜீ.எஸ்.பி.வரிச்சலுகையை மீண் டும் இலங்கைக்கு வழங்கு வது தொடர்பில் கூடிய அவதானம் செலுத் தப்படவுள்ளதாக ஐரோப்பிய ஒன் றியம் தெரி வித்துள்ளது.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன் றியத்தின் தூதர் நேற்று முன்தினம் ஜனாதிபதியைச் சந்தித்தபோது இத னைத் தெரிவித்தார் என்று ஜனாதி பதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன் றியத் தூதர் டேவிட் டேலி நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவைச் சந் தித்தார். இந்த சந்திப்பு ஜனாதிபதி அலுவல கத்தில் இடம்பெற்றது.

இலங்கை மீன்கள் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டுள்ள ஐரோப்பிய ஒன் றியத்தின் தடையை நீக்குதல் மற் றும் ஜீ.எஸ்.பி. சலுகையை மீண்டும் வழங் குவது தொடர்பாக கூடிய அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக தூதர் டேவிட் டேலி இதன் போது உறுதியளித் துள்ளார்.

மனித உரிமைகளை உறுதிப் படுத் தல் மற்றும் நல்லிணக் கத்தைக் கட்டி யெழுப்பல் போன்றவற்றுக்கு அரசு முன்னெடுக்கும் வேலைத் திட்டங் கள் தொடர்பில் இதன் போது இலங் கைக் கான ஐரோப் பிய ஒன்றியத் தின் தூதுவர் பாராட்டுகளைத் தெரி வித் ததாகவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட் டுள்ளது. (வ)

## தேர்த்திருவிழா

மூளாய் முத்துக்குமாரசுவாமி ஆலய வருடாந்த தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வசந்தமண்டபப் பூசையுடன் ஆரம்பமாகி சுவாமி தேரில் ஆரோக ணிப்பார். தீர்த்தத்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும். (வ)


**கொக்குவில் நந்தாவில் கற்புலத்து**

**மனோன்மணி அம்பாள் ஆலயம் மணவாளக்கோலத் திருவிழா**

நாளை (03.04.2015) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு அம்பாளுக்கு 1008 சங்காபிஷேகமும் பரிவார மூர்த்திகளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் இடம்பெற்று அம்பாள் உள், வெளி வீதி உலாவந்து அடியவர்களுக்குத் தரிசனம் கொடுப்பார்.

தொடர்ந்து மதியம் 12.00 மணியளவில் மகேஸ்வர பூசை இடம்பெறும். அடியவர்கள் யாவரும் கலந்து அம்பாளின் இஷ்ட சித்திகளைப் பெற்றேகும் வண்ணம் வேண்டுகின்றோம்.

**கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்**

(58315) (45.3.) **பரிபாலன சபை**


## சம்பூர் அனல் மின் நிலையத்துக்கு எதிராக பிரேரணை நிறைவேற்றம்

திருகோணமலை, ஏப்.2

சம்பூர் அனல் மின் நிலையத்தை தமது பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட இடத்தில் அமைப் பதற்கு எதிரான பிரேரணை, மூதூர் பிரதேச சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தவிசாளர் ஏ.எம்.கரீஸ் தலைமை யில், நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை கூடிய சபை அமர் விலேயே இந்தத்தீர் மானம் நிறை வேற்றப்பட்டுள் ளது.

அனல்மின் நிலையம், குறித்த பகுதி யில் இயங்க ஆரம்பித்தன் பின்னர் அந்தப்பகுதியில் ஏற்படப் போகும் சூழல்பாதிப்பு, மக்களுக்கு ஏற்படப் போகும் நோய்கள், கடல் வள பாதிப் புகள் முதலியனவற்றை தமக்குள் பேசித் தீர்மானித்த சபை அங்கத்த வர்கள் 11 பேரும் இணைந்து, ஏக மனதாக இந்தத் தீர்மானத்தை நிறை வேற்றினர். அனல் மின் நிலைய திட்டம், பொதுமக்களுக்கு தீங்கு ஏற் படக் கூடியதாக அமையும்.

எனவே, சம்பூர் அனல் மின் நிலை யம் அமைக்கும் பணிகள் உடனடி யாக நிறுத்தப்பட வேண்டும் என்று தமது எதிர்ப்புத் தீர்மானத்தை நிறை வேற்றியுள் ளனர்.

2007ஆம் ஆண்டிலும் 2013 ஆம் ஆண்டிலும் சம்பூர் அனல் மின் நிலையம் அமைப்பதற்கான அனு மதியை மூதூர் பிரதேச சபை வழங் கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**ஐயாத்துரை குணசீலன் அவர்கள்** (SLTS 2 II)

எமது பாடசாலை ஆசிரியர் திரு. ஐ. குணசீலன் அவர்கள் கடந்த 27-03-2015 அன்று கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்விமாணி (B.Ed) பட்டத்தைப் பெற்றதையிட்டு நாம் மனம் மகிழ்வதுடன், இவர் மேலும் பட்டங்களையும் பதவியுயர்வுகளையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம். அத்துடன் இதேநாளில் தென்மராட்சி வலயத்திற்குட்பட்ட பட்டம்பெற்ற ஏனைய ஆசிரியர்களையும் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

பாராட்டி வாழ்த்துவோர்
ஆசிரிய நலன்புரிச் சங்கம்,
யா/கச்சாய் அ.த.க. பாடசாலை,
கொடிகாமம்.


## 19 ஆவது அரசியல் அமைப்பு சீர்திருத்தில் குறைபாடுகள்

### மஹிந்த கூறுகிறார்

கொழும்பு, ஏப்.2

நாடாளுமன்றத்தில் முன் வைக் கப்பட்டுள்ள 19ஆவது அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தில் குறை பாடுகள் இருக்கின்றன என்று முன் னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாராஹேன்பிட்டியில் நேற்று முன் தினம் மாலை விவசாய சமூக பிரதிநிதிகளுடனான சந் திப்பு நிறை வடைந்த நிலையில், அவர் வெளி யேறிய போது, ஊடக வியலாளர் களின் கேள்விக்கு பதிலளிக்கையி லேயே இந்தகவலை தெரிவித்தார்.

"திருத்தச் சட்டத்தை நான் இதுவரை வாசிக்கவில்லை. கேள்விப்பட்ட தன் படி அதில் பல குறைப்பாடுகள் காணப்படுகின்றன. இதில் காணப் படும் பல விடயங்கள் குறித்து திருப்தி கொள்ள முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார். (வ-சி)

## கந்தபுராணப்படன நிறைவு விழா

வவுனியா, ஏப்.2

வவுனியா வெளிவட்டவீதி சிந்தாமணி விநாயகர் பரி பாலன சபையால் கந்த புராணப்படன நிறைவுவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயத்தில் பரிபாலனசபைத் தலை வர் பொ.நல்லையா தலை மையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதமவிருந்தினராக வவுனியா பிரதேசசெயலாளர் கா.உதயரா சாவும் சிறப்பு விருந் தினர்களாக வவுனியா பிரதேச செயலக கலாசார உத்தியோ கத்தர் இ.நித்தியானந்தன் உட்பட பலர் கலந்து சிறப்பிக்கவுள் ளனர். கந்தபுராணம் பற்றிய சிறப்பு சொற்பொழிவை தமிழ்மணி அகளங்கன் ஆற்றுவார். (வ-402)


## வாழ்த்துகின்றோம்



**பாலசிங்கம் சிவராசா**
**(அதிபர் - தரம் - I)**

அதிபர்சேவை 2006 முதல் 2015 வரை (நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை)

ஆண்டுகள் ஒன்பதாய் அளப்பரிய சேவையாற்றி பதவி உயர்வுடனே இன்புடனே பிரியாவிடைபெறும் அதிபரே இனிவரும் காலமதில் சிறப்புடனே பணியாற்றவும் உடல் உள நலமுடனே நீடூழி வாழவும் வாழ்த்திநிற்கின்றோம்.

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்,
நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை.


## பேச்சுத் திறன்காண் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஏப்.2

யாழ்ப்பாணம் மாநகரசபை முன்பள்ளியின் பேச்சுத் திறன் காண் நிகழ்வு இன்று வியாழக் கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் பண் டார மாளிகை வளவு முன்பள்ளியில் நடை பெறும்.

மாநகரசபை ஆணையாளர் செ.பிரணவ நாதன் தலைமையில் நடைபெறும் நிகழ் வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விமலநாதன் கலந்து கொள்வார். (வ)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப்.2

மேலைத்தெல்லி, விழிசிட்டி வீமசிட்டி சிவகுரு நாதசுவாமி ஆலய புனருத்தாரண அஷ்டபந் தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.10 மணி தொடக் கம் முற்பகல் 10.30 மணி வரை நடை பெறவுள்ளது.

பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 6 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை நடை பெறும்.

கும்பாபிஷேகக் கிரியைகளை சிவகுரு நாத சுவாமி ஆலய பிரதம குரு சிவஸ்ரீ மாவை குமார - உமாசங்கரக் குருக்கள் நடத்துவார். (வ)


## சேவைநலன் பாராட்டு

**இளையதம்பி பாலகிருஸ்ணன்**
[தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் - 1]



தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றி 31.03.2015 தனது அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்ற இளையதம்பி பாலகிருஸ்ணன் அவர்கள், ஓய்வு காலத்தில் தொடர்ந்தும் மக்களுக்கு சேவையாற்றி சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

சேவை விபரம்:
1977 கட்டடத் திணைக்களம், அநுராதபுரம்
1982 கட்டடத் திணைக்களம், மட்டக்களப்பு
1983 கட்டடத் திணைக்களம், வவுனியா
1988 கட்டடத் திணைக்களம், மொனராகலை
1990 கட்டடத் திணைக்களம், வவுனியா
1991 கட்டடத் திணைக்களம், கிளிநொச்சி
1992 வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்
1999 வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி
2001 வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி
2002 மேலதிக மாகாணக் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்
2010 வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி
2011 வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி

வாழ்த்துவோர்:
தென்மராட்சி கல்வி வலய ஊழியர் நலன்புரி சங்கம்



## உளமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்

**ம.பற்றிக் டிறஞ்சன்**

செயலாளர் - கமத்தொழில், கமநலசேவைகள், கால்நடை, நீர்ப்பாசனம் மற்றும் கூட்டுறவு அமைச்சு - வடமாகாணம்



கமநல அபிவிருத்திப் திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவி ஆணையாளராகவும், பிரதி ஆணையாளராகவும், வடமாகாணத் தின் பிரதி ஆணையாளராகவும் சிறப்பாக கடந்த 8 ஆண்டுகளாக கடமையாற்றி எமது கமநல சேவை நிலையங்களை முன்மாதிரி நிலையங்களாக வளர்த்ததுடன் யாழ். மாவட்டத்தினை முதற்தர மாக உயர்த்திய பெருமைக்கு உரியவர். வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளராக பதவி உயர்வு பெற்றுள்ளதை உள மகிழ்ந்து பாராட்டி மேலும் பல சிகரங்களை எட்டி நூற்றாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
விவசாய சம்மேளனங்களும்,
கமநல சேவைகள் நிலைய சமூகமும். உரும்பிராய்.


**கண்ணீர் அஞ்சலி**

எமது கல்லூரியின் பழைய மாணவரும்
ஆசிரியருமான பூ. ஸ்ரீஸ்கந்தராசா
(J.P) அவர்களின் அன்புத் தாயார்
திருமதி **மகேஸ்வரி பூலோகம்**
அவர்கள் காலமான செய்திகேட்டு துயருறுவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
நலன்புரிகழகம்,
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.
(88814) (45,8.3)

**அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு**



கடந்த 04.03.2015 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்
**அமரர் சின்னத்துரை ஞானேஸ்வரன்**
அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (01.04.2015) புதன்கிழமை காலை 8.00 மணிக்கு வேலணை சாட்டிபுனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (03.04.2015) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதியபோசன நிகழ்வும் யாழ். நாவலர் வீதியில் அமைந்துள்ள சொர்ணாம்பிகை மண்டபத்தில் (T.C.T) பகல் 12.00 மணியளவில் நடைபெறும். அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அந்நிகழ்வுகளில் கலந்து கொள் ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)
இல. 03, யாழ் வீதி,
யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.
(58240) (45.7.3)

# யானைத் தொல்லையிலிருந்து மக்களைக் காக்க நடவடிக்கை

மட்டக்களப்பு, ஏப்.2

மட்டக்களப்பு மாவட்டத்தில் யானைகளின் தாக்குதல்களிலிருந்து பொது மக்களைபாதுகாப்பதற்கானவேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.


இது தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம், மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் திங்கட்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், கடந்த காலத்தில் இடம்பெற்ற யானைகளின் தாக்குதல்கள் மற்றும் அவற்றால் ஏற்படுத்தப்பட்ட சேதங்கள் தொடர்பில் ஆராயப் பட்டன. வெல்லாவெளி, பட்டிப்பளை, வவுணதீவு, ஏறாவூர்ப் பற்று, கிரான், வாகரை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் யானைகளின் தாக்குதல்கள் அடிக்கடி இடம்பெற்ற வண்ண முள்ளன. இந்த நிலையில், மேற்படி பிரதேச செயலகப் பிரிவுகளுக்குள் நுழையும் யானைகளை பொது மக்கள், இராணுவத்தினர், ஊர் காவல் படையினர், பிரதேச செயலகத்தைச் சேர்ந்தவர்கள் இணைந்து விரட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், யானைகள் மீண்டும் வராமல் இருப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

அந்த வகையில், மேற்படி பிரதேச செயலகப் பிரிவுகளில் யானை வேலிகள் இல்லாத இடங்களில் அத்தகைய வேலிகளை அமைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது. வனஜீவராசிகள் திணைக்களத்தின் கடந்தகால செயற்பாடுகள் தொடர்பில் கடுமையான விமர்சனங்கள் இந்தக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டதுடன், அவர்களின் வினைத்திறன் இல்லாத செயற்பாடுகள் காரணமாகவே பொதுமக்கள் யானைகளின் தாக்குதல்களால் பாதிக்கப்படுவதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டது.

இதன்போது, எல்லைப்புறங் களில் யானை வேலிகளை அமைப்பதற்கு தேசத்துக்கு மகுடம் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட 90 மில்லியன் ரூபா தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பிஎஸ்.எம்.சார்ள்ஸ் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதில் அளித்த வனஜீவராசிகள் திணைக்களத்தின் கிழக்கு மாகாண பணிப்பாளர் டபிள்யூ. ஆர்.வீரசேகர, குறித்த நிதி தொடர்பானபதிவுகள் எதுவும் தமது திணைக்களத்தில் இல்லை எனவும், அந்தக்காலப் பகுதியில் தான் கடமையாற்றவில்லை எனவும் கூறினார். இந்த நிலையில், மேற்படி நிதி தொடர்பில் இரு வாரங்களுள் விசாரணை மேற்கொண்டு தமக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார். இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன். செல்வராசா, பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம், இரா.துரைரெட்ணம், மா.நடராஜா, பிரசன்னா இந்திர குமார், ஞா.கிருஸ்ணபிள்ளை, வனஜீவராசி திணைக்களத்தின் கிழக்கு மாகாண பணிப்பாளர் டபிள்யூ.ஆர்.வீரசேகர உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (வ)

# தொண்டராசிரியர் நியமனம் குறித்து கவனம் செலுத்தப்படும்

## கிழக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு



திருகோணமலை, ஏப்.2

கிழக்கு மாகாண தொண்டராசிரியர்களின் நியமனம் தொடர்பில் கவனம் செலுத்துவேன். இவ்வாறு தெரிவித்தார் கிழக்கு முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட்.

கிழக்கு மாகாணத்தில் பல வருட காலமாக தொண்டராசிரியர்களாகக் கடமையாற்றிய பலர் நேற்று முன்தினம் திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண சபை அலுவலகத்துக்கு முன்பாக தங்களுக்கு நியமனம் வழங்குமாறு கோரி ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர்.

ஆர்ப்பாட்டம் மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சர் உடனடியாக குறித்த இடத்துக்கு விரைந்து சென்று நியமனம் தொடர்பில் உரிய தரப்புக்களுடன் கலந்துரையாடி ஒரு மாத காலத்துக்குள் சாதகமான முடிவைத் தருவ தாகவும் இதற்கு தன்னாலான முழு முயற்சியையும் மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக் கையில்: இவர்களது பிரச்சினைகள் தொடர்பில் தாம் தெளிவாக அறிந்துள்ளதாகவும் இது தொடர்பாக பல முக்கிய துறைசார் தரப்பினருடன் கலந்துரையாடியுள்ளதாகவும் இதற்கு சாதகமான முடிவு கிடைக்கும் என்று நம்பு வதாகவும் கிழக்கு மாகாண முதலமைச்சர் தொண்டராசிரியர்களிடம் தெரிவித்தார். (வ)

**நன்றி நவிலலும்**
**அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்**



**அமரர் வேலுப்பிள்ளை தங்கராசா**
(RETIRED INSURENCE CORPRATION OFFICER)
அன்னை மடியில் 29.07.1933
ஆண்டவன் அடியில் 06.03.2015
கடந்த 06.03.2015 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் வேலுப்பிள்ளை தங்கராசா அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு எமது இல்லத்திற்கு நேரில் வருகைதந்து ஆறுதல் கூறி, சகலவழிகளிலும் உதவிபுரிந்தவர்களுக்கும் தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும் அண்டியிருந்து ஆறுதல்கூறி, உண்டி ஊண் கொடுத்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிபுரிந்த அன்புள்ளம் கொண்டவர்களுக்கும், நோய்வாய்ப்பட்டு இருந்தவேளை இல்லம்வந்து மருத்துவ உதவிகள் புரிந்த வைத்திய கலாநிதி வேலும்மயிலும் ஐயா அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, நாளை (03.04.2015) வெள்ளிக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் வீட்டுகிரியைகள் நடைபெற்று, அஸ்தி கீரிமலை தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். 05.04.2015 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்
"சாரதா இல்லம்"
அல்வாய் வடக்கு, அல்வாய்.
குடும்பத்தினர்
V.V.T. சிவா (இளைய மகன்– 077 791 5224
(58+56)(45.7.3)

# முஸ்லிம் பெண் ஊழியர்கள் அபாயா அணியத் தடை விதிப்பு

## அலவத்துகொட் விவசாயத் திணைக்களத்தில் பணியாற்றும்

கொழும்பு, ஏப்.2

கண்டி, அலவத்துகொட விவாசாய அமைச்சின்கீழ் இயங்கி வரும் விவசாயத் திணைக்களத்தில் பணி புரியும் முஸ்லிம் பெண் ஊழியர்களுக்கு அபாயாவுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்தத்திணைக்களத்தில் பிரதேச விவசாய ஊக்குவிப்பு அதிகாரிகளாகக்கடமையாற்றும் இரண்டு முஸ்லிம் பெண்கள் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

"அலவத்துகொட விவசாய திணைக்களத்தில் குறித்த இருவரும் பிரதேச விவசாய ஊக்குவிப்பு அதிகாரிகளாக பணிபுரிந்து வந்துள்ளனர். இந்நிலையில், நேற்று முன்தினம் இடம்பெறவிருந்த பௌத்த மத நிகழ்வொன்றின் ஏற்பாடுகளை பார்வையிடு வதற்காக அங்கு சமூகமளித்த மாவட்ட பணிப்பாளர், மேற் படி இருவரையும் பௌத்த மத நிகழ்வு இடம்பெறும் தினம் அபாயா அணிந்து வரக்கூடாது என்றும் எதிர்வரும் தினங்களிலும் இது நடைமுறையில் இருக்கும்" என்றும் கடுமை யாகத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் காரியாலய உயர் அதிகாரி ஒருவரின்தூண்டுதலுக்குஅமையவே இடம்பெற் றுள்ளதாக பாதிக்கப் பட்ட வர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் தபால், முஸ்லிம் சமய விவகார அமைச்சரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஹலீம் மற்றும் அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல ஆகியோரது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்தும் இவ்வாறான சிங்கள தேசியவாதக் கருத்துகள் அவ்வப் போது இடம் பெற்று வருகின்றதுடன், இது தொடர்பில் முன்னைய அரசு செய்த தவறை புதிய அரசும் செய்யாது இவ் வாறான விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ–சி)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி யின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை வியாழக் கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில் வேந்தன் தலைமையில் கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந் தினராக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவனும் இலங்கை வங்கியின் வட பிராந்திய உதவிப்பொது முகாமையாளர் பாலரட்ணம் நந்தகுமார் கலந்து கொள்ளவுள்ளார். பரிசில்களினை திருமதி றோகினி நந்தகுமார் வழங்கிக் கௌரவிப்பார். (வ)


**கண்ணீர் அஞ்சலி**

எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி
யோகராசா தேவகௌரி அவர்களின்
அன்பு மாமியார்
திருமதி **மகேஸ்வரி பூலோகம்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர் நல்லுறவு மன்றம் - யா/செங்குந்த இந்துக் கல்லூரி.
(58+56)(45.7.3)

# ஜி.சீ.ஈ சாதாரண தர பெறுபேறுகள்

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் நேற்று முன்தினம் வெளியாகி யிருந்தன. பாடசாலை களால் எமக்கு அனுப்பி வைக் கப்பட்டிருந்த பரீட்சை முடிவுகள் வரு மாறு:-

**வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**
**ஆங்கில மொழி மூலம்**

ஆரபி ஜெகதீஸ்வரன் -8ஏபி, ஹாஷனா சிறிதரன் -8ஏபி, ஜெனோலியாரொபேட் கெனடி இரட்ணராஜா- -8ஏபி, லலிதாங் கி நகுலேஸ்வரன் -8ஏபி, மாதினிகமலநா தன் -8ஏபி, நிவேதாமுரளிதரன்-8 ஏபி, புரியந்திமகேந்திரன் -8ஏபி, சாயிகா வேணு காந்தன் -8ஏபி, சிவசங்கரி சிவ குமாரன் -8ஏபி, தயாசாகரிஅசோகுமார் -8ஏபி,சிவசொரூபிகணபதிப்பிள்ளை-8ஏசி, ஸ்ரீ சாயுக்ஷா பாலசுரேன்-8ஏசி, திவா ஜினி இரவிச்சந்திரன்-8ஏசி, வாசுகி கிருப நாதன்-8ஏசி, கேனுஜா பத்மநாதன்-8ஏசி, கஜன்ஷிகாசிவலோகநாதன்-8ஏசி,மாதங்கி ஜானகிராமன்-7ஏ2பி, தயானுகா கணேஷ லிங்கம் -7ஏபிசி, பிரகவி குகதாசன் -7ஏ2சி.

**தமிழ் மொழி மூலம்**

விதுஷா குலேந்திரன்-8ஏபி, அபிவர்ணா தவயோகராஜா-8ஏபி, சாருகா ஜெயராஜ சிங்கம்-8ஏபி, சிந்துஜா சிவசுப்ரமணி யம்-8ஏபி,சிவானுஜா சிவசுப்ரமணியம் -8ஏபி, மயூரி திருஞானசெல்வன்-8ஏபி, மாதங்கி தவேந்திரன்-8ஏபி, சரண்யா தவராஜா-8ஏபி, ஆரபி மோகனசேகரம்-8ஏபி, கீர்த்திகா தயாபரன்-8ஏபி, கிரு ஷாந்தி கிருபநாதன்-8ஏபி, பரமிதா கணேச லிங்கம்-8ஏபி, கனகாம்பரி சிவகாந்தன்-8 ஏபி, லக்ஷா திருப்பதிராஜா-8ஏபி, சங்கீர்த் தனா வரதராஜன்-8ஏபி, வோஜினி தணி காசலம்-8ஏபி, சரண்யா நவநீதகுமார்-8ஏபி, டிற்சிகா சுந்தரலிங்கம்-8ஏபி, டர் சிகா சிவசுப்ரமணியம்-8ஏபி, சுஸ்மிதா செல்வேந்திரன்-8ஏசி ஜனனி கதிர்காம நாதன்-8ஏசி பவித்திரா தேவானந் தன்-8ஏசி சங்கவி தர்மரட்ணம்-8ஏசி லௌசிகா தயாபரன்-8ஏசி மகிழ்யா ஈஸ் வரன் -8ஏசி பிரியங்கா விக்னராஜா -8ஏசி கார்த்திகா மயில்வாகனம்-8ஏசி லக்ஷி கனகரத்தினம்-8ஏசி மதுஷா ரட்ணசபா பதி-8ஏசி பிரகாஷினி மகேந்திரன்-8ஏசி சுபோஷியா செல்வராஜா-8ஏசி ஜெமிக்கா பொன்னுத்துரை-8ஏசி, சர்விகா குண சிங்கம்-8ஏஎஸ். ஜெபான்சி ஜெனாரட் ரொபின்சன்-7ஏ, சதுர்சனா சிவலிங் கம்-7ஏ, சோபினி ஜெகதீஸ்வரன்-7ஏ, சௌமியா ராசரட்ணம்-7ஏ, தர்சிகா ரவீந் திரன்-7ஏ, கஜானு ரஞ்சன்-7ஏ, மைதிலி கணேஷமூர்த்தி-7ஏ, நிதர்சிகா தனபால சிங்கம்-7ஏ, தர்மினி நீதிராசா-7ஏ, நிலுக்சிகா விக்னராசா-7ஏ, வைஷ்ணவி சிவபாஸ்கரன்-7ஏ, யுவனிதா கருணா னந்தன்-7ஏ, கனிமொழி சண்முகேஸ் வரன்-7ஏ, கீர்த்தனா செல்வராஜா-7ஏ, சங்கீர்தா சற்குணராசா-7ஏ, தனுஷா சாந்தரூபன்-7ஏ, தாருஜா சிவதீ சன்-7ஏ, கரனிகா சோமசுந்த ரம்-7ஏ, மதுஷா மகேந்திரன்-7ஏ, சாருஜா மோகனராஜன்- 7ஏ, தாரணி தயாபரன்-7ஏ,டர்சி இராஜ சிங்கநாயகம்-7ஏ.

**கிளிநொச்சி மகா வித்தியாலயம்**

நவரட்ணராஜ் கௌசிகன்-9ஏ, ஜெயரட்ணம் கஜீபன்-9ஏ, சத்திய தரண்யா ஜெயசேகரம்-9ஏ, கிருத் திகா குலதாஷன்-9ஏ, மிதுசிகா நந்தகுமார்-8ஏபி, பிரணவி சிவ னேசன்-8ஏபி, இராகவி சிவசேன சன்-8ஏபி, புருகாசினி புருஷோத் மன் -8ஏபி, கஸ்மிதா ராஜ்மோ கன்-8ஏஎஸ், தர்மிலா குமாரகுல சிங்கம்-8ஏசி, தெய்வேந்திரன் டிலக்ஷன் -8 ஏஎஸ், ஜெயபாலன் பூவள்ளல்-8ஏசி, இராமகிருஷ்ணா அறிவன்பன்-7ஏபிசி, திருநாவுக்கரசு பிரசன்னா-7ஏ2சி, பத்ம நாதன் தேனுகன்-7ஏபிஎஸ், தேவராசா பிரவீனன்-7ஏபிசி, சுவேதிகா வடிவேல் -7ஏபிசி, ஆனந்தராசா கோகிலராஜ்-6ஏ2பிசி, சிறீரமேஸ்குமார் அனுஜன்-6ஏ3சி, பாஸ்கரன் சரத்குமார் -6ஏ2பிசி, கனகசீலன் நிஷாந்தன்-6ஏபிஎஸ், விஸ்வ லிங்கம் தயன்-6ஏ2பிஎஸ், கஸ்தூரி பகீரதன்-6ஏ2சிஎஸ், தர்சிகா பேருலிங்க சிவம்-6ஏ2பிசி, இளங்கேசன் ஆதித்தன்-5ஏ3பிசி, ஜெபசீலன்பிரியந்தன் டபரேரா-5ஏ3பிசி, சுபாசினி கனகலிங்கம்-5ஏ2பிசி எஸ், நர்த்தனா சத்தியமூர்த்தி-5ஏபி3சி, லலிதா சுந்தரமூர்த்தி -5ஏபி3சி, ரஞ்சித் சுபீட்ச ன்-4ஏ2பி2சிஎஸ், வடிவேல் தனுசன்-4ஏபி3சிஎஸ், விநாயகமூர்த்தி சிந்துயன்-4ஏ2பி2சிஎஸ், சந்திரசேகர் கபிலன்-4ஏ2பி2எஸ், கியூரிபௌஸ்ரீனா லூர்துசாமி-4ஏ4பிசி, டினோஜிதா மோகன்-4ஏ2பி3சி, இராஜகுமார் நேசானந்- 3ஏ2பி2 சிஎஸ், பிரான்சிஸ் பிரகாஸ்- 3ஏ3பி2சிஎஸ், மோகனதாஸ் சாருசன்-3ஏ2பி3சிஎஸ், றோசியா திருநாவுக்கரசு-3ஏபி3சி2எஸ்.

**மு/உடையார்கட்டு மகா வித்தியாலயம்**

ஸ்.சஜித்தா-8ஏசி, சி.தனுஷா-8ஏசி, இ.தர ணிசன்-8ஏஎஸ், ர.பாவலன்-6ஏ2பிசி, உ.சஜந்தினி-5ஏ3பிசி, யூ.அபிஷா-5ஏ2பி2சி, ம.நிதர்ஷன்-5ஏ3பி, ஜோ.பானுசன்-4ஏ3பிசிஎஸ், கே.பிறையரசி-4ஏ3பிசி, அ.றொஜிஸ்ரன் ஜோய்-4ஏ3பிசி, சி.குல ளினி-4ஏ2பி2சி, சி.கலைப்பிரியா-3ஏ5பிசி, ச.சஜித்தா-3ஏ4பிசி, சி.சர்மிளன்-3ஏ4சிஎஸ், ச.தனுஷன்-3ஏ2பி3எஸ், ப.கஜேந்திரன்-2ஏ4பி2சி, செ.பகிசன்-2ஏபி3சிஎஸ், அ.சர்மிகா-ஏ2பி2சி4எஸ், ஆ.அனுஷா-ஏ3பிசி3எஸ், கி.பிரகதிஸ்-3பி2சி3எஸ், ச.எலிசபெத்-2பி2சி2எஸ், க.சோதிகா-பி4சி4எஸ், ம.விபூசிகன்-4சி4எஸ்

**யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை**

வி.சங்கித்-9ஏ, த.ரஜிவர்மன்-9ஏ, க.துள சிகன்-7ஏபிஎஸ், லி.விக்கினேஸ்-7ஏபிஎஸ், யோ.அனுஷா-6ஏ2பிசி, சி.குணமேகலா-6ஏ2பிசி,பு.ஹம்சத்வணி-6ஏ2பிஎஸ், மு.லக்சனா-5ஏ3பிஎஸ், மு.டிதுர்சன்-5ஏ2பி2சி, த.கோபிகன்-5ஏ2பிசிஎஸ், த.திலக்ஷன்-5ஏ2பிசி, க.நிரஞ்சன்-5ஏ2பிசி, சு.சுகப்பிரதா-5ஏபி2சிஎஸ், சி.சுபாங்கன்-5ஏ2பிசி, த.ராஜ்குமார்-5ஏ3சி, பி.கிருஷிகா-5ஏ2பி2சி, மு.ஜெனி பராஜ்-4ஏ3பிசிஎஸ், நா.நிதர்சன்-4ஏ2பி3சி, கே.வேணுஜா-4ஏ2பிசி2எஸ்

**யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி**
**ஆங்கில மொழிமூலம்**

ச.திவிசா-9ஏ, சி.துர்க்கா-9ஏ, சு.விஜேந் தினி-9ஏ, த.ரம்மியா-7ஏ2பி

**தமிழ் மொழி மூலம்**

சி.சங்கவி-9ஏ, ச.விதுர்சிகா-8ஏபி, யோ. சுவித்தா-8ஏபி, வி.றொக்சி-8ஏசி, ஈ.விஜித் திரா-7ஏ2பி, இ.ஸ்ரீபவதாரணி-6ஏ2பிசி, சு.கீர்த் தனா-6ஏ2பிசி, த.சர்சாயினி-6ஏ3பி, பா.நிலானி-6ஏ2பிஎஸ், ஜெ.ரஜிந்தினி-5ஏ3பிசி, அ.சாளினி-5ஏபி3சி, ச.வினுசா-5ஏ2பி2சி, சி.சாம்பகி-4ஏ4பிசி, ப.சுகன்யா-4ஏ3பிசிஎஸ், சி.சகானா-4ஏ3பிசிஎஸ், சு.லக்சனா-4ஏ2பி2சிஎஸ், வ.மாதுமை-3ஏ4பி2சி, ந.அனிதா-3ஏ3பி2சிஎஸ், அ.மதுஜா-3ஏ2பி3சிஎஸ், க.விபிசா-2ஏ3பி3சி எஸ், சோ.கிருத்திகா-2ஏ3பி2சி2எஸ், அ.நிதர் சினி-2ஏ2பி4சிஎஸ்

**மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி**

த.பாசுபதன்-9ஏ, த.லக்ஸிகா-9ஏ

**மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.**

பா.சோபனா-7ஏபி, வ.யனுஜன்-5ஏபி3சி, த.கஸ்தூரி-4ஏ4பிசி, சி.டினிஜன்-3ஏபி3சி2எஸ், ம.பகீரதி-2ஏ4பிசி2எஸ், க.சாதனா-2ஏபி3சி2எஸ்,

**மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்**

மே.சதுலக்ஸன்-8ஏ, ந.சபீலன்-7ஏசிஎஸ், க.பவிந்தினி-6ஏ2பிஎஸ், ம.மதீஸ்-3ஏ2சி3எஸ், ச.பிரதீஸ்-2ஏ2பி2சி2எஸ், சி.சாளினி-2ஏபி4சி2எஸ், எஸ்.கயல்விழி-2ஏ2பி2சி3எஸ்

**நாவற்குழி ம.வி.**

ஜ.யதுர்சனா-6ஏபி2சி, இ.ஜனுஜா-5ஏ2பிசிஎஸ், ஸ்ரீ.கீர்த்தனா-5ஏபிசி2எஸ், வ.மதுசன்-4ஏபி2சி2எஸ், இ.பிரியங்கா-3ஏ5சி, பா.அனுஷா-3ஏ2பி4சி

## எமது சிந்தைக்கு ஏன் இதைச் சொல்ல வேண்டும்?

துயரமும் துன்பமும் இந்த உலகில் ஆட்சி செய்து கொண்டு இருக்கின்றபடியால் இதை எமது சிந்தைக்குச் சொல்ல வேண்டும். வாழ்க்கையானது கஷ்டம், நோய், மயக்கம் என்பவற்றால் மிதமிஞ்சிப் போய் இருக்கிறது.

நிலையில்லாத உலகிலே மனிதனின் வாழ்வானது



தாமரை இலையில் மினுங்கித் துடித்துக் கொண்டிருக்கும் நீர்க்குமிழிபோன்றது.

**சாயி சிந்தனை**


**வேலையாள் தேவை**

இணுவிலிலுள்ள மில் அரிசி ஆலைக்கு அனுபவமுள்ள வேலையாள் ஒருவர் உடனடியாகத் தேவை.

தொடர்பு: 077 472 3121/ 077 648 2617

(58301) (45.3.7)

**ஆங்கில வகுப்புகள்**

ஆங்கில வகுப்புகள் அடிப்படையிலிருந்து சொல்லிக்கொடுக்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு:
076 627 1771/ 021 321 9181
"why fear, we are here?"

**பெயர் மாற்றம்**

புதுக்குடியிருப்பு, கொரடமடு, மன்னா கண்ட லைச் சேர்ந்த இராமசாமி நடராஜ ஆகிய நான் எனது பெயரை இன்றிருந்து இராமசாமி நடராசா என பெயர் மாற்றம் செய்வதோடு சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என்பதை அறியத்தருகின்றேன்.

(58310) (45.3.7) இ.நடராசா



**ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம் (ஹரோ)**

Rear of 59B Staion Road Harrow
Middx HA12TY
TP 0044208 4275428

**ஆலய உதவி அர்ச்சகருக்கான பணி**
**(Assistant Hindu Religious Worker)**

மேற்படி ஆலயத்தில் நடைபெறும் நித்திய, நைமித்திய பூஜை களின் போது உதவி அர்ச்சகருக்குரிய பதவி வெற்றிடமாக உள்ளது. தகுதி உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

* ஆலய சேவையில் 5 வருட அனுபவம்
* சிவாச்சாரியார்களின் நற்சான்றிதழ்
* ஓரளவு ஆங்கில அறிவு

உணவு, தங்குமிட வசதி தரப்படும்.
வேதனம் பிரித்தானிய முறைமைக்கு அமைவாக வழங்கப்படும்.

தகுதி உள்ளவர்கள் மேற்படி விலாசத்துக்கு 14.05.2015 இற்கு முன்பதாக விண்ணப்பிக்கவும். (58104)(4.3.7)

மேலதிக விவரங்களுக்கு: அறங்காவலர் சபை.

**உடனடி வேலைவாய்ப்பு**
**(டோஹா-கட்டாரில்)**

நேர்முகத் தேர்வு: ஏப்ரல் 02 - குருநாகல் (புரடென்ஷல் அலுவலகம் )
ஏப்ரல் 03ஆம் திகதி - யாழ்ப்பாணம்
கிறீன் கிறாஸ் ஹோட்டலில்
(ஆஸ்பத்திரி வீதி, ரயில் நிலையத்துக்கு அருகில்)

| | | |
|---|---|---|
| மேசன் | 40 | 1200QR (43,812 ரூபா) |
| தச்சுத் தொழிலாளி | 24 | 1200QR (43,812 ரூபா) |
| கம்பி கட்டுவோர் | 25 | 1200QR (43,812 ரூபா) |

நிபந்தனைகள்:
இரண்டு வருட ஒப்பந்தம், உணவு, தங்குமிடம், மருத்துவம் இலவசம், இருவழி விமான பயணச்சீட்டு இலவசம், ஒரு நாளில் 8 மணித்தியாலம், வாரத்தில் 6 நாள் வேலை, மற்றையவை அந்நாட்டு தொழிலாளர் சட்டதிட்டங்களுக்கு அமைய.

Add.app.No : AL/2769/02/15

செல்லுபடியான கடவுச்சீட்டுடன் மற்றும் புகைப்படங்களுடன் (பாஸ்போட் அளவிலான) நேர்முகத்தேர்வுக்கு சமுகமளியுங்கள்.

கட்டணம்: SLBFE இனால் அனு மதிக்கப்பட்ட 95,000 ரூபா கட்டணம் மட்டுமே.

மேலதிக விவரங்களுக்கு அழையுங்கள்: 037 494 5555, 077 45 74 555, 077 9200 200
இணையத்தளம் :www.prudentialagency.lk
புரடென்ஷல்
வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் (Pvt.)Ltd. 72/1,2 ஆவது மாடி, கொழும்பு வீதி, குருநாகல்.

நாளை வெளிவருகின்றது...

**ஒளிஅரசி**

அரசியலோ பாலியலோ கலக்காத ஒரு பரிணாமப் படைப்பு

இல்லத்தரசிகளின் தோழி



மாயை என்னும் அறியாமை!

பெற்றோர்களே அவதானம்!

இலங்கையின் சஞ்சிகை வரலாற்றில் ஒரு பரிணாம புரட்சி!

உங்கள் இல்லத்தரசிகளின் வாழ்க்கைக்கு அவசியமான உடல், உளம், மனம், அறிவு, கல்வி, பொதுவிடயங்களை அழகாக, அளவாக, ஆனந்தமாக நுகரலாம்.

போராடும் வீராங்கனை

தரம் 05 சிங்கள மொழிபெயர்ப்பு வினாத்தாள்

இன்னும் பல வியத்தகு ஆக்கங்களுடன் ஏப்ரல் மாத இதழ் வெளிவருகின்றது.



# யாழ்ப்பாண

## ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத வை

# தேர்த்திருவிழா சிறப்பு

### வண்ணை வைத்தீஸ்வரன் கோ

வண்ணை வைத்தீஸ்வரன் கோயில், கோபாலச் செட்டியாரின் திருமகனான
இற்றைக்கு இருநூற்றுப்பதினொரு வருடங்களுக்குமுன் (கி.பி 1790) கட்டு
தனவந்தரான வைத்திலிங்கச் செட்டியார் தனக்கென ஒரு மாளிகை அமைக்க
செட்டியாரிடம் உன்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்த பரம பிதாவாகிய வைத்தி
தாயாருக்கும் யாழ்ப்பாணத்தில் ஆலயம் அமைக்க வேண்டும் என்று கூறினார்.
ஆலயங்களை இடித்தும், சைவசமயத்தினரைத் துன்புறுத்தியும் தங்கள் சமயத்
சைவத்தையும் தமிழையும் வளர்க்க முற்பட்ட வைத்திலிங்கச் செ
பாவித்து வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலை கட்டுவதற்கு ஒ
1787 ஆம் ஆண்டில் ஆரம்பித்து 1790 இல் வேலையிலை
வைத்தீஸ்வரப் பெருமானுக்கான பரிவாரக் கோயில்களைய
சாதாரண வருடம் சித்தரை மர்தம் பூர்வபட்ச சப்த
கும்பாபிஷேகம் செய்வித்தார். நித்திய நைமி
செய்தார்.

ஆலயத்தை தாமே இனிது பரிபாலித்த
செட்டியார், ஸ்ரீகந்தப்பச் செட்டியார் அவர்கள
காலத்தைக் காசியிற் கழிக்க விரும்பி அ
திருவருளால் தமது உடல் நிரியாணத்தை
அமைப்பித்து, அத் தொட்டியில் ஆரோ
போன்ற மகா புண்ணிய புருஷர் உ
என்றால் மிகையாகாது. பின் கோபாலச்
னுச்சாமிச் செட்டியார், வைத்திலிங்கச்
காலம் வைத்தியலிங்கச் செட்டியாரின்
ஆச்சி அவர்களாலும், பின்னர் அவர்களது புதல்வர் கந்தப்புச் செட்டியாராலும் கோபா
அவர்களால் 1805 ஆம் ஆண்டு வரையப்பட்ட சாசனத்தின்படி அவரது (வழித்தே
பட்டு வருகின்றது. நல்லைநகர் ஆறுமுக நாவலர் தமது முதற் பிரசங்கத்தை இவ்வ
அவர்களுக்கு பின் வித்துவ சிரோன்மணி பொன்னம் பலபிள்ளை புராணப் பிரசங்கம்
செய்து வந்தார்கள். நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன நிறுவுனர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத
முத்தமிழ் மணி சி.எஸ் எஸ். மணிபாகவதர்என்ற பூர்வாஸ் சிரம நாமத்துடன் சமய
பதிலே செய்து வந்தார்கள். இவ்வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே
தம் வண்ணை மேற்கிலுள்ள வில்லூன்றி என்னும் சமுத்திர சங்கம தீர்த்தமாகும். இ
பாணத்திலும் உள்ள சைவத் தலங்களெல்லாம் இவ்வாலயத்தைப் பின் பற்றி நித்
கோயிலே ஆதாரமாக விளங்கியது. இத் தலத்தில் உலக மாதாவாகிய பாலாம் பிகை
வரப் பெருமான் கோயில் கொண்டெழுந்தருளி சைவ நன் மக்களுக்கு கருணை சுரந்த

2002 அ



### அருளாசிச் செய்தி

வண்ணை வைத்தீஸ்வரனுக்கு இன்று தேர்த்திருவிழா. வழிபடும் அடியார்களின் துயர்துடைக்கும் வைத்தீஸ்ரநாதர் இன்று காலை சித்திரத்தேரிலே ஆரோகணிக்கின்றார். ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமான் சோமாஸ்கந்த ராகப் பவனிவருகின்ற அழகுத் திருக்கோலம் இன்று வண்ணையிலே காணலாம்.

பஞ்சரதங்களும் பவனி வருகின்ற அற்புத ஆனந்த கோலா கலம் காண்பதற்கு இன்று அடியார்கள் கூடிவந்து குவிவார்கள். விநாயகர், சுப்பிரமணியர் சகிதம் அம்பிகையும் சண்டேஸ்வரரும் வர எம்பெருமான் அருள்பாலிக்கும் ஆனந்த திருவிழா இன்றாகும்.

பிறவிப்பிணிதீர்க்கும் வைத்தீஸ்வரப் பெருமான் தேர்த்திருவிழா சிறப்புற அருளாசிகள் நல்கி அவனருளாலே அவன்தாள் வணங்கி வாழ்த்திமகிழ்கின்றோம். இன்று நடைபெறுகின்ற இரதோற்சவ பவனி காணவரும் அடியார்கள் எல்லா நலன்களும் பெற்று சகல சௌபாக்கியங்களுடனே நல்வாழ்வு வாழ எம்பெருமான் திவ்ய திருவடிகளை உளமார பிரார்த்தித்து ஆசிவழங்கி வாழ்த்துகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**ஆதீன குருமுதல்வர், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.**



### ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமானின் அருளை அள்ளுவோம்

இன்று ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமான் தனது அருள் சக்தியான ஸ்ரீவாலாம்பிகா சமேதராகத் தேரேறி வருகின்றார். ஆன்மாக்களின் மலங்களை அழித்து அருள் ஆட்சி செய்யும் சிறப்பான இந்நாளிலே, அடியார்கள் எல்லோரும் அருள்வேண்டி வந்து அரோஹரா கோஷம் செய்து பெருமானை வேண்டுதல் செய்யும் காட்சி அற்புதமானது- ஆனந்தமானது.

பெருமான் விநாயகர், சுப்பிரமணியர், அம்பிகை, சண்டேஸ்வரர் சமேதராக பஞ்ச இரதங்களில் பவனி வரும் திருக்காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். இன்றைய தேர்த்திருவிழாவில் பங்குகொண்டு பெருமானின் தெய்வ அருளை அள்ளிக்கொள்ளும் அடியார்கள் பேரின்பப்பேறு பெற்றவர்கள் ஆவர்.

"வேண்டத்தக்க தறிவோய் நீ
வேண்டமுழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற் கரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன்றுண்டெனில்
அதுவும் உந்தன் விருப்பன்றே"

என்கின்ற மணிவாசகரின் மணி வாக்குப்போல பெருமானே எமக்கு வேண்டிய இஷ்ட சித்திகளையும் மறுமையில் முத்தி இன்பத்தையும் தந்தருள வேண்டுமென பிரார்த்திப்போமாக.

உயர்திரு ஈ.சரவணபவன்
உதயன் குழுமத்தலைவரும்,
நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ். கிளிநொச்சி.


இன்பம் பொங்கிட எமது மனமார்ந்த தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்
கிருபா லேணர்ஸ்
அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை
• குறிப்பிட்ட காலப் பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்
• எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புகள் நடைபெறும்
• தாம் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சி வழங்கப்படும்
• சாரதி அனுமதிப் பத்திரத்திற்கான மருத்துவச் சான்றிதழ் (மெடிக்கல்) எமது காரியாலயங்களிலேயே பெற்றுக்கொள்ளலாம்
• பெண்களுக்கு நவீன காரில் பயிற்சி வழங்கப்படும் - 021 492 3200 (கவிதா)
தலைமைக் காரியாலயம் 228, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 4353
சாவகச்சேரி தொ.பே:021 1922202, 021 320 1818
நெல்லியடி தொ.பே: 0213006550
விசுவமடு தொ.பே: 021 320 1515
கிளிநொச்சி தொ.பே: 021 222 5505

சிறி நதியா நகை மாளிகை
01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 2709
56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 6744

சண்முகம் சைவ உணவகம்
கன்னாதிட்டி(சிவன் கோயிலடி)யாழ்ப்பாணம்.

கிருஷ்ண
கிளை கிருஷ்ணா

யாழ் நகரில் PEARSON UNIVERSITY OF WOLVERHAMPTON London South Bank University
edexcel HNDs IN...
Leading to BSc (Hons) / BA (Hons) / B Eng (Hons) from more than 105 Universities in UK, USA, Australia & Canada etc...
• Quantity Surveying • Business Management
• Civil Engineering • Computing
• Biomedical Science
BCAS CAMPUS BRITISH COLLEGE OF APPLIED STUDIES
16, Point Pedro Road, Jaffna.
Tel : 021 221 9910
Hotline : 077 710 2131
Building Careers - Transforming Lives
Colombo | Mt.Lavinia | Kandy | Kurunegala | Ampara | Jaffna | Qatar

ஜெகன் களஞ்சியம்
பல்பொருள் வாணிபம்
சகல விதமான மளிகைப் பொருள்களும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்
447, K.K.S Road, Jaffna.
T.P: 021 222 5035, 077 4836 923

உமா களஞ்சியம்
Uma Stores
இல.378 (250), கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.

புதுவருட
01.05.20
மெத்தைகள்,
கதிரைகள்

K K
புது
அனைத்
கழிவு

# ...ணம் வண்ணை

## ...த வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்

# ...பு மலர் - 02.04.2015



### ...வரன் கோயில்

திருமகனான வைத்திலிங்கச் செட்டியார் என்பவரால் (1790) கட்டுவிக்கப்பட்டது. பெரும் பொருள் ஈட்டி ... அமைக்க எண்ணிய போது கூழங்கைத்தம்பிரான் ...ாகிய வைத்தியநாதப் பெருமானுக்கும் தையல் நாயகித் ... கூறினார். செட்டியார் அதற்குச் சம்மதித்தார். சைவ ...ங்கள் சமயத்தை பரப்பி வந்த ஒல்லாந்தர் மத்தியில் ...திலிங்கச் செட்டியார் அவர்கள் தனது செல்வாக்கினைப் ...டுவதற்கு ஒல்லாந்த அரசிடம் அனுமதியைப் பெற்றார். ... வேலையினைப் பூர்த்தி செய்து, வாலாம்பிகா சமேத ...காயில்களையும் அமைத்து, அதே ஆண்டிலேயே (1790) ...வபட்ச சப்தமியோடு கூடிய புனர்பூச நட்சத்திரத்தில் ...த்திய நைமித்தியங்கள் கிரமமாக நடைபெற்றுவரச்...

... பரிபாலித்த பின், தமது புத்திரர்களான ஸ்ரீகோபாலச் ...யார் அவர்களிடத்து ஒப்புவித்து விட்டுத் தமது அந்திம ... விரும்பி அங்கு சென்று சில காலம் சீவித்த பின், ...ரியாணத்தை உணர்ந்து கருங்கல்லினால் ஒரு தொட்டி ...யில் ஆரோகணித்துக் கங்கையில் இறங்கினார். இவர் ... புருஷர் உலகில் முன்னும் பின்னும் இருந்ததில்லை ...ன் கோபாலச் செட்டியார், கந்தப்பச் செட்டியார், பொன் ...வைத்திலிங்கச் செட்டியார் ஆகியோர் பரிபாலித்து, சில ...டியாரி... ...னைவியார் திருமதி வை.கண்ணம்மா ...லும் கோபாலன் செட்டியார் வைத்திலிங்கச் செட்டியார் ...து (வழித்தோன்றல்களால்) தொடர்ந்தும் பரிபாலிக்கப் ...கத்தை இவ்வாலய வசந்த மண்டபத்திலேயே செய்தார். ...ப் பிரசங்கம் செய்தார். பின் சங்கரசுப்பையர் சுவாமிகள் ...ீ சுவாமிநாத தம்பிரான் ஸ்வாமிகள், துறவு பூணும் வரை ...ததுடன் சமயப் பிரசங்களை இவ்வாலய வசந்த மண்ட...ும் ஒருங்கே அமையப் பெற்றது. இத் தலத்திற்கு தீர்த ...ததமாகும். இலங்கையின் ஏனைய பாகங்களிலும் யாழ்ப் ...ன பற்றி நித்திய நைமித் தியங்கள் நடத்துவதற்கு இக் ...ாலாம் பிகை (தையல்நாயகி) அம்பாளோடு வைத்தீஸ் ...ருணை சுரந்தருளுகிறார்.

2002 ஆம் ஆண்டு கும்பாபிஷேக மலரின் பிரதிபாக்கள்

...கத் தேரேறி ...இந்நாளிலே ...வேண்டுதல்

...ளில் பவனி ...ண்டு பெரு

...மயில் முத்தி

...ார்ச்சி.



### ஆலய பிரதம குருக்களின் ஆசியுரை

பரம்பொருளின் கருணையைப் பெறும் பெருநெறியே சைவம். சைவமாம் சமயம் சாரும் ஊழ்பெறயரிது என்பது சைவத்தின் மேன்மையை பறைசாற்றுவது. சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ்ப்பாணத்தின் கண்ணாக விலங்கும் வண்ணையம் பதியிலே அருளாட்சி செய்கின்ற ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர பெருமானின் திவ்ய மஹோற்ச வத்தின் தேர்த்திருநாள் இன்றாகும். மாறாப்பிணியிலே அகப்பட்டு வருந்தும் அடியார்களின் வருத்தம் எல்லாம் நீறாகிப்போக பேரருள் புரியும் வைத்தீஸ்வரப் பெருமானுக்கு உருகி உருகி உழைக்கும் அடியார் துன்பம் எல்லாம் உருகிப் போக இறைவன் அழகிய தேரில் வலம்வரும் காட்சியை நாம் இன்று காண்கின்றோம்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பது ஔவையாரின் முதுமொழி. ஆலய வழிபாடு சிவ புண்ணியச் செயல். இறையருள் இல்லையேல் வாழ்க்கை சூனியமாகிவிடும். இறையருளைப் பெறத்தக்க அருள் நிதியங்கள் ஆலயங்கள். ஆலயத்தில் இடம் பெறும் நித்திய நைமித்திய வழிபாடுகள் அருளைப் பெறும் சாதனங்கள். அதிலும் இரதோற்சவம் மிகவும் உயர்ந்தது. வைத்தீஸ்வரப் பெருமானின் தேர்த்திரு நாளில் அனைத்து மக்களும் சகல செல்யோகமிக்க பெருவாழ்வு கிடைக்க எல்லாம் வல்ல வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர பெருமானின் ஆசி கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

"மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்"

சிவாகம ஞானசாகரம், ஈசான சிவாச்சாரியார் சிவப்பிரம்ம ஸ்ரீ
சோ.இ.விக்கினேஸ்வரக் குருக்கள்
மகோற்சவ குருவும், தேவஸ்தான பிரதம குருவும்.

### தாய் போன்று காத்த வைத்தீஸ்வரர்

சைவ ஆகம முறைப்படி பரிவாரத் திருக்கோயில்களை வெவ் வேறு திக்குகளில் கொண்டு, யாழ் நகரின் மத்தியில் நடு நாயகமாக அமைந்திருக்கும், செட்டியார் சிவன்கோயில் என அழைக்கப்படும் வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் உறையும் ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானை வணங்கி, எனது உணர்வுகளை இங்கு வெளிப்படுத்தலாம் என எண்ணுகிறேன். சைவத்தை வளர்க்க வேண்டும், அதனைப் பரப்ப வேண்டும், பக்தர்களைப் பெருக்க வேண்டும், மதமாற்றத்தை ஒழிக்க வேண்டும் என்று எம்முள் பலர், முன்னெடுத் துச் செல்கின்ற போதிலும் சிவம் என்பதை உணரவேண்டும் என்பதுதான் முதன்மையானது ஆகும்.

புதிதாக அமைக்கப்பட்ட, புனரமைக்கப் பட்ட ஆலய நிர்மாண வேலைகளில் காலத் தால் ஏற்பட்ட பல புதிய மாற்றங்களைக் காணக் கூடியதாக இருக்கிறது. வெகுவாகப் பாதிப்படைந்த வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலை ஆகம விதிமுறை வழுவாது புனர் நிர்மாணஞ் செய்யும் பாக்கியம் கிடைக்கப் பெற்றமை நாங்கள் செய்த புண்ணிய மென்றே குறிப்பிடவேண்டும். புதிதாகப் பிரதிஷ்டை செய்யப்பட்ட திருத்தொண்டர் அறுபத்து மூவருடனும் 27.01.2002 இல் சிறப்பாகக் கும்பாபிஷேகம் நடைபெற்ற இவ் வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் மூன்று வீதிகளைக் கொண்டு அமைந் திருப்பது முக்கியமானதாகும். உள்வீதி, இரண்டாம் வீதி, வெளி வீதி என அழைக்கப்படும் இவ் வீதிகளில் இரண்டாம் வீதியில் தீர்த்தக்கேணி சித்தாமிர்த புஷ் கரணிக் கட்டடமும், களஞ்சிய விநாயகரும், கற்பக விநாயகரும் வாகன சாலையும் அமைந்திருக்கின்றன. மூன்றாம் வீதி கடைத் தெருவில் (காங்கேசன் துறை வீதி- மானிப்பாய் வீதி- சிவன் வடக்கு வீதி) அமைந்திருக்கிறது.

வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலுக்கு காலத்திற் குக் காலம் ஏற்பட்ட (1985-1996) பாதிப்புக்களை உற்று நோக்கும் பட்சத்தில், இந்த யாழ் நகருக்குவர இருந்த அனர்த் தங்களை, தன் மேல் தாங்கி, எம்மைத் தாயெனக் காத்த வர் வைத்தீஸ்வரரே.

வைத்திலிங்கச் செட்டியார் கந்தப்பர் செட்டியார், வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம். 2002 ஆம் ஆண்டு கும்பாபிஷேக மலரின் பிரதிபாக்கள்

### வரமருளவேண்டும் பஞ்சரதமேறி வந்தே!

வாலாம்பிகை நாயகரே! வண்ணை வைத்தீஸ்வரரே !!
வரமருளவேண்டும் பஞ்சரதமேறி வந்தே!
ஆலாலமுண்ட நீலகண்டரே! தையல்நாயகி மகிழும்
சுந்தரேஸ்வரரே! சுப்பிரமணியரின் அருள் தந்தையே !!
காலாலுன் திருக்கோயில் நாம் கடிதே வலம் வந்தோம்
காத்தருளவேண்டும் ஐயா! பரம கருணாநிதியே சிவனே!
கோலாகலமாய் உன் விழான் கண்டு மகிழ்ந்தோம்
வாலாம்பிகையுடன் வந்து நீ காட்சித்தருவாய் ஐயனே சரணம்!

சிவன் பக்தன்


கிருஷ்ணா நகை மாளிகை
தங்கப் பவுன் நகை விற்பனை
அசல் 22 கரட் தங்க நகைகள் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
இல.09, கன்னாதிட்டி வீதி யாழ்ப்பாணம்
கிளை- கிருஷ்ணா அடகு கடை, 370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்

சாரங்கா
நாணயமாற்று சேவை
சாரங்கா நகைமாடம்
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6972 T.P: 222 6972, Fax.No: 222 8869

Maithely Nagai Madam
மைதிலி நகைமாடம்
99V, Kasthuriyar Road, Jaffna.
Tel: 021-222 7902.
Email: maithilynagaimadam@Gmail.com
Yarl Maithily
யாழ் மைதிலி ஜுவலர்ஸ்
79Z, Sea Street, Colombo-11.
Tel: 2396239

Dulux
let's colour
SHIVAN MOTORS STORES
DISTRIBUTORS FOR:
AKZO NOBEL, PAINTS LANKA (PVT) LTD.
HAYLEYS ELECTRONICS LIGHTING (PVT) LTD.
No.70/1, Manipay Road, Jaffna, Srilanka.
Tel: +94 21 222 2763
Fax: +94 21 222 8647
AkzoNobel


புதுவருடத்தை முன்னிட்டு இன்று தொடக்கம் 01.05.2015 வரை விசேட மலிவு விற்பனை.
மெத்தைகள், ஸ்ரீல் அலுமாரிகள் 7500/-, பிளாஸ்ரிக் கதிரைகள் மற்றும் அனைத்து தளபாடங்களும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
KKJ Work Shop & Sales Center
புதுவருடத்தை முன்னிட்டு அனைத்துத் தளபாடங்களும் விசேட கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொழிற்சாலை: இல.11, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம். தொ.பே. 077 9037 203

வீ.எம்.கே ஜுவல்லரி
வீ.எம்.கே.ஜுவல்லரி
V.M.K.Jewellery
021 720 1117 / 021 222 2515
நியூ வீ.எம்.கே.ஜுவல்லரி
021 227 0038

ந.கஜந்தன்
மின்னும் பொன் நகை
மிஞ்சும் புன்னகை
நியூ மைதிலி ஜுவலர்ஸ்
இல. 38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 7878, 021 221 7877
NO. 38,40, KASTHURIYAR ROAD, JAFFNA.
Tel: 021 221 7878 Fax: 021 221 7877

மங்கலகரமான புதுவருட வாழ்த்துக்கள்
V.S.P
SPECIAL LUNCH OIL
Special V.S.P Gingelly Oil

# வாசகர் திருமுகம்



## நெற் கொள்வனவில் பூநகரி விவசாயிகள் எதிர் கொள்ளும் சவால்

பூநகரிப் பிரதேசத்தில் நெற் களஞ்சியங்கள் இல்லாததால் நெல் சந்தைப்படுத்தும் சபையினரால் அரசின் திட்டப்படி விவசாயிகளிடமிருந்து 2000 கிலோ நெல்லைக் கொள்வனவு செய்வதை முன்னெடுக்க முடியாத சிரமத்தை எதிர்நோக்கி உள்ளனர்.

பூநகரி, மன்னார் வீதியிலிருந்து அரைக் கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள நெல் சந்தைப்படுத்தும் சபைக்குரிய நெற் களஞ்சியக் கட்டடங்கள் புனரமைக்கப்படாமையே இதற்கான காரணமாகும். ஒரு விடுதியும் இரண்டு நெற் களஞ்சிய தொகுதிகளும் கூரையில்லாத நிலையில் காணப்படுகின்றன. இவை புனரமைப்புச் செய்யப்படின் களஞ்சியம் இல்லாத குறை நீங்கும்.

பூநகரி கமநல சேவை நிலையத்துக்கு மேற்படி நெற் களஞ்சியங்களைக் கையளித்து புனர்நிர்மாணம் செய்ய வேண்டியது அவசியமான பணியாகும். நெற் களஞ்சிய வளாகம் 5 ஏக்கர்களுக்கு மேற்பட்ட நிலப்பரப்பைக் கொண்டது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். கமக்காரர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்த இந்தக் களஞ்சியங்கள் போர்க்கால அசாதாரண சூழ்நிலையின் பின்னர் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. இவற்றைப் புனரமைக்கும் விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரி கள் ஆவன செய்ய வேண்டும் என விவசாயிகள் கோரி நிற்கின்றனர்.

*கே.கார்த்திகேசு*
*கறுக்காய்த் தீவு*

## கால் நடைகள் கட்டுப்படுத்தப்படுமா?

பூநகரி 4 ஆம் கட்டையடி, பிள்ளையார் நகர் கிராமத்தில் கட்டாக் காலிகளாக அலைந்து திரியும் கால் நடைகளால் பொது மக்கள் இடையூறுகளை எதிர் கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக இரவு வேளைகளில் வீதிகளில் கும்பலாகக் காணப்படும் இந்தக் கால் நடைகளால் போக்குவரத்துக்கும் பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது.

மேலும், அவசர நோயாளிகளை அம்புலன்ஸ் வண்டியில் எடுத்துச் செல்லும் போதும், இந்தக் கால் நடைகளால் தடைகள் ஏற்படுகின்றன. இதனால் ஏற்படும் தாமதம் காரணமாக நோயாளிகள் உயிரிழக்கக்கூடிய சந்தர்ப்பங்களும் ஏற்படுகின் றன.

இதேவேளை– இங்குள்ள ஜெயபுரம் கிராமத்திலும் இதே நிலைதான் காணப்படுகின்றது.

உரிய அதிகாரிகள் இந்த கட்டாக்காலி கால்நடைகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதே இங்கு வாழும் மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

*மு.தர்மரத்தினம்*
*பொது மக்கள் சார்பாக*

### கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

# மீண்டும் பதிவுக் கோஷம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஓர் கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும் என்ற கோஷம் மீளவும் ஒலிக்கத் தொடங்கியுள்ளது. தேர்தல்கள் எப்போதெல்லாம் வருகின்றதோ, அப்போதெல்லாம் இந்தக் கோஷம் பலமாக ஒலிக்கும். அதன் பின்னர், அது தேய்பிறையாகி விடும். போர் முடிந்த பின்னர் இது வாடிக்கையாக இடம்பெற்று வரு கின்றது.

இதே போன்று தற்போதும், நாடாளுமன்றத் தேர்தலுக்கான அறிவிப்புக்கள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படும் சூழ்நிலையில் மீண்டும் கட்சிப் பதிவு வலியுறுத்தப்பட்டுள்ளது. இதுவரை காலமும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு பதிவுக்கான விடயத்தில் பலமாக அடிபட்டுக் கொண்டாலும், தேர்தலின்போது எந்தப் பிளவுமின்றி ஒன்றாக எதிர்கொள்வார்கள்.

ஆனால் தற்போது நிலைமை வேறாகவே இருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றாக இன்னொரு கட்சியைக் களமிறக்குவதற்கான முயற்சிகள் வலுவேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. புலம்பெயர் தளத்திலுள்ள ஒரு தரப்பினர், இங்குள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அதிருப்தியாளர்கள் ஊடாக இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

நாடாளுமன்றக் கதிரைகளை இலக்கு வைத்து நகர்த்தப்படும் இந்த முன்னகர்வில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற சில கட்சிகளின் முக்கியஸ்தர்களும் விழுந்துள்ளனர் – அல்லது விழுத்தப்பட்டுள்ளனர். இதனாலேயே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதிவு விடயத்தில் கடந்த காலங்களில் அழுங்குப் பிடி பிடிக்கும் தமிழரசுக் கட்சியினர் கூட விட்டுக் கொடுத்துச் செல்வதற்கான முன்னகர்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

இதனாலேயே, நேற்று முன்தினம் இரவு நடந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டத்தில், ஏனைய கட்சிகளால் முன்வைக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு பரிசீலிப்பதற்கு தமிழரசுக் கட்சியும் இணங்கி யுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கட்சிகளை உடைத்து – பிரித்தாளும் தந்திரத்தை மேற்கொள்வதில் வல்லவர். அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் பிளவுபடுத்துவதற்கு முயற்சிக்கின்றார் என்ற குற்றச்சாட்டு தற்போது பலமாக முன்வைக்கப்படுகின்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தற்போதைய நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிளவுபடுத்துவதற்கு எந்த முயற்சியும் செய்ய வேண்டியதில்லை. ஏனெனில், புலத்திலுள்ள ஒரு பகுதியினரும், இங்குள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அதிருப்தியாளர்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை துண்டாடும் நாள் வெகு தொலைவில் இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவறான பாதையில் செல்கின்றது என்று குறைசொல்லிக் கொண்டிருப்பவர்கள் எல்லோருமே, அதனைச் சரியான தடத்தில் பயணிக்க வைப்பதற்கு முயற்சிப்பதற்குப் பதிலாக, கூட்டமைப்பைப் பிளவுபடுத்தி புதுக் கூட்டு அமைத்து நாடாளுமன்றக் கதிரைகளை உறுதிப்படுத்தும் நோக்குடன் செயற்படுகின்ற னர்.

இவ்வாறானதொரு நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதிவு விடயத்தில் தமிழரசுக் கட்சி இறங்கி வந்தாலும், கூட்டமைப்பாக தொடர்ந்து செயற்படுவதற்கு அங்கத்துவக் கட்சிகள் ஒத்து வருமா என்பது கேள்விக் குறியே. ஏனெனில், கூட்டமைப்பைப் பிளவுபடுத்தும் நடவடிக்கையில் அங்கத்துவக் கட்சிகளின் சில முக்கியஸ்தர்களும் முக்கிய பங்காளிகளாகியுள்ளனர்.

அவர்களைப் பொறுத்தவரையில், பதிவை வைத்தே கூட்டமைப்பை சிதறடிப்பது நோக்கமாக இருக்கின்றது. அந்தத் தந்திரத்தை அறிந்த தமிழரசுக் கட்சி இறங்கி வந்து, பந்தை வீசியவர்கள் மீதே திருப்பி பந்தையடித்திருக்கின்றது. ஆனாலும், பிளவுபடுத்த வேண்டும் என்பதை ஒரே நோக்கமாகக் கொண்டு செயற்படுபவர்கள் இன்னும் என்னென்ன புதுப்பிரச்சினைகளைக் கிளப்பக் காத்திருக்கின்றனரோ ?

**பத்தி எழுத்து**

சேரலாதன்

# மாற்றங்களுக்கு வித்திடப்போகும்




இலங்கை நாடாளுமன்றம் மே மாதம் ஐந்தாம் திகதி கலைக்கப்பட்டு ஜூன் மாத இறுதியில் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான பொதுத் தேர்தல் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற முக்கியமான கலந்துரையாடலின்போது இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் தெரிய வருகின்றது.

கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவின் தோல்வியை நிர்ணயிப்பதில் இந்த மூவரும் முக்கிய பங்கு வகித்திருந்தனர். ஒரு சர்வாதிகாரியைப் போன்று செயற்பட்டு முழு நாட்டையும் தனது இரும்புக் கரங்கள் கொண்டு அடக்கி ஆட்சி புரிந்த மஹிந்தவைத் தோற்கடிப்பது இலகுவான காரிய மாக இருக்கவில்லை. ஆனால் மக்களின் ஆதரவுடன் இது சாதித்துக் காட்டப்பட்டது. ஆனாலும் தமிழ் மக்களின் வாக்குகள் மைத்திரிக்கு கிடைக்காமல் போயிருந்தால் மஹிந்தவே இன்று ஆட்சிக் கதிரையில் அமர்ந்திருப்பார்.

இன்றைய அரசியல் நிலைமைகளை ஆராய்ந்து பார்க்கும் போது மைத்திரிக்கும் அவரது அரசுக்கும் அச்சுறுத்தல் விடும் நிலையில் மஹிந்த ராஜபக்ஷ காணப்படுகின்றார். தற்போது தேசிய அரசில் இணைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அவரது ஆதரவாளர்கள் நிறையவே காணப்படுகின்றனர். இவர்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள் எனப்பலரும் உள்ளடங்கியுள்ளனர். மஹிந்தவை மீண்டும் ஆட்சிக் கதிரையில் அமர்த்துவதே இவர் களின் பிரதான நோக்கமாகக் காணப்படுகிறது. இதற்காகத் திரைமறைவில் காய் நகர்த்தும் செயற்பாடுகளில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர். மஹிந்தவுக்கு ஆதரவான கூட்டங்கள் இவர்களாலேயே ஒழுங்குபடுத்தப்படுகின்றன.



இந்த நிலையில் நாடாளுமன்றத் தேர்தல் ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கு உவப்பானதாக இருக்கப் போவதில்லை என்பது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து தேசிய அரசை அமைத்த போதிலும் அங்கும் முரண் பாடுகள் நிறையவே நிலவு கின்றன. பிரதமர் ரணிலுக்கு எதிரான கோஷங்களும் அங்கு எழுப்பப்படுகின்றன. ரணில் பிரதமர் பதவியை வகிப் பதற்குத் தகுதியில்லாதவர் எனவும், பிரதமர் பதவி தமது கட்சியைச் சேர்ந்த ஒருவருக்கே வழங்கப்பட வேண்டும் எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் போர்க்கொடி தூக்கி வருகின்றனர். மஹிந்த ராஜபக்ஷவும் அந்தப் பதவியின் மீது ஒரு கண் வைத்துக் கொண்டு கனவு கண்டு வருகின்றார். தமக்கு ஆதரவு தெரிவிக்கும் கூட்டங்களைத் தமக்கு நெருக்கமானவர்கள் மூலமாக ஒழுங்கு செய்து விட்டு ஒன்றும் தெரியாதவர் போன்று அவர் பாசாங்கு காட்டி வருகின்றார்.

தற்போது தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளிவந்துள்ள நிலையில் தென்னிலங்கையின் அரசியல் நிலவரம் கொந்தளிப்பு நிறைந்ததாகவே மாறிவிடப் போகின்றது.

நாட்டின் வடக்கு மாவட்டங்களிலும் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவ எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் இனிமேல் தேர்தல் தொகுதிக்கு ஒரு நாடாளுமன்ற உறுப்பினரையே தெரிவு செய்ய முடியும். கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது ஒன்பது உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இறுதியாக இடம்பெற்ற வாக்குகள் கணக்கெடுப்பின் போது வாக்காளர் எண்ணிக்கையில் வீழ்ச்சி காணப்பட்டதால், இந்த அவலநிலை ஏற்பட்டுள்ளது. ஏனைய வன்னி மாவட்டங்களிலும் வாக்காளர்கள் எண்ணிக்கையைப் பொறுத்தே நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் அமையப் போகின்றது.

மேலும் கடந்த மாகாண சபை மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களின் போது மக்கள் காட்டிய ஆர்வத்தை நாடாளுமன்றத் தேர்தலின் போது காட்டினால் மட்டுமே கூட்டமைப்பின் சார்பாக அதிக உறுப்பினர்களைத் தெரிவுசெய்ய முடியும்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது தமிழரசுக் கட்சியின் சின்னத்தின் கீழ் போட்டியிட்ட கூட்டமைப்புக்கு 65,119 வாக்குகள் கிடைத்ததால் யாழ். தேர்தல் மாவட்டத்தில் 5 ஆசனங்களை அதனால் கைப்பற்ற முடிந்தது. இதேவேளை– ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கீழ் போட் டியிட்ட ஈ.பி.டி.பி. இற்கு 47,622 வாக்குகள் கிடைத்ததால் 3 ஆசனங்களும், 12,624 வாக்குகளைப் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஓர் ஆசனமும் கிடைத்தன. கூட்டமைப்பைப் பொறுத்த அளவில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்த வாக்குகள் மிகக் குறைவானது என்றே கூற வேண்டும். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தேர்தல்களின் மீதான நம்பிக்கையை அவர்கள் இழந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. அரசியல்வாதிகள் தம்மை ஏமாற்றுவதாக அவர்கள் எண்ணுகின்றனர். தேர்தல் காலங்களில் பரப்புரை மேடைகளில் வழங்கி வாக்குறுதிகள் பல இன்னமும் நிறைவேற்றப்படாதமை அவர்களுக்குக் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும், குடாநாட்டில் உள்ள நிலத்தடி நீரில் எண்ணெய்க் கழிவுகள் கலந்திருப்பது தொடர்பாக அரசியல்வாதிகள் ஆக்கபூர்வமாகச் செயற்பட்டு, தமது துயரத்தைத் துடைப்பதற்கு முன்வரவில்லை என்பதும் மக்களுக்குப் பெரும் குறையாக உள்ளது. நாடாளு மன்ற உறுப்பினர்களில் குறிப்பிட்ட ஒரு சிலரைத் தவிர ஏனையவர்கள் மக்கள் பிரச்சினைகளில் அக்கறை செலுத்துவதில்லை என்ற எண்ணமும் வடபகுதித் தமிழ் மக்களிடம் உள்ளது.

எது எப்படி இருந்தபோதிலும், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் தென்பகுதியில் மட்டுமல்ல, வடக்கிலும் மாற்றங்களை ஏற்படுத்தப் போகின்றது. தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தும் வகையில் அரசியல்வாதிகள் இனி மேலாவது நடந்து கொள்ளாவிட்டால் அவர்கள் பின்னடைவைத் தான் எதிர்கொள்ள நேரிடும்.

> “ ஒரு சர்வாதிகாரியைப் போன்று செயற்பட்டு முழு நாட்டையும் தனது இரும்புக் கரங்கள் கொண்டு அடக்கி ஆட்சி புரிந்த மஹிந்தவைத் தோற்கடிப்பது இலகுவான காரியமாக இருக்கவில்லை. ஆனால் மக்களின் ஆதரவுடன் இது சாதித்துக் காட்டப்பட்டது. ஆனாலும் தமிழ் மக்களின் வாக்குகள் மைத்திரிக்கு கிடைக்காமல் போயிருந்தால் மஹிந்தவே இன்று ஆட்சிக் கதிரையில் அமர்ந்திருப்பார்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இன நலிவுபடுத்தல் சூழ்ச்சி தடுத்து ஒழிக்கப்பட வேண்டும்

ஹெரோயின், கேரளத்துக் கஞ்சா, போதைப் பாக்கு போன்ற போதை வஸ்துக்களின் விற்பனையும் பாவனையும், யாழ். மாவட்டத்தில் அதிகரித்துள்ளன. அதனைத் தடுப்பதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் --

இந்த அழைப்பை விடுத்திருக்கிறார் வடமாகாணத்தின் புதிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜெயசிங்க.

யாழ்ப்பாண மாவட்டத்தில் போதைப் பொருள் விற்பனையைத் தடுக்கும் பணிக்கு விசேட அதிரடிப்படையினரைச் சேவையில் ஈடுபடுத்துவதற்கு பொலிஸ் மா அதிபர் தமக்குப் பூரண அனுமதி வழங்கி உள்ளதாகவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தகவல் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களைக் குறிவைத்து, போதைப் பாக்கு விற்பனை யாழ். மாவட்டத்தில் நடைபெறுகிறது. எனினும் அதனைத் தடுப்பதற்கு உகந்த, காத்திரமான நடவடிக்கையை, சட்டம், ஒழுங்கைக் கண்காணிக்கும், கவனிக்கும் பொலிஸார், மேற்கொள்வதில்லை என்ற குறைபாடு நீண்ட காலமாகவே எமது பிரதேசத்தில் நிலவிவருகிறது.

போதைவஸ்துப் பாவனை வடக்கில், மிகக் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் தடுப்பார் இன்றி அதிகரித்து வருகிறது. இது குறித்து, சட்டம் ஒழுங்கைப் பேணுவதைப் பிரதான கடமையாகக் கொண்ட பொலிஸார் கண்டும் காணாமல், தெரிந்தும் தெரியாதது போன்று ஏனோ தானோ என்ற விதத்தில் செயற்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு பெற்றோர்கள், பாடசாலை அதிபர்கள் மற்றும் சமூகநலன் விரும்பிகளால் தொடர்ச்சியாகத் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

இந்த அசமந்தப் போக்கு, மாணவர்கள் கல்வியில் தறிகெட்டு, போதைக்கு அடிமையாகும் ஆபத்தான நிலையை விதைத்து வருவதாகப் பெற்றோரும், சமூகநலன்விரும்பிகளும் அடிக்கடி சுட்டிக்காட்டி வந்தனர்.

இளைய சமுதாயத்தைச் சீரழிக்கும் உள்நோக்குடன், அப்போதைய அரசின் அதிகாரிகள் இது விடயம் குறித்து தெரிந்தும் தெரியாதது போன்று, ஏன் தாங்களே சூத்திரதாரிகளாக எதுவும் செய்யாதவர்களாக, மௌனிகளாகக் கடமையாற்றி வந்தனர். இது குறித்து 'உதயன்' தனக்குள்ள சமூகப் பொறுப்பை வெளிக்கொணர்ந்து முந்தைய அரசு, தனது பணியாளர்கள், மோசமான முகவர்கள் ஊடாக எங்கள் எதிர்காலச் சமுதாயத்தை பிஞ்சிலே பழுக்க வைத்துச் சீரழிப்பதை (ஏற்கனவே 2014.03.02 இல்) வெளிப்படுத்தி இருந்தமை வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

நாட்டின் புதிய அரசின் மேலிடத்தினர், வடக்கின் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் தறிகெட்டுப் போகாமல் தம்மைத் தாமே தற்காத்துக் கொள்ள உதவுவதில் அக்கறை காட்டுவது வரவேற்கத் தக்கதாகும்.

மிகக் குறிப்பாக, வடக்கின் புதிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜெயசிங்கவின் முனைப்பு, தனது பொறுப்பை, கடமையை மக்கள் பணியை ஓட்டை ஒடிசல் இன்றி மேற்கொள்ள முன்வந்திருப்பது, ஏனையோருக்கு முன்னுதாரணமாக அமையட்டும்.

அதேவேளை, தமிழ்ப் பொலிஸாரின் எண்ணிக்கையை அதிகரித்து தமிழ் மக்களுக்குச் சேவையாற்ற புதிய அரசு முன்வரட்டும். அதனனூடாக இன நல்லுணர்வுக்கும் பெரிய அளவில் பங்களிக்க இயலும்.

# இனவாதம் ஓயாதவரை இலங்கைக்கு மீட்சியில்லை

● ராஜராஜன்

தமிழ் மக்களுக்கு ஒரு சிறிய துரும்பைக்கூட வழங்கக்கூடாது என்பதில் தென்பகுதி இனவாதிகள் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றமை தெளிவாகத் தெரிகின்றது. இனப் பிரச்சினைக்குரிய தீர்வைக் காண்பதில் எந்தவித அக்கறையும் காட்டாத தென்பகுதி அரசியல்வாதிகள் சிறிய விடயங்களையெல்லாம் பெரிதுபடுத்திக் குளிர்காய்வதில் தமது நேரத்தை விரயமாக்கி வருகின்றனர். தற்போது எதிர்க்கட்சித் தலைவர்கள் பதவி, தமிழிலும் தேசிய கீதத்தைப் பாடுதல் ஆகிய விடயங்களில் மூக்கை நுழைத்துள்ள அவர்கள் அந்த விடயங்களைப் பூதாகாரமாக்கி பெரும்பான்மை மக்களின் உணர்வுகளைத் தூண்டுவதில் ஈடுபட்டுள்ளனர்.



இலங்கை மாதாவுக்கு பெருமை சேர்க்கும் வகையில் இசைக்கப்படும் தேசிய கீதம் எந்த மொழியில் அமைந்திருந்தாலும் அதன் அடிப்படை நோக்கத்தில் மாற்றம் ஏற்படுவதில்லை. மொழிகளில் வேறுபாடு காணப்பட்டாலும் தேசிய கீதத்தின் உள்ளடக்கம் மாறுவதில்லை. மேலும் தேசிய கீதத்தை இசைப்பவர்கள் அதன் பொருளை முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டுமானால் தமது தாய்மொழியில் அதை இசைப்பதே மேன்மை தரக்கூடியது. இந்த நிலையில் தமிழ் மொழியைப் பயன்படுத்துபவர்கள் தமது தாய்மொழியில் தேசிய கீதத்தைப் பாடுவதால் இலங்கை மாதாவுக்கு எந்தவிதமான இழிவோ அல்லது கௌரவக் குறைவோ ஏற்படப் போவதில்லை.

மேலும் எதிர்க்கட்சித் தலைவர் பதவி கூட தமிழர்களுக்கு எந்த விதமான உரிமைகளையும் பெற்றுக்கொடுக்கப் போவதில்லை.



நாடாளுமன்ற ஜனநாயகத்தில் இந்தப் பதவியும் முக்கியமான ஒன்றாக அமைந்துள்ளதே தவிர இதற்கென அதிகாரங்கள் எவையுமில்லை.

தற்போதைய இலங்கையின் அரசியல் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து தேசிய அரசொன்றை அமைத்துள்ளன. இதனால் எதிர்க்கட்சி தலைமைப் பொறுப்பை இந்த இரண்டு கட்சி களும் கோருவதற்கு அருகதை இல்லாத நிலை காணப்படுகின்றது. ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் செயலாளரான நிமல் சிறிபால டிசில்வா இன்னமும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் அட்டையைப் போன்று ஒட்டிக் கொண்டிருக்கிறார். அண்மையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அமைச்சர்களாகி விட்ட நிலையிலும், இவர் எதிர்க் கட்சித் தலைவர் பதவியைக் காவல் செய்யும் பாணியில் ஈடுபட்டுள்ளார்.

இனவாதம் என்பது இலங்கையில் நன்கு கிளைபரப்பி வேர்விட்டு வளர்ந்து நிற்கும் பெரியதொரு விருட்சம் போலக் காட்சியளிக்கின்றது. இனவெறி கொண்ட அரசியல்வாதிகளும், மதகுருமார்களும் இந்த விருட்சத்துக்கு நீர் ஊற்றி, உரமிட்டு வருகின்றனர். இதனால் அதன் வளர்ச்சி கட்டுக்கடங்காமல் சென்று கொண்டிருக்கின்றது.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்கு படையினர் மத்தியில் உரையாற்றுகையில் தெரிவித்த கருத்துக்கள் கவனத்தில் கொள்ளத்தக்கன. மக்களுக்குச் சொந்தமான காணிகள் மக்களிடமே வழங்கப்படவேண்டுமென அவர் தெரிவித்தமை அவரது மனச்சாட்சியின் வெளிப்பாடாகவும் இருக்கலாம். ஆனால் தெற்கிலுள்ள மக்கள் மத்தியில் இதே கருத்தை அவரால் வெளிப்படுத்த முடியுமா என்பதுதான் கேள்விக் குறியாகியுள்ளது. ஏனென்றால் அவர் இங்கே கூறிய கருத்துக்கள் தற்போது தெற்கில் எந்த வகையில் பார்க்கப்படுகின்றது என்பதை ஒருவாறு ஊகித்துக் கொள்ள முடியும். ஏனென்றால் தெற்கிலுள்ள இனவாதிகள் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்குச் சார்பான கருத்துக்களை ஒருபோதுமே அனுமதிக்க மாட்டார்கள். இந்த நாட்டின் சாபக்கேடும் அது தான்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தமிழ் மக்களின் வாக்குப் பலத்தினாலேயே தமது பதவிகளைப் பெற்றவர்கள். இந்த நன்றியுணர்வு அவர்களின் மனதில் எப்போதுமே இருக்க வேண்டும். ஆனால் புதிய ஆட்சி மலர்ந்ததன் பின்னர் இதற்கான அறிகுறிகளைக் காண முடியவில்லை. தமிழ் மக்கள் விடயத்தில் பெரியதொரு மாற்றத்தை இவர்கள் இருவரும் ஏற்படுத்தாமையே இவ்வாறு எண்ணத் தூண்டுகின்றது. இனவாதிகள் இவர்களை நெருக்கமாகச் சூழ்ந்து கொண்டு இருக்கும் வரையில் இந்த நிலைதான் நீடிக்கப்போகின்றது.

சுதந்திரம் கிடைத்ததன் பின்னர் 60 ஆண்டுகளுக்கு மேலாக இந்த நாட்டில் இடம்பெற்ற போராட்டங்கள், வன்செயல்கள், இனஅழிப்பு, படுகொலைகள் யாவுமே இனவெறியின் கோரமுகத்தைக் காட்டி நிற்கின்றன. இந்த நாடு எமக்கே உரியது. இங்கு எம்மைத்தவிர வேறு எவரும் உரிமையுடன் வாழவும் கூடாது. உரிமைகளைக் கோரவும் முடியாது எனப் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் கூறும்போது இனங்களுக்கிடையில் உறவுகள் வளருமென்பதை எவரும் எதிர்பார்க்க முடியாது. நாடு மீட்சி பெறுமெனவும் நம்பிக்கை கொள்ளமுடியாது.



# ஆட்டிசம் (Autism) நோய் பற்றி விழிப்பாயிருங்கள்!

டாக்டர் திருமதி கீதாஞ்சலி சத்தியதாஸ்,
*குழந்தை வைத்திய நிபுணர்,*
*யாழ்.போதனா வைத்தியசாலை.*

## இன்று உலக ஆட்டிசம் தினம்

ஆட்டிசம் என்பது மூளையில் ஏற்படும் சில மாற்றங்களால் செயற்பாட்டு விருத்தியில் ஏற்படும் ஒரு பின்னடைவு ஆகும். உலகளாவிய ரீதியில் இந்த நோய் நூறு பிள்ளைகளுக்கு ஒரு பிள்ளைக்கு ஏற்படுகிறது. இலங்கையிலும் இந்த நோய் அதே அளவில் காணப்படுகின்றது. பெண் பிள்ளைகளைவிட ஆண் பிள்ளைகளில் இந்த நோய் கூடுதலாகக் காணப்படுகிறது. இந்த நோயின் அறிகுறிகள் குழந்தைக்கு குழந்தை வேறுபடுகிறது. சில குழந்தைகள் சாதாரணமாக பாடசாலைக்குச் சென்று கல்வி கற்றும் ஆற்றலைப் பெறுகின்றனர். அதே போல் சில பிள்ளைகளுக்கு விசேட கல்வி மற்றும் அன்றாட செயற்பாடுகளுக்கு பிறரில் தங்கியிருக்க வேண்டி இருக்கின்றது.

ஆரம்ப காலத்தில் கண்டுபிடித்து தகுந்த சிகிச்சை அளிப்பதன் மூலம் இதைக் கட்டுப்படுத்தலாம்.

இந்த நோய் பிறப்பிலிருந்து இருப்பினும் முதல் ஆறு மாத காலத்துக்கு கண்டறிவது கடினம். 12–18 மாத கால அளவில் இந்த நோயின் குணங்குறிகள் வெளியே தெரிய வரலாம். சாதாரணமாக ஒரு குழந்தை இந்த வயதில் சுட்டிக் காட்டவும், பெற்றோர் சுட்டிக்காட்டும் போது அதை பார்க்கும் ஒருங்கிணைந்து செய்யும் ஆற்றலைப் பெறுகிறது. 18 மாத அளவில் இது செய்யாவிடின் ஆட்டிசம் நோய் இருக்கலாம் என்பதால் மருத்துவ ஆலோசனை பெற வேண்டும்.

இந்தநோயின் மற்றுமொரு முக்கிய அறிகுறி பேச்சுத் திறனில் பின்னடைவு ஏற்படுதல். தானாக பேசும் ஆற்றல், முகத்தைப் பார்த்துப் பேசு தல் போன்றவற்றில் பின்னடைவு ஏற்படலாம். அனேகமான பிள்ளைகள் ஒருசில வார்த்தைகள் மட்டுமே கூறுபவர்களாக இருப்பர். ஆரோக்கியமான உரையாடல் ஒன்று மேற்கொள்வது இவர்களுக்கு மிகக் கடினம்.

சிறு பிராயத்தில் விளையாட்டு என்பது ஒரு குழந்தையின் விருத்தியில் முக்கிய பங்கு வகிக்கிறது. சாதாரணமான குழந்தைகள் தானாக கற்பனை செய்து விளையாடு வார்கள். ஆட்டிசம் உள்ள குழந்தைகள் விளையாட்டில் பின்னடைவு உள்ளவர்கள். இவர்கள் அதே வயதுடைய மற்றைய பிள்ளைகள் சகோதரர்களுடன் சேர்ந்து விளையாடுவதில் ஆர்வம் இல்லாதவர்களாக இருப்பார்கள். பொருள்களை உயரத்துக்கு ஏற்றவாறு அடுக்குதல், ஒரு விளையாட்டுப் பொருளை முழுமையாக விளையாடுவதை விட அதன் ஒரு பகுதி யுடன் விளையாடுதல் போன்ற அசாதாரண செய்கைகளைச் செய்வார்கள்.

> சிறு பிராயத்தில் விளையாட்டு என்பது ஒரு குழந்தையின் விருத்தியில் முக்கிய பங்கு வகிக்கிறது. சாதாரணமான குழந்தைகள் தானாக கற்பனை செய்து விளையாடுவார்கள். ஆட்டிசம் உள்ள குழந்தைகள் விளையாட்டில் பின்னடைவு உள்ளவர்கள். இவர்கள் அதே வயதுடைய மற்றைய பிள்ளைகள் சகோதரர்களுடன் சேர்ந்து விளையாடுவதில் ஆர்வம் இல்லாதவர்களாக இருப்பார்கள்.

பிள்ளைகள் ஒன்று கூடி விளையாடும் இடத்தில் தனிமையை விரும்புவார்கள். சுற்றுச்சூழலை புறக்கணிப்பவர்கள் போல காணப்படுவர். இதை மீறி இவர்களை வற்புறுத்தினால் கோபம் ஏற்பட்டு நிலத்தில் விழுந்து அழுது அடம் பிடிப்பார்கள்.

சமூக ஈடுபாட்டிலும் அதன் விருத்தியிலும் பின்னடைவுகளைக் காணலாம். பெயர் கூறும் போது அதை நிராகரித்தல், முகம் பார்த்து சிரிப்பதில் விருப்பமின்மை என்பன சில ஆரம்ப காலஅறிகுறிகள். இதை விட புதிய அனுபவங்களை விரும்பாதிருத்தல், பெற்றோரின் அரவணைப்பை நிராகரித்தல், சில வகையான ஒலியை சகிக்க முடியாதிருத்தல், ஆபத்தை உணராதிருத்தல், உயரம் மற்றும் ஆழம் போன்றவற்றுக்குபயமின்மை போன்றன இருப்பின் பெற்றோர்கள்அவதானமாக இருக்க வேண்டும். உடை, உணவு, தின சரி செயற்பாடுகளில் மாற்றம் ஏற்படின் கோபம் ஏற்படுவதன் மூலம் எதிர்ப்பைத் தெரிவித்தல் முக்கிய அறிகுறியாகும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் சில பிள்ளைகள் தங்களைக் கடித்தல், தலையை தரையில் அடித்தல் போன்ற தன்னைத்தானே காயப்படுத்தும் செயல்களில் ஈடுபடுவார் கள்.

ஆட்டிசம் உள்ள சிறுவர் களில் 10 வீதமானவர்கள் உன்னதமான செயல்கள், கண்டுபிடிப்புக்கள் செய்பவர்கள், விஞ்ஞானிகள், இசைமேதைகளாகஇருக்கவாய்ப்பு உண்டு. அல்பேட் ஜன்ஸ்டைன், பில் கேட்ஸ் போன்றவர்கள் இவ்வாறான நோய் உள்ளவர்கள்.

ஆட்டிசம் உள்ள பிள்ளைகளை ஆரம்பகாலத்தில் அடையாளம் கண்டபின்னர் அதற்குரியசெய்முறை பயிற்சிகள் வழங்கப்படும். கடந்த ஒரு வருட காலமாக இவ்வாறான சிகிச்சை முறை நமது பிரதேசத்திலும் நடைபெற்று வருகின்றது. இந்த நோயால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் பெற்றோருக்கு இந்த நோய் பற்றி ஒரு சங்கடமும் பயமும் ஏற்படுகின்றது. ஆனால் இதை கட்டுப்படுத்தி சாதாரண விருத்தியுள்ள பிள்ளையாக மாற்றமுடியும். இதற்கு உக்கிரமான செயற்பாட்டு பயிற்சிகள் (Behaviour therapy) கொடுக்க வேண்டும்.

இவ்வாறான குழந்தைகள் தங்களுக்கென்ற உலகில் இருப்பதால் பெற்றோர்கள் அதை உணர்ந்து படிப்படியாகஅவர்களை வெளியே கொண்டு வரவேண்டும். இதற்கு உதவி செய்ய தேர்ச்சிபெற்ற செய்முறை பயிற்சியாளர்கள் உள்ளனர். விசேட தேவை ஆசிரியர்கள் இவ்வாறான குழந்தைகளின் கல்வித் தரத்தை உயர்த்தஉத்திகளைக் கையாளுவார்கள்.

சமுதாயத்தில்நிலவும்மூடநம்பிக்கைகள், உற்றார், உறவினர்களின் பேச்சு போன்வற்றை தவிர்த்து, ஒரு குழந்தையின் எதிர்காலத்தை மேம்படுத்த ஆட்டிசம் நோயை முன்கூட்டியே கண்டறிந்து அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டியது நமது கடமையாகும்.

# உலக ஆட்டிசம் தினம்

மருத்துவர் சி.யமுனாநந்தா.

"ஆட்டிசம் என்றால் என்ன?" என்பது பொதுவான கேள்வி, ஆட்டிசம் என்னும் நோய் நிலை சிறுவர்களில் பின்வருமாறு அடையாளங்கள் காணப்படுகின்றன. சமூகத் தொடர்பாடல் குறைவானவர்களாகச் சிறுவர்கள் காணப்படல், கதைத்தல் குறைவு, மட்டுப்படுத்தப்பட்ட ஆர்வங்களும், செயல்களும் சத்தம், வெளிச்சம் இவற்றுக்கு அதிகம் பதற்றப்படல்.

இந்த நோயினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களில் காணப்படும் மேலதிக அறிகுறிகள் காரணம் கூற முடியாத கோபம். அசாதாரண விருப்பங்கள், சாதாரண சிறுவர்கள் விரும்பாததைச் செய்வர். அசாதாரண அங்க அசைவுகள். சூழல் மாற்றத்தை எதிர்கொள்ள முடியாதவர்களாகக் காணப்படுவர்.

ஆட்டிசம் சிறுவர்களின் தொடர்பாடலில் காணப்படும் மாற்றங்கள்.

ஒரு வயது வரும் போதும் தமது பெயரைக்கூப்பிடும்போது அதற்கு மறுதலிக்க மாட்டார்கள்.

ஒரு வயது வரும் போதும் குறிப்பிட்டுக்காட்டமாட்டார்கள்.

முன்னர் உபயோகித்த சொற்களை உபயோகிக்க மாட்டார்கள்.

ஒன்றரை வருடங்கள் வயதாகியும் கதைத்தல் குறைவு.

இரண்டு வயதாகியும் சொற்றொடர்களைக் கூறாது இருத்தல்.

குறித்த சில ஓசைகளை மாத்திரம் கேட்டல், மனித குரல்களை கேட்க விரும்பாமை.

சில பேச்சுக்களையே திரும்பத்திரும்பப் பேசல்.

குடும்பத்தில் ஏனையவர்களுடன் பழகும்போது, கதைக்கும் போது, வேறு திசையில் பார்த்தல்.

சிரிக்கும் போது பதிலுக்கு சிரிக்காமை.

ஏனைய சிறுவர்களுடன் பழக விருப்பமின்மை, விளையாட்டுக்களில் தனிமையாக விளையாடவே விருப்பம்.

சில விளையாட்டுப் பொருள்களுடனேயே விளையாடல் போன்ற ஆட்டிசம் சிறுவர்களில் காணப்படும்.

இத்தகைய சிறுவர்கள் ஆரம்பத்திலேயே இனங்கண்டு வழிநடத்தினால் அவர்களின் செயற்றிறனை அதிகரிக்கலாம். ஆட்டிசம் நோயைக் குணப்படுத்த முடியாது. ஆனால் அதனை இனம் காணாது சிரமப்படும் பெற்றோருக்கு உதவ முடியும்.

# வலைத்தளங்களில் கலக்கும் அமிதாப்

டில்லி,ஏப்.2

ஹிந்தித் திரைப்படங்களில் சூப்பர் ஸ்ரார் ஆகத் திகழும் அமிதாப்பச்சன், நவீன தகவல் தொடர்பு சாதனங்களை கையாள்வதில் மிகவும் திறமையுடையவர்.



பேஸ்புக், ருவிற்றர் போன்ற சமூக வலைத்தளங்களில் அமிதாப்பால் பதிவேற்றப்படும் கருத்துகள் மற்றும் சுவாரசியமான தகவல்கள் அவரது ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்துள்ளன.

அந்த வகையில் 4 கோடி ரசிகர்கள் அவரை வலைத்தளங்களில் பின் தொடர்ந்துள்ளனர்.

ருவிற்றரில் 1 கோடியே 40 லட்சம் பேரும், பேஸ்புக்கில் 2 கோடிபேரும், அவரது சொந்த வலைப்பக்கத்தை 60 லட்சம்பேரும் பின் தொடர்ந்துள்ளனர். தனது ரசிகர்கள் குறித்த கருத்தை அமிதாப் ருவிற்றர் வலைத்தளத்தில் நேற்றுத் தெரிவித்துள்ளார். 4 கோடி பேர் என்ற எண்ணிக்கையையும் தாண்டி, அதிகளவான ஆதரவாளர்களைப் பெற்றுச் சாதனை படைக்கும் நிலையை அமிதாப் அண்மித்துள்ளார். (14)



கொலம்பியாவின் நவீன கண்காட்சியகம் ஒன்றில் கலைஞர்களால் வரையப்பட்ட ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

# யேமனுக்கு நிவாரணத்தை அனுப்பியது ஈரான் அரசு

சனா, ஏப்.2

யேமன் நாட்டின் தலைநகரான சனா உள்ளிட்ட பல்வேறு நகரங்கள் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களால் கைப்பற்றப்பட்டதால் அந்நாட்டில் உள்நாட்டு போர் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது.

ஆறாவது நாளாக சவுதி தலைமையிலான விமானப்படை தாக்குதல்களின் போது ஹவுத்தி கிளர்ச்சியாளர்களின் பிடியில் இருந்த ஆயுதக் கிடங்குகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. ஏடன் துறைமுகம் பகுதியில் முதன்முறையாக நேற்று கப்பல்படை மூலமும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையே, ஷியா இனத்தை சேர்ந்த ஹவுத்தி கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுத உதவி செய்துவருவதாக குற்றம்சாட்டப்படும் ஈரான், அண்மையில் யேமனுக்கு 19 தொன் மருந்துப் பொருள்கள் மற்றும் 2 தொன் உணவுப் பொருள்களை அந்த நாட்டின் செம்பிறைச் சங்கம் மூலமாக அனுப்பி வைத்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும், ஈரானால் விமானம் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட அந்த நிவாரணப் பொருள்கள் யேமனின் எந்த பகுதியில் தரை இறக்கப்பட்டன என்பது தொடர்பாக தெளிவான தகவல் எதுவும் வெளியாகவில்லை. (14)

# தொழிலதிபருக்கு 25 வருடங்கள் சிறை

பாங்கொக், ஏப்.2

தாய்லாந்தில் பொழுது போக்குத் தொடர்பான தொழிலொன்றை நடத்தி வரும் தொழிலதிபர் ஒருவர் முடியரசு குறித்தும், அரச குடும்பத்தினர் குறித்தும் இழிவுபடுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அது தாய்லாந்துச் சட்டப்படி குற்றமாகக் கருதப்படுவதால், அந்த நபர் மீது இராணுவ நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. விசாரணையில் தொழில் அதிபர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளமையால் 25 வருடங்கள் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அது போன்ற குற்றத்துக்கு அண்மையில் தான் பெரிய அளவிலான தண்டனை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (14)

# யேமனிலிருந்து 502 பாகிஸ்தானியர்கள் மீட்பு

இஸ்லாமாபாத்,ஏப்.2

கூட்டுப் படைகளின் வான்வழித் தாக்குதல்களால் பதற்றம் ஏற்பட்டுள்ள யேமன் நாட்டில் சிக்கித் தவித்து வந்த 502 பாகிஸ்தானியர்கள் விமானம் மூலம் நேற்று முன்தினம் தாயகம் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

யேமனில் சிக்கியுள்ள 3 ஆயிரம் பாகிஸ்தானியர்களை அங்கிருந்து பத்திரமாக வெளியேற்ற பிரதமர் நவாஸ் ஷெரீப் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தார். அதனையடுத்து யேமன் தலைநகர் சனாவிலிருந்து அந்த நாட்டின் ஹதைதா நகருக்குசாலைவழியாகஅழைத்து வரப்பட்ட 502 பாகிஸ்தானியர்கள், பாகிஸ்தான் விமானம் மூலம் கராச்சி நகரை வந்தடைந்தனர்.

அவர்களில் 326 பேர் மற்றொரு விமானத்தின் மூலம் தலைநகர் இஸ்லாமாபாத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

# தீவிரவாதிகளிடமிருந்து திக்ரித் நகர் மீட்பு



திக்ரித்,ஏப்.2

ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் வசமிருந்த சதாம் உசேனின் சொந்த நகரான திக்ரித் நகர் மீட்கப்பட்டுள்ளதாக அந்த நாட்டின் அரச தரப்பில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஈராக்கிலும், சிரியாவிலும் ஐ.எஸ். தீவிரவாதிகள் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். ஈராக் மற்றும் சிரியாவின் சில பகுதிகளைக் கைப்பற்றியுள்ள ஐ.எஸ். தீவிரவாதிகள் தனிநாடு உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். தொடர்ந்து நாசவேலைகளிலும் ஈடுபட்டு வருகிறார்கள்.

அதேவேளை, தீவிரவர்திகளைக் குறி வைத்து அமெரிக்கா போர் விமானங்கள் மூலமாக வான் வழித் தாக்குதல்களை நடத்தி வருகின்றது. தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்காவும், அதன் நேச நாடுகளும்கடந்தஓகஸ்ட்மாதம் தொடக்கம் வான்வழித் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

அத்துடன் தீவிரவாதிகள் கைப்பற்றியுள்ள நகரங்களை மீட்கும் நடவடிக்கையில் அந்த நாட்டு இராணுவம் தற்போது தீவிரம் காட்டி வருகின்றது. ஐ.எஸ். தீவிரவாதிகளின் வசமிருந்த முன்னாள் ஜனாதிபதி சதாம் உசேனின் சொந்தநகரமான திக்ரித்தை மீட்கும் முழு முயற்சியில் அந்த நாட்டு இராணுவத்தினர் ஈடுபட்டிருந்தனர். அதற்காக அங்கு 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஈராக் இராணுவவீரர்களும், ஈரான் ஆதரவு பெற்ற ஷியா பிரிவு போராளிகளும், உள்ளூர் சன்னி பிரிவு பழங்குடியினர்களது ஆதரவுடன் தீவிரவாதிகளுடன் கடுமையான போரில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதற்கமைவாக, கடந்த மாதம் முற்பகுதியில் திக்ரித் நகருக்குள் நுழைந்த அந்த நாட்டு இராணுவத்தினர் அதன் வடபகுதியில் உள்ள காதிசியா மாவட்டத்தைக் கைப்பற்றினர். தொடர்ந்து திக்ரித் நகரில் உள்ள பொது மருத்துவமனைக்குள்ளும் அமெரிக்க இராணுவத்தின் உதவியுடன் நுழைந்தனர்.

தற்போது திக்ரித் நகரை அந்த நாட்டு இராணுவம் மீண்டுள்ளதாகவும், அது ஐ.எஸ். தீவிரவாதிகளுக்குப் பலத்த பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாகவும் ஈராக் பிரதமர் ஹைடர் அல்- அபாதி, மற்றும் அந்த நாட்டின் மூத்த இராணுவ அதிகாரி அல்-அபாதி ஆகியோர் தெரிவித்துள்ளனர். (14)

# கண்ணீர் வராத வெங்காயம் தயார்

டோக்கியோ, ஏப்.2

வெங்காயத்தை உரிக்கும் வேளையிலும், நறுக்கும் வேளையிலும் கண்ணீர் வருவதைக் கண்டு, அந்தக் கஷ்டம் அடுத்த தலைமுறையினருக்கும் தொடர வேண்டாம் என்று நினைத்த ஜப்பானிய வேளாண்மை அறிவியல் துறையினர், உரித்தாலும், நறுக்கினாலும் அதை மேற்கொள்வோரது கண்களில் இருந்து கண்ணீரை வரவழைக்காத நவீன ரக வெங்காயத்தைக் கண்டு பிடிப்பதில் தற்போது வெற்றியடைந்துள்ளனர்.

வெங்காயத்தில் கத்தி படும் வேளையில் அது வெளியேற்றும் வேதிக்கலவை தான் அந்தக் கண்ணீருக்கான காரணம் என்பதைக் கண்டறிந்த ஜப்பானிய ஆராய்ச்சியாளர்கள், அந்த வேதிக்கலவை நீக்கப்பட்ட வெங்காய வித்துக்களை அண்மையில் உருவாக்கியுள்ளனர். அவற்றை நடுகை செய்து நவீன வகை வெங்காயங்களை விளைவித்து தற்போது சாதனை படைத்துள்ளனர்.

அதற்கான காப்புரிமையைப் பெற்றுள்ள ஒரு ஜப்பானிய நிறுவனம், அந்த வெங்காயம் வர்த்தக ரீதியாக விற்பனைக்கு வருமா என்பது தொடர்பாக கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை.(14)



# யேமனில் மக்கள் தவிக்கின்றனர் நாடு திரும்பிய இந்தியர் தெரிவிப்பு

டில்லி,ஏப்.2

யேமனின் தலைநகர் சனாவில் இரவு முழுவதும் குண்டு மழை பொழிவதாக நாடு திரும்பிய இந்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

யேமனில் தாக்குதல் அதிகமாகவுள்ள தலைநகர் சனா, மற்றும் துறைமுக நகரமான ஏடன் ஆகியவற்றில் இருந்து இந்தியர்களை மீட்க இந்திய வெளியுறவுத் துறை ஏற்பாடு செய்துள்ளது.

இதனிடையே, தனிப்பட்ட முறையில் இந்தியர்கள் பலர் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை சுமார் 80 பேர் யேமனிலிருந்து கட்டார் விமானம் மூலம் டோகா சென்று, பின்னர் இந்தியாவை வந்தடைந்துள்ளனர். யேமனில் சூழல் மோசமானதாக உள்ளது.

பசிக்கு உணவு இல்லை, தண்ணீர் கூட இல்லை.

இந்தியத் தூதரகம் உதவிகளைச் செய்தா லும், மக்கள் பெரும் சிரமத்தில் உள்ளனர், என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சவுதி அரேபிய வான் பரப்பில் விமானங்கள் பறக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளதால், அங்கிருந்து வெளியேறுபவர்களுக்கு பெரும் இடையூறு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (14)

# அமெரிக்காவுக்கு ஆபத்து

வொஷிங்டன்,ஏப்.2

ரஷ்யாவின் ஜனாதிபதி விளாடிமிர் புடினை விட ஜனாதிபதி ஒபாமாவே அமெரிக்காவுக்கு ஆபத்தைத் தரக்கூடியவர் என்றும் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த மூன்றில் ஒருவர் கருதுவதாக புதிய ஆய்வு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இணையத்தளம் வழியாக இந்த மாதம் நடத்தப்பட்ட ஆய்வொன்றில் அமெரிக்காவுக்கு அதிக ஆபத்தைத் தரக்கூடிய நபர் யார் அல்லது நாடு எது என்ற கேள்விக்கு, 2 ஆயிரத்து 809 நபர்கள் தங்கள் கருத்துகளை பதிவாக்கியுள்ளனர். அதில் சுமார் ஆயிரத்து 83 பேர் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்கள்.

ஆயிரத்து 59 பேர் குடியரசுக் கட்சியைச் சேர்நதவர்கள். இந்தக் கருத்துக் கணிப்பில் ஒபாமாவே அதிக அச்சுறுத்தல் தரக்கூடிய நபர் என குடியரசுக்கட்சியைச் சேர்ந்தவர்களில் 35 சதவீதம் பேர் தெரிவித்துள்ளனர். (14)



நைஜீரியாவின் ஜனாதிபதித் தேர்தல் வெறிக்களிப்பில் அங்குள்ள மக்கள்.

# தீவிரவாதிகளின் வெறிச்செயல் 30 பேரின் தலை துண்டிப்பு



டமாஸ்கஸ், ஏப்.2

ஐ.எஸ் தீவிரவாதிகள் சிரியாவில் உள்ள கிராமம் ஒன்றுக்குள் புகுந்து 30 பேரின் தலையைத் துண்டித்துக் கொலை செய்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஐஎஸ் தீவிரவாதிகளின் வெறியாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்ற நிலையில், மத்திய சிரியா மாகாணத்தில் உள்ள ஹாமாவின் அல் மபுஜாக கிராமத்திற்குள் நேற்று முன்தினம் புகுந்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அந்தத் தாக்குதல் சம்பவங்களின் போது பெண்கள், குழந்தைகள் உட்பட 30 பேர் உயிரிழந்துள்ளதாக சிரியாவின் மனித உரிமை கண்காணிப்பு குழு தெரிவித்துள்ளது.

அன்றையதினம் அதிகாலை 2.30 மணியில் இருந்து 6.30 மணிவரை நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவங்களின் போது பலரின் தலைகளைத் துண்டித்தும், வீடுகளுக்குள் வைத்துத் தீவைத்து எரித்தும் தீவிரவாதிகள் கொன்றுள்ளனர். (14)

# ஓரினச் சேர்க்கையாளர்களை அங்கீகரிக்கும் ஜப்பான்

டோக்கியோ, ஏப்.2

ஜப்பானில் முதன் முறையாக டோக்கியோ மாவட்டத்தில், ஓரினச் சேர்க் கையாளர்களுக்கான சமூக அங்கீகா ரம் வழங்கப்பட்டுள்ளது.

மாவட்டந்தில்உள்ள ஷிபுயா வார்ட் உள் ளூர் சபையில் நேற்று ஓரினச் சேர்க்கையாளர்களுக் கான சமூக அங்கீகாரம் வழங்கப்படுவதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

இன்று முதல் அது நடைமுறைக்கு வருகிறது. அந்த அங்கீகாரத்தின் காரணமாக இனிமேல் ஓரினச் சேர்க்கையாளர்களுக்கு திரு மண சான்றிதழ்கள் வழங்கப்படும். அதனால் சமூகத்தில் அவர் களும் சாதா ரண மனிதர் களைப் போல் வாழ முடியும். வரிச் சலுகைகள், சமூகப் பாதுகாப்பு மற்றும் சொத்துரிமை என்பனவும் சராசரி மனிதனுக்கு கிடைக்கக்கூடிய அனைத்துச் சலுகைகளும் அவர்களுக்கு கிடைக்கப் பெறவுள்ளன. ஓரினச் சேர்க்கையாளர்கள் உரிமை ஆர்வலர்கள், வழக்கறிஞர்கள், அரசியல் வாதிகள் எனப் பலர் அந்த முடிவை மகிழ்ச்சியுடன் கொண்டாடி வருகின்றனர். அதே நேரம் அதற்கான விமர்சனங்களும் அங்கு அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (14)

# ஆட்சியை கைப்பற்றினார் முகம்மது புகாரி




அபுஜா, ஏப்.2

நைஜீரியாவில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளர் ஒருவர் முதன் முறையாக அந்த நாட்டின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். தனது தோல்வியை ஒப்புக்கொண்ட தற்போதைய ஜனாதிபதி குட்லக் ஜோனாதன், தேர்தலில் தன்னைத் தோற்கடித்த எதிர்க்கட்சி வேட்பாளரான முகம்மது புகாரிக்கு தொலைபேசி மூலம் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

குட்லக் ஜோனாதனை விட முகம்மது புகாரி 27 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையில் இருப்பதாக அதிகர்ரப்பூர்வமற்ற தகவல்கள் தெரிவித்துள்ளன. அங்குள்ள பல மாநிலங்களில் வாக்கு எண்ணிக்கை முடிவடைந்துள்ளதாக, அந்த நாட்டின் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. நடைபெற்ற தேர்தலில் முறைகேடுகள் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும், தேர்தல் கண்காணிப்பாளர்கள், நியாயமான முறையில் தேர்தல் நடைபெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் அமைதியாகவும், நியாயமான முறையிலும், சுதந்திரமான முறையிலும் நடைபெறும் என வாக்குறுதி அளித்தேன். அந்த வாக்குறுதிகள் உண்மை என்பதை தேர்தல் முடிவுகள் காட்டியுள்ளன எனக் குட்லக் ஜோனாதன் அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

போகோஹாரம் தீவிரவாதிகளின் தாக்குதல்களால் மோசமாகப் பாதிக்கப்பட்ட போர்னோ மாகாணத்தில் மட்டும் புகாரிக்கு 94 சதவீத வாக்குகள் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (14)



# யேமனில் 62 சிறுவர்கள் சாவு

## யுனிசெப் அறிவிப்பு

ஜெனிவா, ஏப்.2

யேமன் நாட்டின் தலைநகரான சனா உள்ளிட்ட பல்வேறு நகரங்கள் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களால் கைப்பற்றப்பட்டதால் அந்த நாட்டில் உள்நாட்டுப் போர் உச்சக் கட் டத்தை அடைந்துள்ளது.

ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் மீது சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப்படைகள் வான் வழித் தாக்குதல்களையும் கடந்த வாரம் ஆரம்பித்துள்ளன. அதில் கிளர்ச்சியாளர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளதுடன், அவர்களின் நிலைகளும் குண்டுவீச்சில் அழிக்கப்பட்டுள்ளன. அதே சமயம் அந்தத் தாக்குதல் சம்பவங்களின் போது கடந்த வாரத்தில் மட்டும் 62 சிறுவர்கள் கொல்லப்பட்டதுடன், 30 பேர் படுகாயமடைந்துள்ளதாக ஐ.நா.வுக்கான குழந்தைகள் நல அமைப்பான யுனிசெப் தெரிவித்துள்ளது.

சிறுவர்களுக்கான,பாதுகாப்பு மிக அவசியமாகும். அதனை அனைத்துத் தரப்பினரும் உணர்ந்து, சிறுவர்களைப் பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும் என்றும் யுனிசெப் அமைப்பின் யேமன் பிரதிநிதி ஜூலியன் ஹார்னீஸ் வலியுறுத்தியுள்ளார்.

தற்போது நடைபெற்றுவரும் தாக்குதல்களால் யேமனில் கல்வி மற்றும் சுகாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், ஏற்கனவே ஊட்டச்சத்துக் குறைபாடுகளுடன் சிறுவர்கள் பரிதவிக்கும் நிலை யில், உணவுப் பஞ்சமும் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிகளவான சிறுவர்கள் அச்சத்தில் உறைந்து போயுள்ள நிலையில் அவர்கள் சிறுவர் போராளியாகவும் மாற்றப்படுவதாக யுனிசெப் குற்றஞ்சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (14)

# உலகின் வயதான பாட்டி சாவு

டோக்கியோ,ஏப்.2

உலகின் வயதான பெண் எனக் கருதப்படும் மிசாவோ ஒகாவா தனது 117 வயதில் ஜப்பானில் நேற்று உயிரிழந்தார். உள்ளூர் நேரப்படி நேற்றுக் காலை 7 மணிக்கு அவர் உயிரிழந்துள்ளதாக அவர் தங்கி இருந்த மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த மாதம் தமது பிறந்த நாளைக் கொண்டாடிய அவர், மூன்று பிள்ளைகளின் தாய் ஆவார். மேலும் நான்குபேருக்குப்பாட்டி மற்றும் ஆறு பேருக்கு கொள்ளுப்பாட்டியும் ஆவார்.19ஆம்நூற்றாண்டில் பிறந்து உயி ரோடு வாழ்ந்து வந்தவர்களில் ஒருவராக அவர் கருதப்பட்டு வந்தார்.



மிசாவோ ஒகாவா 1898 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5 ஆம் திகதி பிறந்தார். தனது 114 வயதில் உலகின் மிக அதிக வயதான பெண் என்று கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் அவரது பெயர் பதிவானது. ஜப்பான் மக்கள் உலகில் நீண்ட ஆயுள் உடையவர்கள்என்றும்அறியப்பட்டுள்ளனர். தற்போது மிசாவோ ஒகாவா இறந்துள்ளதால், அமெரிக்காவைச் சேர்ந்த 116 வயதுடைய ஜெர்டுர் வியவர் என்பவர் உலகின் மிகஅதிகவயதானபெண்என்றபெருமையைப் பெற்றுள்ளார். (14)

# வர்ணம் தீட்டலாம் வாங்க...





## நம்பினால் நம்புங்கள்

- படிப்பதும், கனவு காண்பதும் மூளையின் வெவ்வேறு பகுதிகளில் தூண்டப்படும் செயல்களாகும். அதனாலேயே நாம் கனவு காணும் போது படிக்க முடிவதில்லை!
- அனைத்துத் துருவக்கரடிகளும் ஆழ்துயில் கொள்வதில்லை. கர்ப்பிணியாக இருப்பவை மட்டுமே அப்படி உறங்குகின்றன.
- தேனீயால் தேன் ஏற்கனவே ஜீரணம் செய்யப்பட்டிருப்பதால், அது எமது உடலிலும் எளிதில் ஜீரணமாகும்.
- நூலகங்களில் அதிகம் திருடப்பட்டவை என்ற சாதனையை படைத்திருப்பது கின்னஸ் சாதனைப் புத்தகமே!

# ராமனும் பேசும் கிளியும்



யார் எது சொன்னாலும் உடனே நம்பி விடுவான் ராமன். ஒரு நாள் சந்தைக்கு அவன் போனபோது ஒரு வியாபாரி ஒரு கூண்டுக்குள்.. கிளி ஒன்றை விற்பனைக்காக வைத்திருந்தான், 'இந்தக் கிளி பேசும் கிளி' என்றான். ராமனும் நூறு ரூபாய் கொடுத்து அந்தக் கிளியை வாங்கினான்...வீட்டில் அதற்குப் பேசப் பழக்கினான்.ஒரு மாதம் ஆகியும் அந்தக் கிளி பேசவில்லை.. அதை அவன் எடுத்துக்கொண்டு.. தான் அதை வாங்கிய வியாபாரியிடம் சென்றான். அந்த வியாபாரியோ. அந்தக் கிளியை வாங்கி . பரிசோதிப்பது போல பாசங்கு செய்து . 'இந்த கிளிக்குக் காது கேட்காது.அதனால் நீங்கள் சொல்வதைக் கேட்டு அதனால் பேச இயலவில்லை..' என்று சொல்லி வேறு ஒரு கிளியைக் காட்டி ..'இதை வாங்கிக் கொள்ளுங்கள்.. இது பேசும்..' என்றான். ராமன் மீண்டும் ஒரு நூறு ரூபாய் கொடுத்து அந்தக் கிளியை வாங்கினான். அதற்கும் பேசக் கற்றுக்கொடுத்தான். அதுவும் பேசவில்லை. அப்போது ராமனது நண்பர் ஒருவர் வந்தார்.அவரிடம் ராமன் நடந்ததைக் கூறினான். உடனே அந்த நண்பர்' அடடா .. என்னை முதலிலேயே கேட்டிருக்கலாமே .. அந்த வியாபாரி ஒரு புளுகன்..பொய் சொல்லி வியாபாரம் செய்வதே அவன் பிழைப்பு' என்றான். ராமன் தான் ஏமாற்றப்பட்டதை எண்ணி மனம் வருந்தினான்.யார்..என்ன சொன்னாலும் அதைக் கேட்காமல் நமது அறிவை உபயோகித்து .. அது சாத்தியமா..என்று யோசித்துச் செயல்படவேண்டும்

# பெண்களின் எதிர்பார்ப்புகள்

பெண்கள் அனைவருமே தனக்கு வருபவர், இவ்வாறு இருக்க வேண்டும் என்று ஒருசிலவற்றை பட்டியலிட்டு மனதில் வைத்திருப்பார்கள்.அத்தகைய எதிர்பார்ப்பு உள்ளது போல் கிடைத்துவிட்டால், அதைவிட அதிர்ஷ்டசாலி யாரும் இருக்க முடியாது என்றெல்லாம் தோன்றும். அதிலும் திருமணம் என்று வந்துவிட்டால், எதிர்பார்ப்புக்கள் கண்டிப்பாக இருக்கும். பொதுவாக பெண்கள் மனதிலும் இருக்கும் எதிர்பார்ப்புக்கள் என்னவென்று பார்க்கலாம்.

அனைவரது மனதில் இருக்கும் எதிர்பார்ப்புக்களில் முக்கியமானது காதல் தான். தனக்கு வருபவர் தன் மீது சொல்ல முடியாத அளவிலும், என்றும் மறக்க முடியாத அளவிலும் காதல் செய்ய வேண்டும். மேலும் அத்தகைய காதலை அழகான வழியில் வெளிப்படுத்தி, இருவருக்குள் இருக்கும் உறவை நன்கு வலுபடுத்த வேண்டும் என்ற ஆசை பெண்களுக்கு அதிகமாகவே இருக்கும்.

நல்ல புரிதல் இருந்து விட்டால், வாழ்க்கையில் பிரச்சினை இருக்காது. எனவேதுணையாக வருபவர், தன்னை, தன் ஆசை, விருப்பம் போன்றவற்றை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். தனது உணர்வுகளுக்கு மதிப்பு கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் எல்லா பெண்களுக்குமே இருக்கும்.

நல்ல ஆரோக்கியமான உறவில், கணவன் மனைவி காதலர்கள் இருவருக்கும், ஒருவர் மீது ஒருவர் நல்ல அக்கறையுடன் இருக்க வேண்டும் என்ற ஆசையானது இருக்கும். இந்த உணர்வு அனைவருக்கும் பொதுவாக இருப்பவையே. இத்தகைய அக்கறையை தமக்கு வரும் துணை, நம்மீது வைத்திருந்தால், வாழ்வில் எத்தகைய கஷ்டம் வந்தாலும்,தம்மை பார்த்துக் கொள்ள ஒருவர் உள்ளார் என்ற எண்ணத்தில் மன உறுதியுடன் செயற்பட்டு நன்கு முன்னேற முடியும்.

உறவுகளில் மிகவும் முக்கியமானவைகளில் ஒன்று தான் நம்பிக்கை. ஒருவர் மீது நம்பிக்கை இருந்தால்,வாழ்நாள் முழுவதும் சந்தோஷம் நிலைக்கும். அதுவே கொஞ்சம் குறைந்ததாலும், அவை வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்து விடும். எனவே அனைவரும் தனக்கு வரும் துணை தம் மீது முதலில் நம்பிக்கை உள்ளவராக இருக்கவேண்டுமென்றுநினைப்பார்கள்.




# ஒரு கேள்வி ஏற்படுத்தும் மாற்றம்



எமது இன்றைய வாழ்க்கை, நேற்றைய சிந்தனை மற்றும் செயல்களின் விளைவு. நேற்று என்ன விதைத்தோம் என்பதை விவரிக்கும் அறுவடையே வாழ்க்கை. எப்படி இருந்திருக்கிறோம், எப்படி வாழ்ந்திருக்கிறோம் என்பதை நாம் சொல்லாமலேயே எமது வாழ்க்கை உரத்துச் சொல்லும். விதைப்பவன் யார் கண்ணுக்குத் தெரிவதில்லை என்று நினைத்து கோணல் மாணலாக இன்று விதைத்துச் செல்லலாம். ஆனால் வளரும் பயிர் நாளைக்கு அதைக் கண்டிப்பாகக் காண்பித்துக் கொடுக்கும்.

எமது வாழ்க்கைக்கு நாமே பிரம்மாக்கள். எமக்கு அதை எப்படியும் உருவாக்கும் சக்தி இருக்கிறது. ஆனால் உருவாக்கிய பின்னர் அதை நாங்கள் சந்தித்தாக வேண்டும். நாங்கள் அதற்குப் பொறுப்பேற்க வேண்டும். நாம் உருவாக்கியவைகளிடமிருந்து ஓடி ஒளியும் வசதி எமக்கு அளிக்கப் படவில்லை. எனவே நாம் எமது வாழ்க்கையை எப்படி உருவாக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதில் மிக அதிகக் கவனம் வேண்டும்.

ஒருவன் இன்று தீய விளைவுகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறான் என்பதைச் சிலர் 'எல்லாம் அவன் கர்மா' என்று சொல்வதுண்டு. நேற்றைய செயலின் விளைவை இன்று அவன் அனுபவிக்கிறான் என்பது அதன் பொருள். என்ன தான் குட்டிக் கரணம் போட்டாலும் நேற்றைய கர் மாவை இன்று அனுபவிக்காமல் தடுத்து விட முடியாது என்பது மாபெரும் உண்மை. இது சிலருக்கு வருத்தத்தை அளித்தாலும், அதில் மறைந்திருக்கும் இன்னொரு உண்மை எவரையும் ஆசுவாசப்படுத்தும். நாளை நன்மையைப் பெற வேண்டு மென்றால் அதற்கேற்ப நல்ல செயல்களை நல்ல முறையில் இன்று செய்தால் போதும் என்பது தான் அது. நாளை எந்த விதமான பலன்கள் எமது வாழ்க்கையில் வர வேண்டும் என்று நினைக்கிறோமோ அதற்கேற்ப இன்றைய செயல்கள் அமைய வேண்டும்.

உங்களது இன்றைய வாழ்க்கை முறை, சிந்தனை, செயல்கள் எல்லாவற்றையும் அமைதியாக அலசுங்கள். அதேபோல் தொடர்ந்து அவை இருந்தால் இனி ஐந்து வருடம் கழித்து நீங்கள் எப்படியிருப்பீர்கள் என்று உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள். ஒரு சாதாரண அறிவுத்திறன் இருக்கும் மனிதர்களுக்கு இப்படியே போகும் வாழ்க்கை ஓட்டம் எங்கு போய் முடியும் என்ற கேள்விக்குப் பதிலைப் பெறுவது கஷ்டமல்ல. கிடைக்கும் பதில் உங்களுக்கு மனநிறைவையும், மகிழ்ச்சியையும் அளிப்பதாக இருந்தால் மிக நல்லது. இப்படியே வாழ்க்கையைத் தொடருங்கள். ஆனால் பெரும்பாலானோருக்குக் கிடைக்கிற பதில் திருப்திகரமாக இருக்காது. இந்தக் கேள்வி பலரை ஆழ்ந்த உறக்கத்திலிருந்து தட்டி எழுப்பக் கூடும். பலரும் வாழ்க்கை ஒரு நாள் திருப்திகரமாக மாறும் என்ற அசட்டு நம்பிக்கை வைத்திருக்கிறார்களேயொழிய, அது எப்படி நடக்கும் என்கிற ஞானமோ, அதற்காக என்ன செய்ய வேண்டும் என்கிற சிந்தனையோ அவர்களிடம் இருப்பதில்லை. யாராவது மாற்றினால் ஒழியத் தானாக எதுவும் மாறுவதில்லை என்கிற உண்மையை அவர்கள் உணர்வதில்லை. மற்றவர்களாகப் பார்த்து மாற்றப்படும் வாழ்க்கை எமது வாழ்க்கை நாம் நினைத்தபடி இருக்கும் என்று நாம் எதிர்பார்ப்பதும் முட்டாள்த் தனம். இப்போதைய போக்கிலேயே உங்கள் எதிர்காலமும் இருக்கப் போவது உங்களுக்குப் பிடிக்கவில்லையானால் நீங்கள் இன்றேமாற ஆரம்பிப்பது நல்லது. உங்களுக்குப் பிடித்த நிலைமைக்கு உங்களைக்கூட்டிக்கொண்டு போகும் கர்மாக்களில் ஈடுபடு வது அவசியம். உடல்நிலை, மனநிலை, பொருளாதாரநிலை இம்மூன்றிலும் நீங்கள் இனி ஐந்து வருடங்கள் கழித்து எப்படி இருந்தால் நிறைவாக இருக்கும் என்று கற்பனை செய்து பார்த்துக் கொள்ளுங்கள். அந்த மூன்றிலும் இப்போது எப்படி இருக்கிறீர்கள் என்பதை உள்ளதை உள்ளபடி புரிந்து கொள்ளுங்கள். இனி அந்த இரண்டிற்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைக்கத் தேவையான செயல்களைப் புரிவதில் முழுமனதோடு ஈடுபடுங்கள். நீங்கள் நினைத்தபடி உங்கள் வாழ்க்கை முழுவதுமாக மாறும் நாள் வரை நீங்கள் தினமும் ஒரு கேள்வியை உங்களுக்குள் கேட்டுக் கொள்ளுங்கள். 'நான் வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கையும், நான் செய்து கொண்டிருக்கும் செயல்களும் என்னை எனது இலக்குகள் நோக்கி அழைத்துச் செல்பவையாக இருக்கின்றனவா?' மாற வேண்டும் என்ற எண்ணம் ஆழமாகவும், உண்மையாகவும் இருக்கும் வரை இந்த ஒரு கேள்வி தேவையான சிறு சிறு மாற்றங்களை உங்கள் வாழ்வில் ஏற்படுத்தி பொறுப்புடன் வாழக் கற்றுத் தரும். சிறப்பாகச் செயல்பட வைக்கும். கடைசியில் நீங்கள் ஆசைப்பட்ட பெரும் மாற்றத்தை வாழ்வில் ஏற்படுத்திக் கொடுக்கும். அதுவரை இந்தக் கேள்வியைத் தினமும் கேட்டுக் கொள்வதை நிறுத்தி விடாதீர்கள்.



# வடக்கு-கிழக்கு ஆசிரியர்கள் தொடர்பில் அமைச்சரின் கருத்துக்கு கடும் கண்டனம்

கொழும்பு, ஏப் 02

மலையகத்தில் பணிபுரிந்துவரும் வடக்கு, கிழக்கு ஆசிரியர்கள் தொடர்பில் மத்திய மாகாண அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ள கருத்தை தாங்கள் வன்மையாகக் கண்டிப்பதாகவும், கல்விசார் விடயங்களில் அரசியல் அதிகாரத்தைப் பிரயோகிக்க எத்தனிப் பார்களாயின் மலையகத்தில் பாரிய ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுப் போம் என்றும் மலையக ஆசிரியர் முன்னணி தெரிவித்துள்ளது.

மத்திய மாகாண அமைச்சர் ஒருவர் கல்வி விடயங்களில் தலையிடுவது தொடர்பில் விளக்கும் வகையில் அந்த அமைப்பினால் வெளியிடப்பட்டிருந்த ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:-

மத்திய மாகாண அமைச்சர் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவொன்று பறக் கும் படையணி' என்ற பெயரில் திடீர் திடீரென்று சில பாடசாலைகளுக்குச் சென்று ஆசிரியர்களை மேற்பார்வை செய்கிறோம் என்ற பெயரில் சில செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றது. அந்த வகையில் நுவரெலியா பகுதியின் பிரபல பாடசாலையொன்றுக்குச் சென்ற போது அந்த அமைச்சர் வடக்கு, கிழக்கு ஆசிரியர்கள் மலையகக் கல்வியையும், பிள்ளைகளையும் நாசப்படுத்துவதாகவும், இவர்கள் மூன்று மாதத்துக்குள் தாங்களே இடமாற்றம் பெற்று செல்லாவிட்டால் நாங்கள் விரட்டுவோம் என்றும் தெரிவித்திருந்தார்.

இவ்வாறு வடக்கு, கிழக்குப் பகுதி ஆசிரியர்கள், மலையக ஆசிரியர்கள் என்று வேறுபாடுகாட்டி அவர்கள் சேவையைக் கொச்சைப்படுத்தும் விதத்தில் அமைச்சர் பேசியபோது மத்திய மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளும் இருந்துள்ளனர். அதேநேரம் அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்குத் தமது கருத்துகளைக் கூறவும் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்றும் அறியமுடிகின்றது.

கல்விச்சேவை அதிகாரிகள்தான் ஆசிரியர்களை மேற்பார்வை செய்ய முடியும். அமைச்சர் சென்று பாடக் குறிப்பு கேட்பதென்பது ஏற்றுக் கொள்ள முடியாத செயலாகும். அத்தோடு வடக்கு, கிழக்குப் பகுதி ஆசிரியர்கள்தான் மலையகத்தின் ஆரம்ப கல்விக்கு அத்திவாரமிட்டவர்கள். இன்றைய அதிகாரிகள் பெரும்பான்மையானோர் அவர்களிடம் கற்றவர்களே. அவ்வாறு காணப்படும்போது வடக்கு, கிழக்குப் பகுதி ஆசிரியர்கள் மலையகத்தில் வேலை செய்யக் கூடாது என்றும், இவர்கள்தான் எமது பிள்ளைகளை நாசப்படுத்துகின்றார்கள் என்றும் கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாது.

அத்தோடு, அரச ஊழியர்கள் தமது பதவி நியமனத்திற்கமைய நாட்டின் எப்பகுதியிலும் வேலை செய்யும் தகுதியை உடையவர்கள். இவர் களை அதிகார சக்தியைக்கொண்டு ஓரங்கட்டுவதை எமது மலையக ஆசிரியர் முன்னணி ஏற்றுக்கொள் ளாது. ஒருசில அரசியல்வாதிகள் தமது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள இவ்வாறான தகாத நடவடிக்கைகளையும் வார்த்தைகளையும் பாவிப்பது எமது கல்வி நிர்வாகத்தையும், சமூக ஒற்றுமையையும் சீர் குலைக்கும் முயற்சியாக நாங்கள் கருதுகின்றோம்.

நல்லாட்சி நடத்தவேண்டும் எனும் நோக்கில் ஜனாதிபதியும், பிரதமரும் செயற்பட்டுவரும் இவ்வேளையில் குறித்த அமைச்சரின் இச்செயற்பாடு, அவ்வ்யரிய நோக்கத்தை சீர்குலைக் கும் செயலாக அமைவது வேத னைக்குரிய ஒன்றாகும்.

எனவே, குறித்த மத்திய மாகாண அமைச்சர் தமக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பை முறையாகச் செய்யவேண்டுமே தவிர, ஆசிரியர்களின் மனங்களைப் பாதிக்கும் வகையிலும், பழிவாங்கும் வகையிலும் செயற்படுவதை எமது முன்னணி வன்மையாகக் கண்டிக்கிறது. அமைச்சரினதும், அதிகாரிகளினதும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு எமது முன்னணி எப்போதும் ஆதரவு வழங்கும். அதேவேளை, அடாவடித்தனமான செயற்பாடு கள் தொடருமாக இருந்தால் எமது முன்னணி ஏனைய ஆசிரியர் சங்கங்களை இணைத்துக் கொண்டு பெரிய போராட்டத்தில் இறங்கும் –என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# ரணிலால் அதிகாரங்களை பறித்துக் கொள்ளமுடியாது

### கூறுகிறார் அனுரகுமார

கொழும்பு, ஏப் 2

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசமைப்புச் சூழ்ச்சிகள் ஊடாக அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிப்பதாகச் சிலர் அறிவிப்பது முற்றிலும் உண்மைக்குப் புறம்பான கருத்து என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் நேற்றுக் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் அனுமதிக்காக முன்வைக்கப்பட்டுள்ள 19ஆம் அரசமைப்புத் திருத்தச் சட்டத்தில் பிரதமருக்கான அதிகாரம் அதிகரிப்பது எதிர்வரும் தேர்தலில் தெரிவு செய்யப் படும் அரசிலேயே என அவர் மேலும் கூறியுள்ளார்.

அதுவரை இந்த அதிகாரங்கள் ஜனாதிபதிக்கே கிடைக்கும் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் அதனைப் பறித்துக் கொள்ள முடியாதெனவும் அவ்வாறு கூறுவது முற்றிலும் பொய்யான ஒரு விடயமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த)


**பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் 2015**

மேற்படி நிகழ்வு பழைய மாணவர்களின் தலைவர், பாடசாலையின் முதல்வர் வே.த.ஜயந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இடம் : யா/ வயாவிளான் மத்திய கல்லூரி - ஆ.சி. நடராஜா அரங்கு

காலம் : 03.04.2015 (வெள்ளிக்கிழமை)

நேரம் : காலை 9.00

1. இறைவணக்கம்
2. தலைவர் உரை
3. செயளாளர் அறிக்கை
4. பொருளாளர் அறிக்கை
5. பிரேரணைகள் ஆய்வு பாடசாலை அபிவிருத்தி தொடர்பானவை
6. நிர்வாக உறுப்பினர் தெரிவு
7. நன்றியுரை

செயலாளர் தலைவர்


# மாணவர் பேரணி மீது புதிய அரசும் வன்முறை

### அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டனம்

கொழும்பு, ஏப் 02

புதிய அரசு பதவியேற்று மூன்று மாதங்களில், மாணவர்களின் பிரச்சினைகளை தீர்க்குமாறு கோரி மேற்கொண்ட அமைதியான பேரணி மீது அரசு தனது வன்முறை படையைப் பயன்படுத்தி மாணவர்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதலை நடத்தியதாக அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் கூறியுள்ளது.

தனியார் பல்கலைக்கழகங்களை இல்லாதொழிக்குமாறும், பாடசாலை மாணவர்களிடம் பணத்தை அறவிடும் சுற்றுநிருபத்தை நீக்குமாறும், பல்கலைக் கழக மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 4 ஆயிரம் ரூபா மாகாபொல புலமை பரிசில் பணத்தைச் சரியாக வழங்குமாறும் கோரி அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று முன்தினம் பேரணி ஒன்றை நடத்தியது.

சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் இருந்து அலரி மாளிகை வரை இந்த பேரணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் கொள்ளுப்பிட்டிச் சந்தியில் பொலிஸார் தடையேற்படுத்தி பேரணியை தடுத்து நிறுத்தும் ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

அப்போது பொலிஸாருக்கும் மாணவர்களுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டதுடன் பொலிஸார் மாணவர்களைக் கலைக்கத் தண்ணீர் தாரை தாக்குதல், கண்ணீர் புகைத் தாக்குதல் மற்றும் லத்தி தாக்குதலை நடத்தினர். பொலிஸாரின் பொல்லு தாக்குதலில் சில மாணவர்கள் காயமடைந்ததுடன் 4 மாணவர்களைப் பொலிஸார் கைது செய்தனர்.

இதனையடுத்து கைது செய்த மாணவர்களை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி மாணவர்கள் வீதியில் அமர்ந்து சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டனர். சுமார் ஒரு மணிநேரம் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் மாணவர்கள் ஈடுபட்டதுடன் 4 மாணவர்கள் விடுதலை செய்யப்பட்டதை தொடர்ந்து கலைந்து சென்றனர்.

இது குறித்து கருத்து வெளியிட்ட அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் நஜீத் இந்திக,, நல்லாட்சியை ஏற்படுத்த போவதாக கூறி ஆட்சிக்கு வந்த அரசு, மேற்கொள்ளும் இந்த மிலேச்சத்தமான செயலுக்கு எதிராகப் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட அனைத்து மக்களும் குரல் கொடுக்க வேண்டும் என தெரிவித்தார். (த)


**வேலைக்கு ஆள்கள் தேவை**

யாழ்ப்பாணம் கொழும்பு பேரூந்து ஆசனப் பதிவகத்துக்கு கொழும்பில் தங்கி நின்று பணி செய்யக் கூடிய ஆசனப்பதிவாளர் தேவை. பாரவூர்திக்கும் உதவியாளர் தேவை.

தொர்புகளுக்கு:- 076 8644558

குறிப்பு:தங்குமிடம் இலவசம் ஆண்கள் மட்டும்.

**தேவை**

சப்ளையர், கிளினர்

கோல்டன் ஸ்ரார் ரெஸ்ரோரன்ட்

(ஆரியகுளம் சந்தி அருகில்)

T.P:0778890888

0777404883






**கூறு விலை கோரல்**

இலங்கை மின்சார சபை யாழ். ஒளி மின் உற்பத்தி நிலையத்தில் பணிபுரியும் பயிலுநர் தங்குவதற்கான விடுதிகள் தேவை சம்பந்தமாக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன. இந்தக் கேள்விப் பத்திரங்கள் மற்றும் மேலதிக விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளும் திகதி:- 02.04.2015 இருந்து 15.04.2015 வரை

02. கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம்:- 15.04.2015 பி.ப 2.00 மணி

03. கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் இடம் :- யாழ். ஒளி மின் உற்பத்தி நிலையம், இலங்கை மின்சாரசபை, சுன்னாகம்.

04. கேள்விப் பத்திரங்கள் அனுப்பி வைக்க வேண்டிய முகவரி

**பிரதம பொறியியலாளர், யாழ். ஒளி மின் உற்பத்தி நிலையம், இலங்கை மின்சார சபை, சுன்னாகம். 40075.**

**தொ.பே:- 021 224 2400, 021 224 2247**



**மேலைப்புலோலி சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை அவர்களின் குருபூசைத்தினப் போட்டிகள் - 2015**

- காலம் :- 11.04.2015 சனிக்கிழமை 12.04.2015 ஞாயிற்றுக்கிழமை
- இடம்:- சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம், தம்பசிட்டி, பருத்தித்துறை.
- போட்டிகள்
- பாடசாலை மாணவர்களுக்கான பேச்சு, மனனம், பண்ணிசை, பொது அறிவு, கதை கூறல் மற்றும் பங்குபற்ற விரும்பும் அனைத்து ஆர்வலர்களுக்குமான கட்டுரைப் போட்டி உதயன் பத்திரிகை ஆதரவில் நடைபெறும் (வடமாகாண ரீதியாக)
- விண்ணப்ப முடிவுத் திகதி (கட்டுரை) 08.04.2015
- கட்டுரைப் போட்டி தலைப்புக்கள் - இணைக்கப்பட்டுள்ளன
  1. தமிழர் வாழ்வியலில் நவீனத்துவ கலாசாரத்தின் தாக்கம்
  2. 19ஆம் நூற்றாண்டில் ஈழத்து இலக்கியமும் சதாவதானியும்
  3. இன்றைய சமுதாயத்தில் போதைப்பொருளின் தாக்கம்
  4. சமகாலத்தில் சமூகவலுவாக்கத்தில் பெண்களின் பங்களிப்பும் எதிர்கொள்ளும் சவால்களும்.
- கட்டுரைப் போட்டிக்கான அறிவுறுத்தல்கள்
  - கட்டுரை A4 தாளில் 5 பக்கத்துக்கு மேல் இருக்கக்கூடாது. (மொத்தம் 1000 சொல்)
  - ஆக்கங்கள் யாவும் அழகான கையெழுத்துப் பிரதியாகவோ அல்லது அச்சுப்பிரதியாகவோ அமைய வேண்டும்.
  - போட்டியாளரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் (இருப்பின்) என்பன தெளிவாக தனியொரு தாளில் பிரதி செய்யப்பட்டு கட்டுரையுடன் இணைக்கப்பட வேண்டும்.
  - கட்டுரை ஆனது சொந்த முயற்சியில் ஆக்கமாக வெளிப்படுத்தப்பட வேண்டும்.
  - போட்டியல் நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானதும் முடிவானதும் ஆகும்.
  - கட்டுரைகள் யாவும் உரிய திகதிக்கு முன் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ நிலைய முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
  - குருபூசைத்தினப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான சான்றிதழ்களும் பரிசுகளும் 108 ஆவது ஆண்டு நினைவு விழாவில் வைத்து வழங்கப் படும்.

**கட்டுரைப் போட்டிக்கான பரிசு விவரம்:**

முதலாம் பரிசு : 10,000/= இரண்டாம் பரிசு: 8,000/= மூன்றாம் பரிசு :7,000/=

நா.கன்னதாசன் (தலைவர்) (0776062688)

ப.சிவசுப்பிமணியம் (செயலாளர்) (0770831166)

மேலதிக விவரங்களை தலைவர் அல்லது செயலாளருடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

ஊடக அனுசரணை: உதயன்

# ஆட்சிக்கு வந்த சில நாள்களிலேயே புதிய அரசை வெறுக்கிறனர் மக்கள்

## புதிய ஹெல உறுமய தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.2
"புதிய அரசு ஆட்சிக்குவந்து சில நாள்களிலேயே மக்கள் அதன்மீது வெறுப்படைய ஆரம்பித்துள்ளனர். உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை. எனவே, சித்திரைப் புத்தாண்டு மக்களுக்கு சவால் மிக்கதாகவே அமையும். இன்னும் குயில் கூட கூவவில்லை. சில வேளை, நிலைமை பிடிக்காமல் கூவுவ தற்கு அது மறுக்கிறதோ தெரியவில்லை."
இவ்வாறு புதியதொரு தகவலை நகைச்சுவையாகத் தெரிவித்தார் மேல் மாகாண சபை உறுப்பினரும் புதிய ஹெல உறுமயவின் தலை வருமான உதய கம்மன்பில.
நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் பிரதான வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷ நியமிக்கப் படவேண்டும் என்று வலியுறுத்தி வரும் கட்சிகளின் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுமுன்தினம் முற்பகல் அபயராம விகாரையில் நடைபெற்றது. இதன்போதே கம்மன்பில இவ்வாறு குறிப்பிட்டார். இதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:
"மஹிந்த ஆதரவு அலை வீசிக் கொண்டுதான் இருக்கிறது. இதை எவரும் தடுக்கமுடியாது. இதற்கு அஞ்சி தேர்தலை ஒத்தி வைப்பதற்கு முற்படலாம்.
தேசிய அரசு முறையாகச் செல்கிறதா என்பது சந்தேகமே. உறுதிமொழிகள் மீறப்படுகின்றன. இப்படியே நிலைமை சென்றால், புத்தாண்டானது மக்களுக்கு சவால் மிக்கதாகவே அமையும்.
குறிப்பாக, குயிலின் சத்தத் தைக் கூட இன்னும் கேட்க முடியவில்லை. சில வேளை, நிலைமையை உணர்ந்து அது கூவமறுக் கிறதோ தெரியவில்லை" –என்றார். (வ–சி)

# தவறுகளை மறைக்க புதிய அரசு முயற்சி

## விரிவுரையாளர் மெதகொட குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப் 2
இந்த தேசிய அரசு இளைஞர்களுக்கு வை–பையையும், வயோதிபர்களுக்கு கொத்தமல்லியும் வழங்கி தனது அரசில் உள்ள தவறுகளை மூடிமறைக்க முயற்சிப்பதாக ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.
பெப்பிலியானவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.
தற்பொழுது வடக்கில் முகாம்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதுமாத்திரமின்றி பலாலியில் அதிபாதுகாப்பான 1000 ஏக்கர் காணி சிவில் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. எவ்வித தடைகளுமின்றி இந்நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் தமிழ்,முஸ்லிம் மக்கள் வாழ்கின்றார்கள்.
வவுனியா மாவட்டத்தில் உள்ள போகஸ்வெவ மற்றும் நந்தமித்ர ஆகிய கிராமங்கள் உட்பட சிங்கள கிராமங்களை நீக்கிவிட்டு புதிதாக முஸ்லிம் கிராமங்களை உருவாக்குவதற்கு அமைச்சர் ரிஷாட் நடவடிக்கை மேற்கொள்வது மிகவும் இளிவான விடயமாகும் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (த)

# சுற்றியிருந்த புழுக்களாலேயே மஹிந்த என்ற மரம் விழுந்தது

## கூறுகிறார் அமைச்சர் டிலான்



கொழும்பு, ஏப் 2
பொது பலசேனா போன்ற சுற்றியிருந்த புழுக்களினால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்ற பெரிய மரம் விழுந்து விட்டதாக அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.
பதுளைப் பிரதேசத்தில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.
மஹிந்த ராஜபக்ஷ என்ற மரம் சுற்றியிருந்த சில புழுக்களினாலே முறிந்து விழுந்தது. பொது பலசேனா புழுக்களைக் கழுத்தில் போட்டுக் கொண்டது.
அரசினுள் இருந்துகொண்டு அரசைப் பற்றி விமர்சனங்கள் செய்த பொருளாதார கொலைகாரர்கள் என கூச்சலிட்டவர்கள் புழுக்கள். அவ்வாறான புழுக்களினாலேயே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தோல் வியடைந்துள்ளார் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (த)

# 5 லட்சம் பேரை ஐ.தே.கவில் இணைக்கும் திட்டம் ஆரம்பம்

கொழும்பு, ஏப் 2
தேசிய ரீதியில் 15 லட்சம் பேரை ஐக்கிய தேசியக் கட்சியில் இணைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் ஆரம்ப நிகழ்வு வவுனியா சந்தைத் தொகுதியில் கடந்த வாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. வவுனியா, சதொச மற்றும் பொதுச் சந்தைப் பகுதியில் உள்ள வர்த்தகர்கள் பலரைக் கட்சியில் இணைப்பதற்கான அங்கத்துவப் படிவங்களை வழங்கி வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஐ.தே.கட்சியின் வன்னி அமைப்பாளருமான ஹுனைஸ் பாறுக் இந்த நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.
இதன்போது கருத்து தெரிவித்த அவர், நாட்டில் தற்போது நல்லாட்சி மலர்ந்துள்ளது. இந்த நல்லாட்சியை ஏற்படுத்தியதில் பிரதான பங்கு வகித்தது ஐக்கிய தேசியக் கட்சியே. தற்போது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பிரதமருமாகிய ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புக்கமைய 15 லட்சம் பேரைக் கட்சியில் இணைக்கும் வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இதன் ஒரு கட்டமாக வன்னிக்கான ஆரம்ப நிகழ்வு இன்று நடைபெறுகின்றது. பலர் ஆர்வத்துடன் எமது கட்சியில் இணைந்து வருகிறார்கள். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வன்னித் தேர்தல் தொகுதியில் 3 ஆசனங்களைப் பெறும்–என்றார். (த)

# ஐ.தே.கவுடன் இணைவது மாபெரும் துரோகமாகும்

## ரி.பி.ஏக்கநாயக்க கூறுகிறார்



கொழும்பு, ஏப் 2
சிறுபான்மையாகவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படுவது வாக்களித்த மக்களுக்கு செய்யும் துரோகம் என முன்னாள் அமைச்சர் ரி.பி.ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.
சிங்கள ஊடகமொன்றிற்கு வழங் கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
வெற்றிலைச் சின்னத்தில் மக்கள் வாக்குகளினால் நாடாளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்பட்டு நாடாளுமன்றில் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டுள்ள நாம் ஐ.தே.கவுடன் இணைவது வெட்கக்கேடு என அவர் தெரிவித்துள்ளார்.
இவ்வாறு மரத்துக்கு மரம் தாவும் குரங்குகளைப் போல கட்சிக்கு கட்சி மாறுவது நல்ல மனிதனுக்குரிய பண்பாடல்ல. அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்குமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா எனக்கு அழைப்பு விடுத்தார்.
கடந்த ஜனவரி மாதம் இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவுக்கு வாக்களிக்காமல் இருந்து விட்டு பதவி மோகம் பிடித்தவர்களை போல் அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொள்வது நன்னடத்தையுள்ள ஒருவருக்கு முறையானதல்ல எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

# கிழக்குப் பிரதித் தவிசாளராக கூட்டமைப்பின் இந்திரகுமார்

மட்டக்களப்பு, ஏப் 02
கிழக்கு மாகாண சபையின் பிரதித் தவிசாளர் எம்.எஸ்.சுபைருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மேலதிக எட்டு வாக்குகளால் நேற்றுமுன்தினம் நிறைவேற்றப்பட்டது. இதையடுத்து, கிழக்கு மாகாண சபையின் புதிய பிரதித் தவிசாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்திரகுமார் பிரசன்னா நியமிக்கப்பட்டுள்ளார்.
பிரேரணைக்கு ஆதவாக 19 வாக்குகளும், எதிராக 11 வாக்குகளும் கிடைத்துள்ளன. கிழக்கு மாகாண சபையின் தவிசாளரான ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சந்திரதாச கலபதி தலைமையில் கிழக்கு மாகாண சபை அமர்வு செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.
பிரதித் தவிசாளருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஆதம் லெப்பை தவம் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை சபையில் சமர்ப்பித்திருந்தார்.
இந்த நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அடங்கலாக 19 உறுப்பினர்கள் வாக்களித்திருந்தனர். பிரேரணைக்கு எதிராக 11 வாக்குகள் கிடைத்துள்ளன.
சபைத் தவிசாளர் இல்லாத நிலையில் சபையைக் கூட்டுமாறு கிழக்கு மாகாண ஆளுநர் அறிவித்திருந்தும் அதனைப் புறந்தள்ளிவிட்டுச் சபை நடவடிக்கைகளைப் புறக்கணித்து மாகாண சபை அமர்வுக்குத் தலைமை தாங்கும் பொறுப்பிலிருந்து தவறியிருந்தார் என்பதே பிரதித் தவிசாளர் சுபைருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பிரதான நம்பிக்கையில்லாத் தீர்மானமாகும்! என மாகாண சபை உறுப்பினர் ஆர்.துரைரெட்ணம் தெரிவித்தார்.
கிழக்கு மாகாண சபையில் ஆட்சி அமைப்பது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் மீறப்பட்டுள்ளதாகத் தெரிவித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 11 மாகாண சபை உறுப்பினர்கள் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துள்ளனர்.
இந்த அமர்வில் ஆளும் கட்சிகளைச் சேர்ந்த மூவரும் எதிர்க் கட்சியைச் சேர்ந்த மூவருமாக மொத்தம் ஆறு பேர் சபை அமர்விற்கு வந்திருக்கவில்லை. (த)

# லசந்த கொலை தொடர்பில் சகோதரரிடம் வாக்கு மூலம்

கொழும்பு, ஏப் 2
பிரபல ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை சம்பந்தமாக வாக்குமூலம் ஒன்றை பெறுவதற்காக குற்றப் புலனாய்வுத்திணைக்களத்திற்கு வருமாறு அவரது சகோதரர் லால் விக்கிரமதுங்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பாக வழங்கிய வாக்குமூலத்துடன், தனது வாக்குமூலத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து விசாரணைகள் துரிதப் படுத்தப்படும் என எதிர்பார்ப்பதாக லால் விக்கிரமதுங்க கூறியுள்ளார்.
தனது சகோதரரின் கொலை குறித்து மீண்டும் உரிய விசாரணைகள் நடப்பதை தான் புரிந்து கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கடந்த 2009 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி தெஹிவளை அத்திட்டிய பிரதேசத்தில் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.
இந்தக் கொலையுடன் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவுக்கு தொடர்பிருப்பதாக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா பகிரங்கமாக தெரிவித்திருந்தார்.
இதனிடையே வத்தளையில் அண்மையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசிய சட்டம் ஒழுங்கு அமைச்சர் ஜோன் அமரதுங்க, சன்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் ஆகியோரின் கொலைகள் சம்பந்தமாக அடுத்த சில நாள்களில் முக்கிய தகவல்கள் வெளியாகும் என கூறியிருந்தார். (த)


## மரண அறிவித்தல்



### திருமதி பாமா விஜயஸ்ரீ

கோண்டாவில் வடக்கு, வாகீஸ்வரி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாமா விஜயஸ்ரீ நேற்று (01.04.2015) புதன்கிழமை அதிகாலை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற இராசன் மற்றும் செல்வராணி தம்பதியரின் மூத்த மகளும், வல்வெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற மார்க்கண்டு மற்றும் நவமணி தம்பதியரின் மூத்த மருமகளும், விஜயஸ்ரீயின் அன்பு மனைவியும், கஜானனின் (சென்.ஜோன் பொஸ்போ தரம் 2 மாணவன்) அன்புத் தாயும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (01.04.2015) புதன்கிழமை நடைபெற்றது.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"முருகன் இல்லம்"
கோண்டாவில் வடக்கு.

தகவல்:
மார்க்கண்டு விஜயஸ்ரீ (கணவர்)
(பொறியியலாளர் வடக்கின் வசந்தம் இ.மி.ச. யாழ்ப்பாணம்)

## உரும்பிராய் இந்துவின் பரிசில் தினம்

யாழ்ப்பாணம், ஏப். 2

உரும்பிராய் இந்துக் கல்லூரி ஸ்தாபகர் தினமும் பரிசில் நாளும் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. மு.ப. 9 மணிக்கு கல்லூரி விநாயகர் கலையரங்கில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு கல்லூரி முதல்வர் அ.அருணந்திசிவம் தலைமை வகிக்கவுள்ளதுடன் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சதாசிவம் பாலபுத்திரன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) சண். தயாளன், பழைய மாணவர் க.சோதிலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (த-10)

## போகொல்லாகம வெளிநாட்டுக்கு செல்லத் தடை

கொழும்பு, ஏப் 2

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம, வெளிநாடு செல்வதற்கு நேற்று புதன்கிழமை தடை விதிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, நிதிமோசடி குற்றச்சாட்டிலிருந்து அவர், விடுவிக்கப்பட்டுள்ளார். அவருக்கு எதிரான வழக்கு கொழும்பு பிரதான நீதிவான் முன்னிலையில் நேற்றுப் புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்ட போதே நீதிவானினால் அவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. (த)

## டொனால்ட் பெரேராவிடம் விசாரணை

முன்னாள் விமானப்படைத்தளபதி எயார் மார்ஷல் டொனால்ட் பெரேராவிடம் நிதி மோசடி பொலிஸ் விசாரணை பிரிவு நேற்றுப் புதன்கிழமை விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு, மிக் விமானங்கள் நான்கு, மற்றும் விமானங்கள் சிலவற்றை திருத்தும்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பிலேயே அவரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

இந்தக் கொடுக்கல் வாங்கலில் 14 மில்லியன் அமெரிக்க டொலருக்கு மேல் நட்டம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் திணைக்களம் அறிவித்துள்ளது. (த)

## மத்திய மாகாண சபை தவிசாளருக்குச் சிறை

தேர்தல் சட்டதிட்டங்களை மீறியமை தொடர்பில் தொடரப்பட்டிருந்த வழக்கில் பிரதான சந்தேகநபரான மத்திய மாகாண சபைத் தவிசாளரும், பாத்தஹேவாயஹட்ட தொகுதி சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளருமான மஹிந்த அபேகோனுக்கு இரண்டரை வருடகால கடூழிய சிறைத் தண்டனை வழங்கி கண்டி மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்தது.

2001ஆம் ஆண்டு டிசம்பர் 5ஆம் திகதி பொதுத் தேர்தலின்போது கலஹா, பாத்தஹேவாயஹட்ட பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடிக்குள் அத்துமீறி நுழைந்து வன்முறையில் ஈடுபட்டமை தொடர்பிலான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டமையினாலேயே கண்டி மேல் நீதிமன்ற நீதிபதி மேனகா விஜேசுந்தரவால் மேற் கண்டவாறு தீர்ப்பு வழங்கப்பட்டது. (த)

# துமிந்த சில்வா எம்.பிக்கு நிபந்தனையுடன் பிணை

கொழும்பு, ஏப் 2

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, கடும் நிபந்தனைகளுடன் கூடிய பிணையில் நேற்றுப் புதன்கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் தொழிற்சங்க ஆலோசகரான பாரத லக் ஸ்மன் பிரேமச்சந்திரவின் படுகொலை தொடர்பான குற்றப்பத்திரிகை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை தாக்கல் செய்யப்பட்டது.

இந்தக் கொலைச் சம்பவத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா உள்ளிட்ட 13 பேர் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர்.

அத்தனை பேரும் கடும் நிபந்தனை பிணையில் விடுவிக்கப்பட்டனர். அத்துடன் துமிந்த சில்வாவின் கடவுச்சீட்டையும் நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்ட நீதி பதி, அவருக்கு ஏற்கனவே வழங்கியிருந்த பிணையையும் அதிகரித்தார். அதன் பிரகாரம், தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான பிணையாளர்கள் இருவரை முன்னிலைப்படுத்துமாறு அதிகரிக்கப்பட்ட பிணையில் கூறப்பட்டுள்ளது. அத்துடன் மாதத்துக்கு ஒருமுறை பொலிஸில் முன்னிலையாகுமாறும் நீதிபதியினால் பணிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என 13பேர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்த நிலையில் 11 சந்தேகநபர்களே நீதிமன்றத்தில் நேற்று முன்னிலையாகியிருந்தனர்.

2011ஆம் ஆண்டு ஒக்ரோபர் 08 ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலின் போது கொலன்னாவையில் வைத்து பாரத லக் ஸ்மன் பிரேமச்சந்திர உள்ளிட்ட நால்வர் மீது துப்பாக்கிப் பிரயோகம்செய்துபடுகொலைசெய்ததாக துமிந்த சில்வா உள்ளிட்ட 13 பேருக்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. பிணை நிபந்தனையை மீறினால், சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்படுவர் என்று மேல் நீதி மன்ற நீதிபதி தேவிகா டி லிவேரா தென்னக்கோன், சந்தேகநபர்களை எச்சரித்தார். (த)

## ஞானசார தேரரிடம் பொலிஸ் விசாரணை

கொழும்பு, ஏப் 2

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரிடம் புத்தசாசன மற்றும் மதவிவகார அமைச்சின் விசேட பொலிஸ் பிரிவினரால் நேற்றுமுன்தினம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இலங்கையில் இனங்களுக்கிடையில் இடம்பெற்ற வன்முறை தொடர்பிலும், தனி மனிதத் தாக்குதல்கள் தொடர்பிலும் இவ் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் மாலை இவருக்கு புத்த சாசன மற்றும் மதவிவகார விசேட பொலிஸ் பிரிவில் முன்னிலையாகும் படி அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையிலேயே இந்த விசாரனை மேற்கொள்ளப்பட்டது என்று பொதுபலசேனா அமைப்பின் முக்கிய உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணையின்போது கடந்த வருடம் அளுத்கம மற்றும் பேருவளைப் பகுதியில் ஏற்பட்ட இனக் கலவரம் மற்றம் இனங்களுக்கிடையில் பதற்றநிலை தோற்றுவிக்கப்பட்டமை போன்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் கேட்டறியப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் இனங்களுக்கிடையில் ஏற்பட்ட முறுகல் நிலையால் அப்போது புத்தசாசனம் மற்றும் மதவிவகார அமைச்சின் கீழ் விசேட பொலிஸ் பிரிவொன்று அமைக்கப்பட்டது. இதில் ஏராளமான குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்ட போதிலும் கடந்த ஆட்சியில் இவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## மரண அறிவித்தல்



### திருமதி றஞ்சிதமலர் பரமேஸ்வரன்

ஆஸ்பத்திரி வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி றஞ்சிதமலர் பரமேஸ்வரன் (30.03.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் தம்பித்துரை பரமேஸ்வரனின் (பொறிவலர் C.T.B கோண டாவில்) அன்பு மனைவியும், கௌசிகா (Resource Development Consultants), சபிதா ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர் களான தம்பிஐயா-செல்லம்மா தம்பதியரின் அருமை மகளும், அச்சு வேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பித்துரை மற்றும் பூபதி தம்பதி யரின் அருமை மருமகளும், சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்- நவாலி வடக்கு), காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் சிவசோதி (கனடா), சதாசிவம் (ஜேர்மனி), குணசேகரம் (ஜேர்மனி), வைத்தி லிங்கம் (கனடா), பாலேந்திரன் (கனடா), காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் கஜேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலச்சந்திரன் (சுவிஸ்), பரமபதி (ஆசிரியை, அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை), பரமநிதி (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2015) வியாழக்கிழமை மு.ப. 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

தகவல் : த.பரமேஸ்வரன்
(கணவர்)

## 41ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 11.08.1979 | உதிர்வு 21.02.2015



### சின்னையா சுதாகரன்
(இ.போ.சபை சாரதி,
கிளிநொச்சி)

"அன்பே ஜெனோ
உன்னையும் பிள்ளைகளையும்
இனியும் பிரிந்து என்னால் வாழ முடியாது"
என்று எம்மிடம் ஓடோடி வந்தீரே...
காலமெல்லாம் என் அருகில் நீர் இருப்பீர்
என நம்பி இருந்தேனே....
நாடு திரும்பிய உமக்கு காலன் அவன்
எம்முடன் வாழ கொடுத்த நாள்கள்
(21) இருபத்து ஒன்றோ
உமக்கு நடந்ததுதான் என்ன சுதா...
அப்பா என்று கதறும் உம்
அன்புச் செல்வங்களை
நான் என்ன சொல்லித் தேற்றுவேன்
ஒருமுறை எம் கண்முன் தோன்றமாட்டீரோ.....

மனைவி, பிள்ளைகள்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

பிறப்பு 29 . 04 . 1929 | இறப்பு 04 . 03 . 2015



### அமரர் சவுந்தரம் சங்கரப்பிள்ளை

கடந்த 04.03.2015 புதன்கிழமை நயினை நாகபூஷணி அம்பிகையின் திருப்பாதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி சவுந்தரம் சங்கரப்பிள்ளை அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 03.04. 2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும், இந்த நிகழ்வில் தாங்களும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனதிலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்திகேட்டு உடன் வந்து எமக்கு ஆறுதல் தெரிவித்தோருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், தொலைபேசி ஊடாகவும், மின்னஞ்சல் ஊடாகவும், மலர்வளையம், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் அச்சிட்டு வெளியிட்டோருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

29, றக்கா வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 16 . 09 . 1929 | இறப்பு 31 . 03 . 2015



### திருமதி ஈஸ்வரி பூபாலசிங்கம்

மலேசியாவை பிறப்பிடமாகவும் இல.90, இரண்டாம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஈஸ்வரி பூபாலசிங்கம் கடந்த (31.03.2015) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட் டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லர் -குட்டிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பூபாலசிங்கத்தின் (பொறியியலாளர் - நீர்ப்பாசனத் திணைக்களம்), அன்பு மனைவியும், Dr. பூவேந்திரன் (USA), ஜெயந்தி (U.K), Dr. பாலேந்திரன்(UK) , சாந்தி (Australia), ரோகினி(Australia), ஆகியோரின் அன்புத் தாயும், ரேகா(USA), Dr. குகதாஸன்(UK), Dr. கௌரி(UK), prof. விக்னேஸ்வரன்(Australia), காலஞ்சென்ற சாந்திகுமார்(Australia) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற ராதாகிருஸ்ணன் மற்றும் பரம்சோதி (ஓய்வுநிலை ஆசிரியர்), விவேகானந்தன், காலஞ்சென்ற பாலசிங்கம் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பத்மாஷினி, தங்கரட்ணம், காலஞ்சென்ற பத்மலோஷினி மற்றும் சரோஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (03.04. 2015) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெற்று பூத வுடல் மு.ப. 10.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக யாழ்ப்பாணம் வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

021 222 3402, 077 5287856. தகவல்: குடும்பத்தினர்.

# எதிர்க்கட்சித் தலைவர் பதவி யாருக்கு? சபாநாயகரின் தீர்ப்பை ஏற்க சு.க. முடிவு

## நிமலே அப்பதவியில் நீடிப்பார் என்றும் நம்பிக்கை

கொழும்பு, ஏப்.2

பிரதான எதிர்க்கட்சியாகக் கருதப்படும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, கூட்டரசமைக்க ஒத்துழைத்து அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்றதையடுத்து, நாட்டின் பிரதான எதிர்க்கட்சி எது? அதன் தலைவர் யார்? என்ற சர்ச்சை விஸ்வரூபமெடுத்துள்ளது.

அத்துடன், தற்போதைய எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் சு.கவின் உப தலைவரான நிமல் சிறிபால டி சில்வாவை அப்பதவியிலிருந்து நீக்கிவிட்டு, தினேஷ் குணவர்த்தனவை எதிர்க்கட்சித் தலைவராக்குவதற்கான முயற்சிகளும் இடம்பெற்று வருகின்றன.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷவும் இது விடயம் பற்றி கட்சித் தலைவர்களுடன் பேச்சு நடத்திவருகிறார். இது தொடர்பில் தனது தீர்ப்பை எதிர்வரும் 7 ஆம் திகதி அவர் அறிவிக்கவுள்ளார்.

இந்நிலையில், கொழும்பிலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போது எதிர்க்கட்சித் தலைவர் விவகாரம் தொடர்பில் கருத்து வெளியிடப்பட்டது.

"குறிப்பாக, எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் மாற்றம் வராது என்றே நாம் நம்புகிறோம். புதிய அரசின் 100 நாள் வேலைத் திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையிலேயே அமைச்சுப் பதவிகள் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எதிர்க்கட்சியின் பொறுப்பையும் நாம் சரிவர நிறைவேற்றிவருகிறோம். தேவையான நேரங்களில் பிழைகளைச் சுட்டிக்காட்டி, விமர் சனங்களை முன்வைக்கவும் நாம் தயங்குவதில்லை.

எது எப்படியிருந்தபோதிலும் எதிர்க்கட்சித் தலைவர் விவகாரம் தொடர்பில் சபாநாயகர் எதிர்வரும் 7ஆம் திகதி அறிவிப்பொன்றை விடுக்கவுள்ளார். அவரின் முடிவே இறுதியானது. இதனை நாமும் ஏற்போம்"? என்று சு.கவின் பொதுச் செயலாளர் அநுரபிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

அதேவேளை, இதன்போது கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரான சுசில் பிரேமஜயந்த,

"நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நான்கு கட்சிகளே இருக்கின்றன. சு.கவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலேயே இருக்கிறது. தினேஷ் குணவர்த்தன போன்றோரும் மேற்படி கூட்டணியிலேயே நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித் துவப்ப டுத்துகின்றனர்.

நிலைமை அப்படியிருக்கையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலேயே சிலர் அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொண்டுள்ளனர். அப்படியாயின், நிமலுக்குப் பதிலாக இன்னொருவரை நியமித்தால் அவரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்தானே.

இதை நாம் குழப்பிக் கொள்ளத் தேவையில்லை. தற்போது தேசிய அரசு அமையவில்லை. நாம் ஒத்துழைப்பு மாத்திரமே அரசுக்கு வழங்கியுள்ளோம். எதிர்க்கட்சி பொறுப்பிலிருந்து நாம் விலகிச் செல் லவில்லை" ? என்றார்.(ற-சி)

---

### ஆள்கொணர்வு

கொள்ளப்பட்டது. இதன் போது, கடந்த தவணையில் சாட்சியமளித்தவரிடம் தொடர்ந்தும், அரச தரப்பு சட்டத்தரணி குறுக்கு விசாரணை செய்தார்.

குறித்த பெண்ணின், கணவரது பிறப்பிடம் தொடர்பில் நீதிமன்றில் சாட்சியத்தில் ஓர் இடமும், சிங்களத்திலுள்ள பிறப்புச் சான்றிதழில் வேறு இடமும் காணப்படுவது தொடர்பிலேயே விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இறுதியில் வழக்கு அடுத்த மாதம் 12 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ற-5)

### ஐ.நாவின் பார்வை

ஹோலியாங் சூ, ஐ.நா அபிவிருத்திக் குழுவின் ஆசிய- பசுபிக் பகுதிக்கான தலைவராகவும் பதவி வகிக்கின்றார். இவர் இரண்டாவது தடவையாக வருகை தந்து நாளை மறுதினம் வியாழக்கிழமை தொடக்கம், 10 ஆம் திகதி வரையில் இலங்கையில் தங்கியிருக்கவுள்ளார்.

இவர் தனது பயணத்தின்போது உயர் மட்ட அரச அதிகாரிகள், அபிவிருத்திப் பங்காளர்கள், மற்றும் சிவில் சமூகத்துடன் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார்.

புதிய அரசியல் சூழலில், இலங்கையின் எதிர்பார்ப்புகள், எழுந்து வரும் அபிவிருத்தித் தேவைகளை அறிந்து கொள்ளவுள்ளதுடன், இலங்கையில், ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் பங்கை வலுப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடவுள்ளார்.

இவர், வடக்கு மற்றும் வட மத்திய மாகாணத்துக்கும் சென்று அரச அதிகாரிகள், சமூகப் பிரதிநிதிகள் மற்றும் பயனாளிகளையும் சந்தித்து உதவித் தேவைகள் குறித்து கலந்துரையாடுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

### அரசியல்

அவர் இவ்வாறு கூறினார்.

"காரணமின்றி கைதுசெய்து வைத்திருப்போரை உடனடியாக விடுதலைசெய்ய வேண்டும். நீதிமன்றத்தில் அவர்களை ஆஜர்படுத்துவதும் இல்லை. எந்தவொரு விசாரணையும் இல்லை. என்ன காரணத்துக்காக சிறையில் அடைத்து வைத்திருக்கின்றனர் என்றும் தெரியவில்லை.

தமது உறவுகளின் விடுதலையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் வடக்கின் மக்களை மகிழ்ச் சிப்படுத்த வேண்டும். எனவே, நாட்டில் நல்லாட்சி நிலவவேண்டு மென்றால் சிறுபான்மைச் சமூகத்தின் அபிலாஷைகள் நிறைவேற்றப்பட வேண்டும்."– என்று அவர் குறிப்பிட்டார்.

"சம்பிக்க ரணவக்க ஏன் நிறைவேற்று ஜனாதிபதி முறைமைக்கு எதிராக இருக்கின்றார் என்று தெரியவில்லை. நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த விருப்பம் இல்லையோ என்று தெரியவில்லை. புதிய அரசான மைத்திரி அரசு, நாட்டைப் பிரிப்பதற்கான வேலைத் திட்டங்களை வகுக்கவில்லை. நல்லாட்சிக்கே வழிவகுத்து வருகின்றது. இதனை சம்பிக்க தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

தொகுதிவாரி தேர்தல் முறைமையை நடைமுறைப்படுத்த முடியாது. இதனால் பல சிறிய கட்சிகளின் பிரதிநிதித்துவம் பாதிப்படையும். எனவே, இத்தேர்தல் முறைமை மூலம் மீண்டும் சர்வாதிகார ஆட்சியே அரங்கேற வாய்ப்புள்ளது. விருப்பு வாக்கு முறைமையை மாத்திரம் நீக்கி விகிதாசார தேர்தல் முறைமையைப் பாதுகாக்கவேண்டும்." – என்றும் அவர் கூறினார். (ற-சி)

### விக்கி-ரணில்

இந்தப் பயணத்தின் போது, யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகத்தை நேற்றுச் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில், ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வடக்குப் பயணத்தினால் நன்மை ஏற்பட்டுள்ளதா என்று ஜேர்மன் தூதுவர் என்னிடம் வினவினார். நான் நன்மை ஏற்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்தேன்.

"பிரதமரது வடக்குப் பயணம், வடக்கு மாகாண சபையுடன் நல்லிணக்கம் ஏற்படுத்துவதற்கு கிடைத்த சந்தர்பம். இருப்பினும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வடக்கு மாகாண முதலமைச்சருடன் நெருக்கம் காட்டவில்லை. இது மக்களைப் பொறுத்த வரையில் மகிழ்ச்சியான விடயமாகத் தெரியவில்லை"– என்று ஜேர்மனியத் தூதுவர் குறிப்பிட்டார். அதனை நான் ஆமோதித்து ஏற்றுக் கொண்டேன்.

இருவருக்கும் இடையிலான முரண்பாட்டுக்கு என்ன காரணம் என்று அவர் என்னிடம் கேட்டார். கொள்கை ரீதியிலான முரண்பாடுகள் மற்றும் ஆளுமை வித்தியாசம் தொடர்பில் முரண்பாடுகள் காரணமாக இருக்கலாம் என்று குறிப்பிட்டேன். ஆனாலும் மக்களைப் பொறுத்த வரையில் அவர்களிடத்தில் எந்த முரண்பாடும் – பிரிவினையும் இல்லை.

வடக்கு மக்கள் என்ன எதிர்பார்கின்றார்கள் என்பது தொடர்பிலும் ஜேர்மன் தூதுவர் கேட்டறிந்து கொண்டார். காணி விடுவிப்புக்கள் தொடர்பில் சில நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கின்றன என்பதையும் தெரிவித்தேன்.

இளைஞர்கள் தற்போதும் வெளிநாடு செல்ல வேண்டும் என்ற எண்ணத்துடனேயே இருக்கின்றார்களா என்று ஜேர்மனியத் தூதுவர் கேட்டார். இங்கு வாய்ப்புக்கள் இன்னமும் இல்லை. இதனால் வெளிநாடு செல்ல வேண்டும் என்ற எண்ணத்துடனேயே இருக்கின்றனர் என்பதை அவருக்குச் சுட்டிக்காட்டினேன். (ற-5)

### ஐ.நா. நிபுணர்

நேற்று வந்திருந்தார். அவர் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

வடக்கு மாகாண முதலமைச்சரின் செயலகத்தில் இந்தச் சந்திப்பு நேற்று மதியம் 12.30 மணியளவில் இடம்பெற்றது. சுமார் ஒரு மணி நேரம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது, போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறல், நல்லிணக்க முயற்சிகள் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இனப்படுகொலை தொடர்பாக வடக்கு மாகாண சபை நிறைவேற்றிய தீர்மானம் குறித்தும் இதன் போது பேசப்பட்டதாகவும் கூறப்படுகிறது. எனினும், பேச்சு விவரங்கள் எவையும் வெளியிடப்படவில்லை. இந்தச் சந்திப்புக் குறித்த தகவல்களை ஊடகங்களுடன் பகிர்ந்து கொள்ள ஐ.நா. தரப்பு விரும்பவில்லை என்று, முதலமைச்சர் அலுவலகத்தினர் தெரிவித்தனர். அத்துடன், ஐ.நா.வின் விசேட அறிக்கையாளரும் ஊடகங்களுக்கு எந்தக் கருத்தையும் தெரிவிக்க விரும்பவில்லை. (ற-5,ரி)

### வட பகுதிக்

ஜனாதிபதிமஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் வடக்கில் இடம்பெற்ற காணி அபகரிப்புகள் தொடர்பிலும், வலிகாமத்தில் அரசு விடுவித்துள்ள காணி தொடர்பிலும், மேலும் விடுவிக்கப்படவுள்ள காணி தொடர்பிலும் இந்த உரையில் குறிப்பிடப்படவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசின்கீழ் வலிகாமத்தில் 1100 ஏக்கர் காணி களை விடுவிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இருப்பினும், வலிகாமம் வடக்கில் 197 ஏக்கரும், கிழக்கில் 233 ஏக்கரும் அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் விடுவிக்கப்பட்டது.

670 ஏக்கர் காணிகள் இன்னும் விடுவிக்கப்படாது எஞ்சியுள்ளன. எனவே, இந்தக் காணியை விடுவிப்பது குறித்தும் மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் நாடாளுமன்றத்தில் விளக்கமளிக்கவுள்ளார்.

இதேவேளை, கடந்தவாரம் வடக்கு வந்திருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, காணி விவகாரம் தொடர்பில் வடக்கில் நிலைகொண்டு படையினருடன் கலந்துரையாடியுள்ளார்.

இந்நிலையிலேயே, வடக்கின் காணி விவகாரம் தொடர்பிலான முழுமையான அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித்தார். (ற-சி)

### '19' மீதான

நாடாளு மன்றின் மூன்றிலிரண்டு பெரும் பான்மை பலத்தினூடாக இதை நிறைவேற்றலாம் என்று மறு தரப்பினரும் தத்தமது வாதங்களை முன்வைத்தனர்.

பிரதம நீதியரசர் ஸ்ரீபவன் தலைமையிலான மூவரடங்கிய நீதியரசர் குழாம் முன்னிலையில் நேற்றுக் காலை 10 மணிக்கு ஆரம்பமான இந்த மனுக்கள் மீதான விசாரணை மாலைவரை இடம்பெற்றன.

19 ஆவது திருத்தச்சட்டத்தை சர்வஜன வாக்கெடுப்பின் ஊடாகவே நிறைவேற்ற வேண்டும் என்று மனுதாரர்கள் சார்பில் தமது வாதங்களை முன்வைத்த சட்டத்தரணிகள்,

"பிரதமரின் ஆலோசனையின் பிரகாரமே ஜனாதிபதி செயற்பட வேண்டும் எனக்கூறும் 19ஆவது திருத்தச்சட்டம் அரசமைப்பின் நான்காவது உறுப்புரையை மீறுகின்றது. அரசமைப்பின் மூன்றாவது உறுப்புரை மீறப்பட்டால் மாத்திரமே சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்லவேண்டும். இருப்பினும், நான்காவது உறுப்புரையும், மூன்றாவது உறுப்புரையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டுள்ளதால், இந்த விடயத்திலும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்" என்றும் சட்டவிளக்கங்களை ஆதாரங்காட்டி தமது வாதங்களை முன்வைத்தனர்.

இதற்கு எதிராக தமது வாதங்களை முன்வைத்த சட்டத்தரணிகள்,

"அரசமைப்பின் 3ஆவது உறுப்புரை மீறப்பட்டால் மாத்திரமே சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டும். நான்காவது உறுப்புரை மீறப்பட்டால் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்லத் தேவையில்லை. நாடாளுமன்றத்தின் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் அதை நிறைவேற்றிவிடலாம். இதனூடாக மக்களின் இறைமை பறிக்கப்படவில்லை. நிறைவேற்றுத்துறை, சட்டவாக்கத்துறை முதலான வற்றுக்கிடையில் மாத்திரமே அதிகாரம் மாறுகின்றது. ஓர் அங்கத்திலிருந்து இன்னுமொரு அங்கத்துக்கு அதிகாரம் செல்கிறது. இதனூடாக மக்களின் உரிமை மீறப்படவில்லை. அதனால் சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லத் தேவையில்லை" என சட்டவிளக்கங்களை ஆதாரங்காட்டி தமது வாதத்தை முன் வைத்தனர்.

இவ்வாறு வாதப்பிரதிவாதங்கள் தொடர்ந்ததையடுத்து, மனுக்கள் மீதான விசாரணை நேற்று முடிவடையாத நிலையில், விசாரணை நடவடிக்கைகளை இன்றும் தொடர்வதாக பிரதம நீதியரசர் அறிவித்தார். (ற-சி)

### இராணுவத்தை

இந்தச் சந்திப்பிலேயே, மேற் கண்டவாறு வலியுறுத்தி அறிக்கையைச் சமர்பித் ததாக, சிவில் சமூகத்தி னர் ஊடகங்களுக்கு அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவித்துள் ளனர்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் குறிப்பிட்டதற்கு மாறாகவே இங்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்ப டுகின்றன. பாதிக்கப்பட்ட மக்களோடு கலந்தாலோசித்தே உள்ளகப் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தாலும் இலங்கை அரசு இது வரையிலும் அத்தகைய ஓர் கலந்தாய்வுச் செயன்முறையை ஆரம்பிக்கவில்லை.

ஜனாதிபதி மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் உள்ளக வி[illegible]ணையின் நோக்கம் இலங்கை இராணுவத்தின் நற்பெயரைக் காப்பாற்றுவதற்கே. இதனைப் பல தடவைகள் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். எனவே உண்மையான நம்பத்தகுந்த விசாரணையை நடத்துவதற்கு இலங்கை அரசுக்கு விருப்பம் இல்லை. இதனையே இது எடுத்துக் காட்டுகின்றது. – என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

"இலங்கைப் பிரதமர், யாழ்ப்பாணத்தில் ஆற்றிய உரையில் ஓர் உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவை அமைப்பதே எமது நோக்கம் எனக் கூறியுள்ளமை, குற்றம் செய்தவர்கள் தொடர்பில் குற்ற விசாரணை மற்றும் வழக்குத் தாக்கல் செய்வது தொடர்பில் இந்த அரசுக்கு நாட்டமில்லை என்பதையே காட்டுகின்றது.

மீள உள்ளகப் பொறிமுறைகள் நீதியைப் பெற்றுத் தர முடியாதவை என்று தமிழ் மக்கள் எவ்வளவு தடவை தான் சர்வதேச முறைமைக்கு நிரூபிக்க வேண்டும் என்ற கேள்வியையும் சிவில் சமூக அமையம் இதன் போது எழுப்பியுள்ளது. நிலைமாறு நீதிக்கான செயற்திட்டத்தின் முக்கிய அம்சம் நிறுவன மறுசீரமைப்பு என்பதை சுட்டிக் காட்டியுள்ள அமையத்தின் அறிக்கை இலங்கையின் ஒற்றையாட்சி அரசு மறு சீரமைக்கப்படாத வரை இந்த நிறுவன மறுசீரமைப்பு பூர்த்தியாகாது." – என்றும் சிவில் சமூகம் அந்தச் சந்திப்பில் சுட்டிக் காட்டியுள்ளது. (ற-5)

# காணாமற்போனோருக்கான நீதி கல்லில் நார் உரிப்பது போன்றது

*கூட்டமைப்பின் முன்னாள் எம்.பி. சந்திரநேரு சந்திரகாந்தன் தெரிவிப்பு*

மட்டக்களப்பு, ஏப்.2

"காணாமற் போனவர்கள் காணாமற் போனவர்கள் தான். ஆனால், ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு வந்து போகும் எங்களுக்கோ வயது போய்விடும். எங்களுக்கு நீதி கிடைப்பது என்பது கல்லிலே நார் உரிப்பதற்கு சமன் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன், நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை தெரிவித்தார். எனவே, காணாமற்போவதற்கு காரணமாக இருந்தவர்களும் அவர்களை இல்லாது செய்தவர்களும் கண்முன் இருக்கின்றனர். அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியது டன் எங்களுக்கு நீதியான தீர்ப்பு வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

காணாமற்போனாரின்உறவினர்கள் சங்கமும் கல்முனை மாணவர் மீட்பு பேரவையும் இணைந்து, எதிர்வரும் 8ஆம் 9ஆம் திகதிகளில், ஆலையடிவேம்பில் இடம்பெறவுள்ள ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணையை புறக்கணிப்பது தொடர்பாக நடத்திய கலந்துரையாடல், திருக்கோவில் மெதடிஸ்த தேவாலய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சியைச் சேர்ந்தவனாக இருந்தாலும் காணாமற் போனோர் விடயத்தில் நான் அரசியல் நடத்தவில்லை. இனியபாரதியால் கடத்தப்பட்டு காணாமற் போனோ ரின் உறவினர்கள், முதல் முதலாக அண்மையில் ஆர்ப்பாட்டம் செய்தனர். உறவுகளை இழந்தவர்களுக்குத்தான் தெரியும் அதன் வேதனையும் துன்பமும். எனது தந்தையான சந்திரநேருவை சுட்டவர்கள் கருணாவும் பிள்ளையானும் என எனது தந்தை வாய் முறைப்பாடு கொடுத்திருந்தபோதும் அதற்குக் கூட எந்தவிதமான நீதியும் கிடைக்கவில்லை. எமது பிரதேசத்தில், சின்னவேராக இருந்து ஆலமரமாகி எமது பிரதேசத்தை அழித்த இனிய பாரதியை எதிர்வரும் 28 ஆம் திகதி நீதிமன்றத்தில் நிறுத்தவுள்ளேன். எனதுதந்தையார்கனவு இந்தப் பிரதேசத்தில் நனவாகும்.

எமது உறவுகளை, சொந்தங்களை இழந்துள்ளோம். இனி இழப்பதற்கு ஒன்றுமில்லை. ஆனால், தன்னம்பிக்கையை இழக்கவில்லை. தன்னம்பிக்கை ஊடாக எமது மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றார். (வ)



*வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கடந்த ஜனவரி மாதம்நெடுந்தீவுக்குசென்றபோது அவரால் நெடுந்தீவு மாணவர்களுக்கு வழங்கப்பட்ட சைக்கிள்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (வ-7)*

## நெடுந்தீவு மாணவருக்கு சைக்கிள்கள் வழங்கல்

யாழ்ப்பாணம், ஏப்.2

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கடந்த ஜனவரிமாதம்நெடுந்தீவுக்குவருகை தந்தவேளை அவரால் வழங்கப்பட்ட 8 சைக்கிள்கள், 3 தையல் இயந்திரங்கள் உட்பட பிரிட்டனுக்கான நெடுந்தீவு மக்கள் ஒன்றியம்வழங்கியரூபா4லட்சம்பெறுமதியான31 சைக்கிள்களையும்வழங்கும்நிகழ்வு திங்கட்கிழமை நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

நெடுந்தீவில் உள்ள பாடசாலைகளுக்கு தூர இடங்களில் இருந்து செல்லும் கஷ்டப்பட்ட மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

மகா வித்தியாலய மாணவர்களுக்கு 15, றோ.க. வித்தியாலய மாணவிகளுக்கு 11, மேற்கு சைவப்பிரகாச வித்தியாசாலை மாணவர்களுக்கு 10, மேற்கு ஸ்ரீஸ்கந்த வித்தியாலய மாணவர் மூவருக்குமாக சைக்கிள்கள் வழங்கப்பட்டதுடன்வறுமைநிலையில் உள்ள 3 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாக 3 தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதன் பிரிட்டன்வாழ் நெடுந்தீவு மக்கள் ஒன்றியத் தலைவர் நடராசா இராஜேந்திரம் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே.என். விந்தன் கனகரத்தினம் ஆகியோர் அவற்றை வழங்கினார்கள். பெருமளவு பெற் றோர்கள் நிகழ்வில் கலந்து கொண் டனர். (வ-7)

## மர்மப்பொருள் வெடித்து மாணவி உயிரிழப்பு

திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் வான்எல பொலிஸ் பிரிவுக்குஉட்பட்ட பன்சல்கொடல்ல கிராமத்தில் இடம்பெற்ற வெடிப்பு சம்பவத்தில் மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வான் எல சிங்கள மகா வித்தியாலயத்தில் 8ஆம் தரத்தில் கல்வி கற்றுவந்த 13 வயதுடைய வீரசிங்க முதியன்சலாகே அபசரா தக்சிலா என்ற மாணவியே இந்தச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் நேற்று முன்தினம் மாலை, பூச்செடிகளுக்கு நீர் ஊற்றுவதற்காக குடத்தைஎடுத்து அதற்குள் இருந்த பொருளை வெளியேற்ற முயற்சித்தபோது, குடத்துக்குள் இருந்த பொருள் வெடித்துள்ளது. இதனால் பலத்த காயங்களுக்குள்ளான மாணவி, உடனடியாக கந்தளாய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கண்டி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனின்றி நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வான் எலப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ)

## பொன்னம்பல வாணேஸ்வரருக்கு இன்று தேர்

கொழும்பு, ஏப்.2

கொழும்பு, கொட்டாஞ்சேனையில் அமைந்துள்ள ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத் தேர்த்திரு விழா இன்று வியாழக்கிழமை காலை 6 மணிக்கு கோயில் வளாகத்தில் நடைபெறும்.

தீர்த்தத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (வ)



*நெடுங்கேணி பிரதேச செயலர் பகுதியில் போரால் அவயவங்களை இழந்துள்ள, காயமடைந்த மக்களுக்கு பிரான் ஸில் வசித்துவரும் திரு.திருமதி தேவமனோகரன் தம்பதிகளின் புத்திரன் பிரவீனின் 15ஆவது அக வைவ்யை முன்னிட்டு உலர் உணவுப் பொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (வ)*

## பொத்துவிலில் வீடற்றோருக்கு வீடு வழங்கும் திட்டம் ஆரம்பம்

அரசின் 100 நாள்கள் வேலைத்திட்டத்தின் கீழ் சமுர்த்தி வீடமைப்பு அமைச்சின் 'சமட்ட செவன' வீடற்றோருக்கான வீடு வழங்கும் திட்டம் ஒன்றை பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட செங்காமம் பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத்திட்டத்தின் கீழ், பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மூவினங்களையும் சேர்ந்த சுமார் 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு குடும்பத்துக்கும் செங்காமம் பிரதேசத்தில் தரிசு நிலமாக காணப்பட்ட அரச காணியிலிருந்து 60 பேர்ச் காணித்துண்டுகள் வீதம் வழங்கப்பட்டுள்ளன. அரசால் வழங்கப்பட்டுள்ள இந்த காணியில் வீடுகளை நிர்மாணிப்பதற்காக கடனடிப்படையில் ஒவ்வொரு குடும்பத்தவர்களுக்கும் மாதாந்தம் ஆயிரம் ரூபா செலுத்தும் விதத்தில் கடன் அடிப்படையில் ஒரு இலட்சம் ரூபா வீதம் நிதியுதவி வழங்குவதற்கான ஏற்பாடுகளை தேசிய வீடமைப்பு அதிகார சபை மேற்கொண்டுள்ளது. (வ)

# மாற்றுத் திறனாளிகள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு தீர்வு காணுதல் அவசியம்

வவுனியா, ஏப்.2

போர் முடிவுக்கு வந்து ஆறு வருடங்களைக் கடந்துள்ள போதிலும் சட, அதனால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள் தமது நாளாந்த வாழ்வாதாரத் தேவைகளுக்காகவும், மருத்துவ வசதிகளுக்காகவும் பல்வேறு கஷ்டங்களை எதிர்கொண்டுள்ளன. அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் அவசியம் என்று தெரிவித்தார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்.

வவுனியா வடக்கு, நெடுங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் வசித்துவரும் இறுதிக்கட்ட போரால் அவயவங்களை இழந்துள்ள, கடும்காயமுற்றுள்ள போராளிகள் பொதுமக்களுக்கு பிரான்ஸில் வசித்துவரும் திரு.திருமதி தேவமனோகரன் தம்பதிகளின் புத்திரன் பிரவீனின் 15ஆவது அகவையைமுன்னிட்டு உலர் உணவுப் பொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டன. இதன்போது வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கலந்து கொண்டு 100 குடும்பங்களுக்கு உணவுப்பொருள்களை வழங்கினார். இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் மட்டும் 540 பேர் அவயவங்களை இழந்தும், கடும் காயமுற்றும் மாற்றுத் திறனாளிகளாக உள்ளனர். அவர்களில் 160 பேர் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கிலுள்ள மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரத்துக்கு நிரந்தரத் தீர்வைக்காண, புதிய அரசு விசேட செயலணியை உருவாக்கி, அதன் ஊடாக முழுமையான தகவல் திரட்டுகளை மேற்கொண்டு, மாதாந்த உதவித் தொகையும், வாழ்வாதாரத்துக்கான நிரந்தர உதவியும், மருத்துவ உதவிகளையும் வழங்கும் திட்டங்களை செயற்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (வ)

## இலவச சிங்கள மொழி பயிற்சி சனி ஆரம்பம்

அச்சுவேலி, ஏப். 2

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியில் யாழ். கல்வி வலய முறைசாராப் பிரிவால் நடத்தப்படும் இலவச சிங்கள மொழி கற்கை நெறி நாளை மறுதினம் சனிக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. பயிற்சி நெறியில் இணைந்து கொள்ள விரும்புவோர் கல்லூரி அதிபரின் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளலாம் என்று யாழ். கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவு அறிவித்துள்ளது.

முற்றிலும் இலவசமாக வழங்கப்படும் 6 மாதகாலப் பயிற்சிநெறி விடுமுறை நாள்களில் பிற் பகல் வேலைகளில் நடைபெறவுள்ளது. பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-11)

# தேசிய உதைபந்தாட்ட அணியில் தமிழ் வீரர்கள்

யாழ்ப்பாணம்,ஏப் 02

14 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான இலங்கைத் தேசிய உதைபந்தாட்ட அணியில் இரண்டு தமிழ் வீரர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

தஜிகிஸ்தானில் எதிர்வரும் மே மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ள 14 வயதுப் பிரிவினருக்கான ஆசிய உதைபந்தாட்டத் தொடரில் பங்குபற்றவுள்ள இலங்கை தேசிய அணியின் 30 பேர் கொண்ட குழாமில் இரண்டு தமிழ் வீரர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். இதில் சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த யனுசன், மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த கஜனன் ஆகிய இரண்டு வீரர்களுமே 30 பேர் கொண்ட குழாமில் இவ்வாறு உள்வாங்கப்பட்ட வீரர்களாவார்கள்.

கடந்த காலங்களில் 30பேர் கொண்ட தேசிய அணியில் தமிழ் வீரர்கள் உள்வாங்கப்பட்டாலும் 15பேர் கொண்ட அணியிலிருந்து அவர்கள் புறக்கணிக்கப்பட்டு வந்தனர். 15பேர் கொண்ட அணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டாலும் நீண்டநேரம் மைதானத்திற்குள் விளையாடுவது என்பது சாத்தியப்படாத ஒன்றாகவே இருந்து வந்துள்ளது என்ற பொதுவான அபிப்பிராயங்கள் நிலவுகின்ற நிலையில் இந்த வீரர்களாவது இலங்கையை முழுமையாகப்பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் வீரர்களாக அமைவார்களா என்பதே பரவலான எதிர்பார்ப்பாக உள்ளது. (த-ரி-23)

## இந்து இளைஞர்-நவஜீவன் இறுதியாட்டத்தில் மோதல்

யாழ்ப்பாணம், ஏப் 02

உசன் சிறிமுருகன் விளையாட்டுக் கழகத்தின் 55ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கரப்பந் தாட் டத் தொடரின் அரையிறுதியாட்டங்களில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி, உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளை யாட்டுக் கழக அணி ஆகியவை வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றன.

கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் உசன் சிறிமுருகன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த அரையிறுதியாட்டங்களில் முதலில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. 5 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டதிற்கு தகுதி பெற்றது.

இரண்டாவது அரையிறுதி யாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அச்சுவேலி கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. 5 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டதிற்குத் தகுதி பெற்றது. (த-ரி-23)

## கனிஷ்ட பிரிவு விளையாட்டு அடுத்த மாதம் கொழும்பில்

யாழ்ப்பாணம், ஏப் 02

இலங்கை மெய்வன்மைச் சங்கம் நடத்தும் கனிஷ்ட பிரிவினருக்கான விளையாட்டு போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் வீரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை மெய்வன்மைச் சங்கம் நடத்தும் கனிஷ்ட பிரிவினருக்கான விளையாட்டு விழா எதிர்வரும் மே மாதம் 23ஆம், 24ஆம், 25ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது. மேற்படி விளையாட்டு விழாவில் பங்குபற்ற விரும்பும் வீரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப் படிவங்களை யாழ்.மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தின் செயலாளர் சுகிர்தனிடம் பெற்றுக் கொள்ள முடியும். (த-ரி-23)

## அமரகவி, மோகனதாஸ் அடுத்த சுற்றுக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஏப் 02

96ஆவது அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவில் ஓர் அங்கமான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அருணோதய சனசமூக நிலைய மைதானத்தில் மின்ஒளியில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத் தொடரில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற லீக் ஆட்டங்களில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் இணுவில் அமரகவி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் இணுவில் அமரகவி விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு லீக் ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றொரு லீக் ஆட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்தசிறீ அணியை எதிர்த்து மீண்டும் இணுவில் அமரகவி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இந்த ஆட்டத்தில் இணுவில் அமரகவி விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. (த-ரி-23)

## இளவாலை மத்தி, கலைமகள் ஆட்டங்களில் அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், ஏப் 02

தொண்டமானாறு கலைவாணி சனசமூகநிலையத்தின் 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் மின்னொளியிலான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கலைவாணி சனசமூகநிலைய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

அதில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற லீக் ஆட்டங்களில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி சிவகுமாரன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. 3 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் இளவாலை மத்திய விளையாட்டுக்கழக அணி 2:0 என்றசெற்கணக்கில்வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு லீக் ஆட்டத்தில் தொண்டமானாறு கலைமகள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமகள் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. 3 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் புத்தூர் கலைமகள் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது. (த-ரி-23)

## அம்பாளிடம் சரணடைந்தது ஆதிசக்தி

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் உதைபந்தாட்டத் தொடரில் நவிண்டில் சிறீ அம்பாள் அணி வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்றது.

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு ஏழுபேர் கொண்ட உதைபந்தாட்ட தொடர், கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இந்தத்தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் வல்லை ஆதி சக்தி கழகமும் நவிண்டில் சிறீ அம்பாள் கழகமும் மோதின.

ஆட்டம் ஆரம்பித்து நான்காவது நிமிடத்திலேயே சிறீ அம்பாள் அணி முதல் கோலை அடித்து ஆட்டத்தில் கோல் கணக்கை ஆரம்பித்து வைத்த பெருமையுடன் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தது. ஆதிக்கத்தை அடக்க நினைத்த ஆதி சக்தி அசத்தலாக ஆடி பத்தாவது நிமிடத்தில் பக்கர்வாக பழிதீர்த்துக் கொண்டது. ஆனாலும் ஆதி சக்தியை ஆட்டிப் படைப்பது என்ற விடாப்பிடியுடன் சிறீ அம்பாள் வீரன் சுகந்தன் மீண்டும் ஒரு கோலை பதிவு செய்ய ஆட்டத்தின் முதல்பாதியில் சிறீ அம்பாள் 2–1 என்ற அடிப்படையில் முன்னிலை வகித்தது.

ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் அம்பாளை அடக்குவதற்காக பல வியூகங்களை வகுத்தனர் ஆதி சக்தி வீரர்கள். எதுவும் எடுபட வில்லை. அடுத்தடுத்து இரண்டு கோல்களை அடித்து நொறுக்கினார் சிறீ அம்பாளின் வீரன் தர்சன். முடிவில் ஆதி சக்தி அம்பாளிடம் 4:1 என்ற கோல் கணக்கில் படுதோல்வியடைந்தது. (சு-ரி-108)

## பாக். தெரிவுக் குழு தலைவர் மாற்றம்

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தேர்வுக் குழுத் தலைவராக இருந்த மொயின்கான் அதிரடியாக நீக்கப்பட்டு புதிய தலைவராக, ஹாரூன் ரஷீத் நியமிக்கப்பட்டுள்ளார்.

உலகக் கிண்ணத் தொடரின்போது பாகிஸ்தான் அணியின் தேர்வுக் குழுத் தலைவராக இருந்தவர் பாகிஸ்தானின் முன்னாள் இலக்குக் காப்பாளர் மொயின் கான். பாகிஸ்தான் அணியினருடன் ஆஸ்திரேலியா சென்றிருந்த மொயின் கான், சூதாட்ட விடுதிக்குச் சென்றது உள்ளிட்ட பல்வேறு சர்ச்சைகளில் சிக்கினார். இதையடுத்து, உடனடியாக அவர் பாகிஸ்தான் திரும்புமாறு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை உத்தரவிட்டது. அடுத்த கட்டமாக அவரிடம் இருந்த தலைவர் பதவி பறிக்கப்பட்டுள்ளது. அவருக்கு பதில் ஹாரூன் ரஷீத் தேர்வுக் குழுவின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ரஷீத் பாகிஸ்தான் அணிக்காக 23 டெஸ்ட் மற்றும் 12 ஒரு நாள் ஆட்டங்களில் பங்கேற்றுள்ளார்.

தேர்வுக் குழுவின் தலைவராக பதவியேற்ற ரஷீத் தெரிவிக்கையில் 'பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தேர்வாளர்கள், சிறந்த அணியையே தேர்வு செய்ய வேண்டும். தேர்வாளர்கள் தொடர்ந்து சிறப்பாகப் பணியாற்றத் தவறினால், நீக்கப்படுவார்கள். திறமையும், தன்னம்பிக்கையும் உள்ள புதிய வீரர்களைக் கண்டறிவதற்கு, தேர்வாளர்கள் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். பயிற்சியாளர்களும் தங்களது சிறந்த பங்களிப்பை அளிக்கவேண்டும். வீரர்கள் தங்கள் தேர்வை நியாயப்படுத்தும் விதத்தில், முழுத் திறனை வெளிப்படுத்துவது அவசியம். வீரர்கள் தொடர்ந்து சிறப்பாக விளையாடத் தவறினால் தேர்வுக்குழு மாற்று ஏற்பாட்டைச் செய்யும்.' என்றார். (த-ரி)

## பதவி விலகினார் ஐ.சி.சி தலைவர்

சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் (ஐ.சி.சி) தலைமைப் பதவியிலிருந்து முஸ்தபா கமால் திடீரென விலகியுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையில் நேற்று வரை தலைவராக இருந்தவர் முஸ்தபா கமால். இவர் பங்களாதேஷைச் சேர்ந்தவர். நடந்து முடிந்த உலகக்கிண்ண தொட ரின் இரண்டாவது காலிறுதி ஆட்டத்தில் இந்தியா, பங்களாதேஷ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் இந்திய வீரர் ரோகித் சர்மாவுக்கு முறையற்ற பந்துவீச்சு (நோ–போல்) வழங்கிய விவகாரத் தில் நடுவர்களின் சதி இருப்பதாக, முஸ்தபா சர்ச்சையைக் கிளப்பினார். ஆனால் இந்தச் சர்ச்சையை தலை மைப் பொறுப்பை விட அதிக பல முடைய ஐ.சி.சியின் நிர்வாகக் குழு நிராகரித்தது. பின்னர் இந்த விவ காரம் சற்று ஓய்ந்த பின்னர் இப் போதுபுதிய சர்ச்சையொன்றைக் கிளப்பி பதவி விலகியுள்ளார். அதாவது கிண்ணத்தை வென்ற ஆஸ்திரேலிய அணிக்கு, ஐ.சி.சியின் தலைவர் என்ற முறையில் நான் தான் கிண்ணத்தை வழங்க வேண்டும். ஆனால் ஸ்ரீனிவாசன் வழங்கியது விதிமுறை மீறல்எனவும்புகார்தெரிவித்துள்ளார்.

இப்படி பல பிரச்சினைகளால், கோபமடைந்த முஸ்தபா, ஐ.சி.சியில் என்ன நடக்கிறது, யார் யார் தவறான செயல்களில் ஈடுபடுகின்றனர் என்பதை தெரிவிப்பேன் என்று சில நாள்களுக்கு முன் தெரிவித்திருந்தார். இந்நிலையில், தான் ஏற்கனவே தெரிவித்திருந்தபடியே ஐ.சி.சி. தலைவர் பதவியை திடீரென தூக்கி எறிந்துள்ளார். இது குறித்து முஸ்தபா தெரிவிக்கையில் சட்டத்திற்கு உட்பட்டு நடக்காதவர்களுடன் என்னால்பணிசெய்யமுடியாது.இதனால் தான், தலைவர் பதவியை விட்டு விலகினேன். நான் பதவியை விட்டு விலகவேண்டும்என்று உலகக் கிண்ண தொடர் நடக்கும் பொழுதே திட்டமிட்டேன். ஆனால் உலகக் கிண்ண தொடர்நடைபெறும்பொழுது பாதியில் செல்லக் கூடாத காரணத்தினால் தான் பொறுத்திருந்து தற்பொழுது பதவிவிலகியுள்ளேன் என்றார்.(த-ரி)

## சங்காவுக்கு மீண்டும் அழைப்பு



கடந்த உலகக்கிண்ணத் தொடருடன் ஓய்வினை அறிவித்த நட்சத்திர வீரர் சங்ககாரவை மீண்டும் அணியில் இணைத்து குறைந்தது ஒரு வருடமாவது விளையாடுமாறு விளையாட்டுத்துறை அமைச்சர் நவீன் திஸாநாயக்கா அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த உலகக்கிண்ணத் தொடருடன் இலங்கையின் தூண்களாக இருந்த சங்கக்காரவும் ஜெயவர்த்தனவும் ஓய்வினை அறிவித்துச் சென்றிருந்தனர். மஹேல ஓய்வினை அறிவித்தது தொடர்பாகப் பெரிதும் கண்டுகொள்ளப்படவில்லையென்றாலும் சங்காவைத் தொடர்ந்து அணியில் இணைந்திருக்குமாறு அணித் தலைவர் மத்தியூஸ், தெரிவுக்குழுத் தலைவர் சனத் ஜயசூரிய உட்பட சக வீரர்கள் அனைவரும் மாறிமாறி வேண்டுகோள் விடுத்திருந்தனர். ஆனால் எவரது கோரிக்கையையும் பொருட்படுத்தாத சங்கா 'இலங்கைக் கிரிக்கெட் சிறந்த கைகளிலேயே ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனால் இலங்கைக் கிரிக்கெட்டுக்கு சிறந்த எதிர்காலம் உண்டு' என்று தெரிவித்து விட்டு தான் தெரிவித்த மாதிரியே உலகக்கிண்ணத் தொடருடன் விடைபெற்றார். சர்தார்ணமாக விடைபெற்றாலும் ஓரளவு பரவாயில்லை. விடைபெறும் தருணத்தில் தொடர்ந்து நான்கு சதங்களை விளாசித்தள்ளி மிகச்சிறந்த திறன் நிலையில் இருந்த வேளையில் விடைபெற்றார். இதனால் இலங்கை கிரிக்கெட்டுடன் தொடர்பு பட்ட அனைவரும் இரட்டிப்பு சோகத்துக்கு உள்ளானார்கள். இந்த நிலையில் இலங்கை கிரிக்கெட்டின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்ட விளையாட்டுத்துறை அமைச்சர் நவீன் திசநாயக்கா சங்காவை நேற்றுக் கொழும்பில் சந்தித்தபொழுது குறைந்தது ஒரு வருடம் அணியில் இருக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். (த-ரி)

# ஆரியக் கூத்தாடினாலும் ஆஸி. காரியத்தில் கண்





உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றிய வெற்றிக்கொண்டாட்டத்தில் அயர்ந்து விடாமல் தொடர்ந்தும் தனது சிறப்பான செயற்பாட்டை வெளிப்படுத்தி வருகின்றது ஆஸ்திரேலிய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை. இதன் ஒரு கட்டமாக மேற்கிந்தியத்தீவுகளுடனான டெஸ்ட் தொடரினதும், ஆஸிஸ் தொடரினதும் வீரர்களை அந்த நாட்டு கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

இந்த மாதம் எதிர்வரும் எட்டாம் திகதி ஐ.பி.எல் தொடர் நடைபெறவுள்ள நிலையில் ஐ.பி.எல் தொடரில் தமக்கு பிடித்த வீரர்களையும் அவர்கள் களமிறங்கும் அணிகளையும் ஆதரிக்க உலக மக்கள் பலரும் தயாராகி விட்டனர். உலக நாடுகளின் கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபைகளும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆனால் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றினாலும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அடுத்த கட்ட தொடர்களுக்கு தயாராகிவிட்டது. ஆஸ்திரேலிய அணி அடுத்து மே.தீவுகளுடன் டெஸ்ட் தொடரிலும் அதற்கடுத்து ஆஸிஸ் தொடரிலும் விளையாட உள்ளது. இந்த நிலையில் இந்தத் தொடர்களுக்கான வீரர்களை ஆஸ்திரேலிய கிரிக் கெட் கட்டுப்பாட்டுச் சபை ஐ.சி.சிக்கு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது. அதற்கேற்ப வீரர்களையும் தயார்ப்படுத்த ஆரம்பித்துள்ளது.

இந்த இரண்டு தொடர்களுக்குமாக அறிவிக்கப்பட்ட ஆஸ்திரேலிய டெஸ்ட் அணி வருமாறு: மைக்கல் கிளார்க் (தலைவர்), ஸ்டீவ் சிமித் (துணைத்தலைவர்), பவாத் அகமது, பிராட் ஹேடின், ஹசில்வுட், ரயான் ஹேரிஸ் (ஆஸிஸ் தொடருக்கு மட்டும்), மிட்செல் ஜோன்சன், நேதன் லயன், மிட்செல் மார்ஷ், ஷேன் மார்ஷ், பீற்றர் நெவில், கிறிஸ் ரோஜர்ஸ், பீற்றர் சிடில், மிட்செல் ஸ்டார்க், ஆடம் வோஜஸ், டேவிட் வோர்னர், ஷேன் வாற்சன்.

ஆஸ்திரேலியா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் இந்த முற்போக்கான செயற்பாடு உலகமக்கள் பலரதும் கவனத்தை ஈர்த்துள்ளது. (த–ரி)



## ஆஸ்திரேலிய அணியில் பாகிஸ்தானின் வீரர்

மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் ஆஸிஸ் தொடர்களுக்காக அறிவிக்கப்பட்ட ஆஸ்திரேலிய அணியில் பாகிஸ்தானை சேர்ந்த வீரர் இடம்பிடித்துள்ளார்.

உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த நிலையில் அடுத்த கட்டமாக ஆஸ்திரேலிய அணி மேற்கிந்தியத் தீவுகளுடனான டெஸ்ட் தொடரிலும் இங்கிலாந்துடனான ஆஸிஸ் தொடரிலும் கலந்துகொள்ளவுள்ளது. இந்தத் தொடர்களில் பாகிஸ்தானைச் சேர்ந்த பவாத் அகமது என்ற சுழற்பந்துவீச்சாளர் தேர்வுசெய்யப்பட்டுள்ளார். 2013 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலிய குடியுரிமையை பெற்ற அகமது ஆஸ்திரேலியாவின் உள்ளூர் (கழகம்) அணியான விக்டோரியா அணிக்காக விளையாடி வருகின்றார். ஆஸ்திரேலியாவின் பிரபல உள்ளூர்த் தொடரான ஷீணல்ட் தொடரில் ஒரு இன்னிங்ஸில் 8 இலக்குகளை கைப்பற்றி விக்டோரியாவின் வெற்றிக்கு வித்திட்டார். இதனையடுத்தே அவர் டெஸ்ட் அணியில் தேர்வு செய்யப்பட்டுள்ளார். (த–ரி)

## மீண்டும் வருவோம்

எதிர்வரும் ஐ.பி.எல். தொடரில் சிறப்பாக செயற்பட்டு மீண்டும் தேசிய அணியில் இடம்பிடிப்போம் என்று நட்சத்திர சகலதுறை வீரர் யுவராஜ் மற்றும் வேகப்பந்து வீச்சாளர் சகீர்கான் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.




இது குறித்து யுவராஜ் தெரிவித்தது 'டோனி என்னைப் புறக்கணித்ததில் நியாயமுள்ளது. புற்றுநோய்க்காக சிகிச்சை பெற்று மீண்டு வந்ததில் இருந்து கடந்த சில ஆண்டுகள் எனக்கு கடினமாக இருந்தது உண்மைதான். கடினமான முயற்சிக்குப் பின், தற்போது நல்ல உடற்தகுதியுடன் உள்ளேன். வரும் ஐ.பி.எல்., தொடர் எனக்கு மிகவும் முக்கியமானது. இதில் சிறப்பாக விளையாடும் பட்சத்தில், மீண்டும் இந்திய அணிக்கு திரும்ப முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. கடந்த 7வது தொடரில் சொதப்பியது. இம்முறை ஒருங்கிணைந்து செயல்பட்டு, டில்லி அணியின் வெற்றிக்கு உதவ முடியும் என, நம்புகிறேன். டில்லியின் வடக்குப் பகுதியில் தான் நான் பிறந்தேன். இங்குள்ள மக்களும் அவர்களின் கலாசாரமும் எனக்கு புதியதல்ல. ரசிகர்கள் ஆதரவுடன் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியும். இந்த ஐ.பி.எல் தொடரில் டோனியின் கவனம் என்மீதும் இருக்கும் என்று நம்புகின்றேன்.' என்றார்.

மீண்டும் தேசிய அணியில் இடம்பிடிப்பது தொடர்பாக டில்லி அணியில் இம்முறை இணைந்துள்ள வேகப்பந்து வீச்சாளர் சகீர்கான் தெரிவிக்கையில் 'கடந்த 2011இல் இந்திய அணி உலகக்கிண்ணத்தை வெல்ல ஒருவிதத்தில் காரணமாக இருந்தவர் கிறிஸ்டன். சிறந்த பயிற்சியாளரான இவருடன் மறுபடியும் சேர்ந்து, டில்லி அணிக்காக அசத்தல் ஆட்டத்தை வெளிப்படுத்த முடியும் என நம்புகிறேன். ஏனெனில், இவர் எப்படி செயல்படுவார் என்று நன்கு தெரியும். எங்களிடம் இருந்து என்ன எதிர்பார்ப்பது என்று அவருக்கும் தெரியும். எனது முழுத்திறமையையும் ஐ.பி.எல் தொடரில் வெளிப்படுத்தி மீண்டும் இந்திய அணிக்கு திரும்ப முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.' என்றார். (த–ரி)

# விளையாட்டிலும் பெரும் ஊழல் ; இலங்கை கிரிக்கெட் சபை கலைப்பு

ஊழல் குறித்த சர்ச்சைகளை அடுத்து, இலங்கை கிரிக்கெட்டை நிர்வகிக்க, தற்காலிகக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கை அணியின் உலகக்கிண்ண தொடர் தோல்விக்கு வீரர்கள் தேர்வில் அரசியல் தலையீடு, பயிற்சியாளர் சரியில்லாதது என, பல காரணங்கள் கூறப்பட்டன. இதுகுறித்து இலங்கை கிரிக்கெட் வாரியம் (எஸ்.எல்.சி.,) தலைவர் ஜயந்த தர்மதாசாவுக்கு கடிதம் எழுதப்பட்டது. இதனிடையே, எஸ்.எல்.சி.,யை கலைத்துவிட்டு எதிர்வரும் எஸ்.எல்.சி தேர்தல் வரை இலங்கைக் கிரிக்கெட்டை தற்காலிகக் குழு பொறுப்பேற்று நடத்தும் எனப் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில் 'இலங்கை கி[illegible]க்கட்டில் ஊழல் குற்றச்சாட்டுக்கள் பெருகி[illegible]டடன. ஏப்பிரல் 30இல் நடக்கவுள்ள தேர்த[illegible]க்கு முன் இதை சரிசெய்ய வேண்டும். தவிர,




ஸ்டேட் என்ஜினியரிங் கார்பரேசனுக்கு இலங்கைக் கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபை 5 கோடி தர வேண்டும். இது தொடர்பான பண பரிவர்த்தனைகளுக்கு இலங்கை பாராளுமன்றம்தான் பொறுப்பு. இதனால், விளையாட்டு விதிகளின் படி, தற்காலிக குழுவொன்று அமைத்து நிர்வகிக்கப்படும்' என்றார். (த–ரி)

# கொல்கத்தாவுக்கு புதிய சிக்கல்

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் இடம் பெற்றிருந்த நியூஸிலாந்து வீரர் ஜிம்மி நீஸம், ஆஸ்திரேலிய வீரர் கிறிஸ்லின் ஆகியோர் காயம் காரணமாக ஐ.பி.எல் தொடரில் இருந்து விலகியுள்ளனர்.

எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறவிருந்த ஐ.பி.எல். தொடரில் பங்கேற்க வீரர்கள் முழுமூச்சாக தயாராகி வரும் நிலையில் நீஸம், லின் ஆகியோர் காயமடைந்து தொடரைவிட்டு விலகியுள்ளனர். அவர்களுக்குப் பதிலாக முன்னாள் பாகிஸ்தான் வீரர் அசார் மெஹ்மூத், தென்னாபிரிக்க வீரர் போத்தா ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர். ஐ.பி.எல். தொடரின் முதலாவது ஆட்டத்தில் எதிர்வரும் எட்டாம் திகதி மும்பையும், நடப்பு சம்பியன் கொல்கத்தாவும் மோதுகின்றன. (த–ரி)


## சென்னையின் ஐ.பி.எல் வருமானத்துக்கு ஆப்பு

சென்னை சேப்பாக்கம் துடுப்பாட்ட மைதானத்தில் அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ள 3 பார்வையாளர் மண்டபங்களை இடிக்கவேண்டும் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சேப்பாக்கம் மைதானத்தில் புதிதாக கட்டப்பட்ட ஐ, ஜே, கே ஆகிய பார்வையாளர் மண்டபங்களைக் கட்டுவதற்கு உரிய அனுமதி பெறாததால் அவற்றை இடிக்க உத்தரவிட வேண்டும் என்று வழக்கு தொடரப்பட்டது. இதை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், அனுமதி பெறாமல் கட்டப்பட்ட 3 மண்டபங்களையும் இடிக்குமாறு கிரிக்கெட் சங்கத்துக்கு உத்தரவிட்டது. இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்குக்கான நீதிபதிகள் ரஞ்சன் கோகாய், ரமணா ஆகியோர் முன்னிலையில் வழக்கு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. அதில் சர்வதேச தரத்தில் உரிய பாதுகாப்பு வசதிகளுடன் இந்த மண்டபங்கள் கட்டப்பட்டுள்ளன. பாதுகாப்பு குறைபாடுகள் எதுவும் இல்லை. ஏப்ரல் மாதம் ஐ.பி.எல் ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. இதற்கான அறிவிப்புகளும் வெளியிடப்பட்டுள்ளன. எனவே, அவற்றை இடிக்குமாறு பிறப்பித்த உத்தரவுக்கு தடை விதிக்க வேண்டும் மைதானத்தின் நிர்வாகம் சார்பாக வாதிடப்பட்டது. இதை ஏற்க மறுத்த நீதிபதிகள், 'கிரிக்கெட் ஆட்டத்தை விட பொது மக்களின் பாதுகாப்பே முக்கியம். எனவே, சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி மூன்று மண்டபங்களை யும் இடித்தே யாகவேண்டும் என்று உத்தரவிட்டனர். இதனையடுத்து இந்த மூன்று மண்டபங்களும் இடிக்கப்பட்டால் ஐ.பி.எல் தொடரில் சேப்பாக்கம் மைதானத்தால் கிடைக்கும் வருமானம் மூன்றில் ஒரு பங்கு குறைவாகவே கிடைக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. (த–ரி)

## ஐ.பி.எல் அட்டவணை திடீரென மாற்றங்கள்




கொல்கத்தாவில் நகராட்சித் தேர்தல் நடப்பதையடுத்து, ஐ.பி.எல்., அட்டவணையில் மாற்றம் செய்யப்பட்டு ஐந்து மாற்றங்களுடன் புதிய அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

எட்டாவது ஐ.பி.எல்., தொடர் எதிர்வரும் 8 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. ஐ.பி.எல் தொடரின் சில லீக் ஆட்டங்கள் கொல்கத்தாவிலும் நடைபெறவுள்ளன. இதனிடையே, கொல்கத்தாவில் எதிர்வரும் ஏப். 18 இல் நகராட்சித் தேர்தல் நடக்கிறது. இதனால், 'ஐ.பி.எல்., அந்த நாட்களில் நடைபெறும் ஆட்டங்களுக்கு பாதுகாப்பு தர முடியாது, வேறு திகதிகளில் மாற்றிக் கொள்ளுங்கள்,' என்று பொலிஸார் தெரிவித்ததையடுத்து இந்த மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

மாற்றம் செய்யப்பட்ட ஆட்டங்களின் விவரம்–

ஏப்ரல் 14ஆம் திகதி நடக்க இருந்த சென்னை கொல்கத்தா ஆட்டம் ஏப்பிரல் 30ஆம் திகதி இரவு 8 மணிக்கு நடைபெறும்.

ஏப்ரல் 28ஆம் திகதி டில்லி– கொல்கத்தா அணிகள் மோத இருந்த ஆட்டம் மே 7ஆம் திகதி இரவு 8 மணிக்கு நடைபெறும்

கொல்கத்தா அணி சென்னையில் ஏப்ரல் 30ஆம் திகதி விளையாட வேண்டிய ஆட்டம், ஏப்ரல் 28ஆம் திகதிக்கு மாற்றப்படுகிறது.

ஏப்ரல் 14ஆம் திகதி ராஜஸ்தான், மும்பை அணிகள் மோதவிருந்த ஆட்டம் மாலை 4 மணிக்குப் பதில், இரவு 8 மணிக்கு நடைபெறும்.

மே 7ஆம் திகதி ராஜஸ்தான், ஐதராபாத் அணிகள் மாலை 4 மணிக்கு மோதவிருந்த ஆட்டம் இரவு 8 மணிக்கு நடைபெறும். (த–ரி)

# கொட்டில் அமைத்த மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம், ஏப். 2

மீன் பிடிப்பதற்காக கடற்கரையில் தற்காலிக கொட்டில்களை அமைத்த நாவாந்துறையை சேர்ந்த இரு மீனவர்கள் யாழ்ப்பாண பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் முற்படுத்தப்பட்டனர். கடற்கரையோரங்களில் இவ்வாறு கொட்டில்களை அமைப்பது சட்ட விரோதமானது என தெரிவித்தே பொலிஸார் இவர்களை கைது செய்திருந்தனர்.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப் பட்டபோது மீனவர்கள் சார்பில் தோன்றிய சட்டத்தரணி பரம்பரை பரம்பரையாக மீனவர்கள் கடற் கரையில் கொட்டில்களை அமைத்து தமது தொழிலை செய்து வருவ தாகவும் திடீரென அவர்களுடைய தொழிலை பாதிக்கும் விதமாக பொலிஸார் இவ்வாறு நடந்து கொள்வது தொழிலாளர்களுடைய வாழ்வாதாரத்தை பாதிக்கும் செயல் என்று தெரிவித்தார்.

குறித்த இரண்டு மீனவர்களையும் தலா ஐம்பதாயிரம் ஆள்பிணை யில் செல்லுமாறு உத்தரவிட்ட நீதிமன்றம் இவ்வழக்கை ஆவணி மாதம் மூன்றாம் திகதி விளக்கத் துக்கு ஒத்தி வைத்தது.

(ந-103)


விக்னா
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட்.
O/L DAY CLASS 8.00/2.00 மணி
ஆரம்பம் 3.4.2015 8.00 மணி

- இவ்வருடம் பிரிவு 5 மட்டுமே
- பிரிவு 1 60 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி.
- கடமை கட்டுப்பாடுடன் நடக்கும் ஒரே நிறுவனம்.
- யாழ். நகரில் DAY CLASS இங்கு மட்டுமே

அனுமதி இன்று முதல்
ஆண்டு 6 - O/L 2 தவணைக்கான வகுப்பு
4.4.2015, 9.30 சனி

DCM
ஏப்பிரல் 04 | யாழ் நகர் - 8.00am | சுன்னாகம் - 3.00pm

வர்த்தகப் பிரிவு

| | |
|---|---|
| பொருளியல் | வணிகக்கல்வி |
| S.ஜெயகுமார் | V.முரளி |
| கணக்கீடு | ஆங்கிலம் |
| A.P.பகீரதன் | V.பிரபாகரன் |

கலைப் பிரிவு

| | |
|---|---|
| தமிழ் | வரலாறு |
| K.சந்திரலிங்கம் | R.R.ஆனந்தன் |
| அரசியல் | ஊடகம் |
| K.சுகாஷ் | S.ஜனார்த்தனன் |
| புவியியல் | அளவையியல் |
| P.குமரன்/ T. தினேஸ் | T.நீதன் |
| இந்து நாகரிகம் | கிறிஸ்தவம் |
| T.றஜீஸ், S.சுரேஸ் | T.தேவா |
| நா.-அரங்கியலும் | சித்திரம் |
| R.ரமேஸ் | V.நிசாந்தன் |

தொழிநுட்பப் பிரிவு

| | |
|---|---|
| Science Tech | ICT |
| N.ஜனா | S. சிவா |
| Bio Tech | விவசாயம் |
| R. விக்கி | R. விக்கி |
| Eng-Tech | மனைப்பொருளியல் |
| T.ராம் | S. மஜீவன் |

இன்று கருத்தரங்கு
வேம்படி பாடசாலை மாணவ சமூகத்திற்கு
BIOLOGY
CHEMISTRY
இரு மொழிகளிலும் நிகழும் கல்வித் தேவைக்கும் பிரத்தியேக வகுப்பிற்கும்
நரேந்திர சிங்கம் மாஸ்டர்
0777730840

புதிய நாவலர் கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி.ஆனைப்பந்தி. யாழ்நகர்.
O/L Day Class
ஆரம்பம் : 03-04-2015 வெள்ளி 8 மணி

NEC
இரு இடங்களில் பருத்தித்துறை வீதி.ஆனைப்பந்தி. மணிக்கூட்டு வீதி.யாழ்ப்பாணம்.
A/L 2017
கலை,வர்த்தக, தொழில்நுட்ப பிரிவு – 11
ஆரம்பம் : 04-04-2015 சனி காலை 9.00மணி



SPOKEN ENGLISH
தொழில்புரிவோர், இளைஞர், யுவதிகள், பல்கலை புகுமுக மாணவர்கள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
சனி,ஞாயிறு பயிற்சிநெறி ஆரம்பம் : 04.04.2015
பிரிவு 1 : காலை 08.00-10.00 | பிரிவு 2 : மு.ப 10.00-12.00
பிரிவு 3 : பி.ப 01.00-03.00 | பிரிவு 4 : மாலை 03.00-05.00
இலங்கையெங்கும் 7600 ஆசிரியர்கள், 20000 மாணவர்கள் கற்றுப் பயன்பெற்ற பயிற்சிப்பாசறை.
பயிற்சிநெறி முடிவில் "DIPLOMA CERTIFICATE"
எமது கிளைகள்
சாவகச்சேரி 021 567 41 33
நெல்லியடி 021 3200 607
SAAMSON LANGUAGE SCHOOL
யாழ்நகர்.
077 621 4567
021 320 3313

புத்தி சாதுரியமான மாணவச் செல்வங்களின் மதிநுட்பமான தெரிவு
ஞானோதய அக்கடமி
(சங்கத்தானை, சாவகச்சேரி)
புதிய பிரிவுகள் ஆரம்பம்
A/L 2017
கலை, வர்த்தகம், தொழில்நுட்பப்பிரிவுகள்
ஆரம்பம்: 04.04.2015
சனி - 8.00 am

- தொழில் நுட்பப் பிரிவு செய்முறைப் பயிற்சிகள் மற்றும் பல்லூடக வச திகளுடன் (Multimedia) சிறப்பாக நடைபெறுகின்றது.
- A/L DAY CLASS சிறப்பாக நடை பெறுகின்றது.
- யாழ் மாவட்ட பிரபல ஆசிரியர் களின் ஒருங்கிணைந்த சேவை.

நிர்வாகம்.


## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இளையதம்பி சபாலிங்கம் (முன்னாள் அதிபர்) ஞாபகார்த்த சபாலிங்கம் அரங்கம் கேட்போர் கூடம் திறப்பு விழா - 2015

அமரர் இளையதம்பி சபாலிங்கம் (முன்னாள் அதிபர்) அவர்களின் ஞாபகார்த்தமாக அவரது மகன் வைத் தியக் கலாநிதி சபா. ஜோதிலிங்கம் அவர்களின் நிதி உதவியால் அமைக்கப்பட்ட சபாலிங்கம் அரங்கம் எதிர் வரும் வெள்ளிக்கிழமை (03. 04.2015) அன்று காலை 8 மணிக்கு கல்லூரி அதிபர் தலைமையில் யாழ். இந்துக் கல் லூரி முன்னாள் அதிபர் திரு. ச. பொன்னம்பலம் அவர்க ளால் திறந்து வைக்கப்படவுள்ளது. .

இந்நிகழ்வில் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர், ஆசிரி யர்கள், பழைய மாணவர்கள், திணைக்கள உத்தி யோகத் தர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தினர் அனைவரும் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தந்து விழாவைச் சிறப்பிக்கு மாறு அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி — அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,


KEY 2 NEWS

key 2 news.com க்கு உங்களை அன்புடன் வரவேற்கின்றோம். நீங்கள் எமதுweb side இல் உங்கள் தனிப்பட்ட திறமைகளை வெளிப்படுத்தி சம்பாதிக்க விரும்பினால் உங்களை அன்புடன் வரவேற்கின்றோம்.

எப்படிச் சம்பாதிக்க முடியும்?
உங்களிடமுள்ள தனிப்பட்ட திறைமைகளை உலகெங்கிலுமுள்ள தமிழர்களிடம் எடுத்துக்காட்ட விரும்பினால் நாங்கள் உங்களுக்கென்றே ஒரு webside ஐ உருவாக்கி அதை எமது web side இல் ling செய்து உலகெங்கும் வாழும் தமிழர்கள் எல்லோரையும் பார்க்கும் படி செய்வோம் இதற்கு உங்களுக்கான செலவு 1000/= இல் இருந்து 2000/= விற் குள் ஆகும்.

தனிப்பட்ட திறைமைகள் (உ+ம்)
உங்களால் குறும்படத்தை உருவாக்க முடிந்தால், Music இல் நீங்கள் திறைமை உடையவராக இருந்தால், நீங்கள் தற்காப்புக் கலையில் தேர்ச்சி பெற்றவராக இருந்தால், நீங்கள் பாட்டுப்பாடுவதில் திறமையாக இருந்தால், பரதநாட்டியத்தில் தேர்ச்சிபெற்றவராக இருந்தால், நீங்கள் நடனம் ஆடுவதில் தேர்ச்சி பெற்றவராக இருந்தால், maths, science, english வகுப்பு நடத்துவதில் தேர்ச்சிபெற்றவராக இருந்தால், நீங்கள் video, photo ediding செய்வதில் தேர்ச்சிபெற்றவராக இருந்தால், Cartoon வரைவதில் தேர்ச்சிபெற்றவராக இருந்தால், sound editing செய்யத் தெரிந்தவராக இருந்தால், பலகுரல்களில் பேசத் தெரிந்தவராக இருந்தால், உங்கள் ஊரில் நடக்கும் நிகழ்சிகளை vidio, sound or எழுத்து மூலம் வெளிப்படுத்தத் தெரிந்தவராக இருந்தால், இது மட்டுமன்றி
எங்கள் web side இல் சினிமா படங்களை upload செய்வதன் மூலம் சம்பாதிக்க முடியும், இதற்கு மேலும் உங்களிடம் தனிப்பட்ட திறமைகள் இருந்தால்

தொடர்பு கொள்ளவும்:-021 2262744

my lucky web.com வெறும் முப்பதே நிமிடங்களில் உங்களது கனவு வெப்சைட் அதுவும் மாதம் Rs 499.00/= செலுத்தி நீங்களே டிசைன் பண்ணலாம்.

ஒரு வெப்சைட் ஓடர் எடுத்துத் தந்தால் அதில் 15% கொமிசன் கொடுக்கப்படும்.

EXPONET
Overseas Consultants
www.expogroup.lk
STUDY IN LATVIA
(SCHENGEN VISA)
வேலை வாய்ப்புக்களுடன்
நேரடி அனுமதிகள்
இலவசக் கருத்தரங்கு
யாழ்ப்பாணத்தில்
10-04-2015
VENUE:
EXPONET, JAFFNA
9.30 am - 12.00 pm

மாணவர்களே!
அரிய சந்தர்ப்பம்



- IATVIA அரச பல்கலைக்கழகங்களில் இருந்து வரும் Representative இனை சந்திப்பதன் மூலம் பல்கலைக்கழக அனுமதிகளைப் பெறமுடியும்
- May Intake இற்கான அனுமதிகளை பெற்றுக்கொள்ள விரையுங்கள்.
  எமது அலுவலகத்தில் நடைபெறும் ஆங்கில பரீட்சையில் சித்தி எய்துவதன் மூலம் IELTS இன்றி Visa வினை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.
- IELTS இன்றி உயர்கல்வியைத் தொடருவதற்கான அரிய சந்தர்ப்பம் A/L 3 பாட சித்தியுடன் உங்களுக்கு விரும்பிய கற்கை நெறியை தொடர முடியும்
- schengen Visa (Sehengen Union இல் உள்ள 26 நாடுகளுக்கும் சென்று பணிபுரிய முடியும்.)
- ஒருவருடத்துக்கான கட்டணமாக Rs. 350,000/=

197, Arasady Road, Jaffna , Sri Lanka
Tel : 021 2227230 | 0217538395
Email : nimal@expogroup.lk
Hotline: 071 4150995
LEGAL REPERSENTATIVE FOR RTU (University)


இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.